மெய்ஞ்ஞான மாலை

AUG 1969
270
Q6:417
N68
H0674

திட்டூர்த் தேசிகர்

மெய்ஞ்ஞான மாலை

நூல்:

திட்டூர்த் தேசிகர்

ஈசுவரபாக்கிய ஈசாக்கு.

உரை:

பேராசிரியர், மோசசு பொன்னையா, எம்.ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்,
அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

சீயோன் பதிப்பகம்
பங்கசம் காலனி
மதுரை-9.

முதற் பதிப்பு: ஜூன் 1968

O6:417
N68

விலை: ரூபா. 1.25

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 110674
EGMORE, MADRAS-600 008

அச்சிட்டோர்: டயோசிசன் அச்சகம், ஸி. எஸ். ஐ.,
நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.
3440/2,000/1968.

திட்டுர்த் தேசிகர்
ஈசுவரபாக்கிய ஈசாக்கு அவர்கள்

மறைந்துபோன மாணிக்கம்

மறைந்துபோன ஒரு மாணிக்கத்தின் பெருமையை நினைக்கும்போது மனமானது பேருவகை கொள்ளுகின்றது. இதன் ஒளி, வான் மீனின் ஒளிக்குச் சமமாயினும், நமது கண்ணுக்குத் தெளிவாய்ப் புலப்படாமல் மறைந்து போனது! இதன் ஜோதிப் பிரகாசத்தைக் கண் குளிரக் கண்டவர்கள் மிகவும் சிலரேயாவர். எவரும் இம்மாணிக்கத்தின் புகழை விரித்துரைக்க முன்வராமலிருப்பது வியப்பேயாகும்! ஈசுரபாக்கியம் ஈசாக்கு என நமதேயம் பூண்ட இம்மாணிக்கம், தெக்ஷணக் கிறிஸ்தவ வானில் இலங்கிப் பிரகாசித்த பேரொளியாவார். தமிழ் இலக்கிய இலக்கணங்களைச் செம்மையுறக் கற்ற கிறிஸ்தவர்கள் சிலரில் இவர் முன்னணியில் திகழ்ந்தனர். நிறைந்த வேத அறிவும் சிறந்த தமிழ் ஞானமும், உறுதியான பக்தியும் ஒருங்கு அமைந்ததால், இவரது புகழ் நாடெங்கும் பரவுவதாயிற்று. கிறிஸ்தவ தமிழ்க் கலைகளைச் சுட்டெரித்தும், மற்றும் தமிழ்க் கலைகளைப் புறக்கணித்தும் நாட்கழிக்கும் இக்காலத்தில், பத்தொன்பதாம் சகாப்தத்தின் கிறிஸ்தவத் தமிழ் வாசத்தில் நிலைநின்று அதனைக் கிறிஸ்தவ மக்கள் யாவரும் உணரும்படியாய்ப் பெரிதான தொண்டாற்றிய மகான் இவரேயாவார். இவரது பரந்த புன்சிரிப்பு நிறைந்த முகத்தில், வெள்ளிக்கம்பிகளனைய ரோமங்கள் நீண்டு தாழ்ந்து பரவியதால் இவரைக் கண்ட மாத்திரத்தில் ஒரு கிறிஸ்தவ ரிஷியெனக் கருதியவருமுண்டு.

> 'வலம் புரி புரையும் வால் நரை முடியினர்!
> மாசற விமைக்கும் உருவினர்!
> இகலொடு செற்றம் நீக்கிய மனத்தினர்!
> கற்றோர் யாவரும் அறியா அறிவினர்!'

எனப் புலவர் கூறும் கூற்று, இவரது உடல் நலத்திற்கும், மனோ பெருமைக்கும் பொருந்தியதாகும்.

தமிழ்க் கலைகளில் பெரிய ஆராய்ச்சி செய்தவரென்றும், வைத்தியத்தில் கைதேர்ந்தவரென்றும் இவரைப் பற்றிக் கூறக் கேட்டதும், இவ்வியாசம் எழுதுபவர் இவரைச் சந்திக்கவேண்டுமென்று ஆவலுற்று, இவர் சுவிசேஷப் பணிவிடை செய்துவந்த களியங்காடு கிராமத்

திற்குச் சென்று மிஷன் வீட்டை அடைந்தார். வீட்டுத் திண்ணையில் விரித்திருந்த கற்பகப்பாயில், முன்பக்கம் திறந்து வைத்திருந்த பெரியதோர் காவியத்துடனும், வலதுபக்கத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களுடனும், புத்தகம் நோக்கியவண்ணமாய் இவர் காணப்பட்டார். இவ்வெழுத்தாளர் பக்கத்தில் அணுகி வந்தனம் அளிக்கவே, நிறைந்த புன்னகையுடன் பதில் வந்தனம் அளித்துத் தாம் உட்கார்ந்திருந்த பாயில் அமர்த்திக் குதூகலம் கொண்டார். களியங்காட்டுச் சபையிலுள்ள பழைய மிஷன் வீடு பாக்கியம் பெற்ற வீடு என்றே சொல்லவேண்டும். எங்கு நோக்கினும் தமிழ்க் கலைகளும், வைதீக ஞானமும்! இவர் உட்கார்ந்திருந்த திண்ணையில் காவியங்களும், கலைகளும் புன்னகை கொண்டன! நிறுத்தப்பட்டிருந்த அல்மைருக்களுக்குள் வைதீகக் கலைகள் களிகொண்டன! மேசைகளிலும் ஆசனங்கள் மீதும் பிரபந்தங்களும், பாடல்களும் கூடி வதிந்தன! அச்சிறிய வீட்டில் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பான்மை கண்ணைக் கவர்வதாகவும், கருத்தைப் பிரமிக்கச் செய்வதாகவும், கலை ஞானத்தைப் பெருக்குவதாகவும் இருந்தன!

தமிழில் நல்ல பழக்கமுண்டல்லவாயென்று வினவிய மாத்திரத்தில், தாம் அதிகமாய்ப் போற்றி உவகை கொண்ட 'தேம்பாவணி'யிலிருந்து பின் வரும் கவியைக் கூறினர்.

'பாய்ந்த தேங்கதின் பழங்கள் வீழ்தலால்
வாய்ந்த வாழைமா வருக்கை ஆசினி
சாய்ந்த தீங்கனி சரிந்த தேம்புனல்
தோய்ந்த வாயெல்லாம் இனிமை தோய்ந்தன.'

'தெங்கின் பழங்கள் வீழ்ந்ததால் வாழைக்கனியும், மாங்கனியும், வருக்கைக் கனியும், ஆசினிக் கனியும் சிதைந்து சொரிந்த செந்தேன், இரக்ஷகர் ஜெனித்த திருநாட்டுச் சோலை முழுவதிலும் பாய்ந்து நிரப்பிற்று' என்று பொருளும் கூறி 'ஆ! எவ்வளவு அழகாகக் கூறுகின்றார் வீரமாமுனிவர்' என்று முகமலர்ந்தார். சில நிமிஷங்கள் சென்றதும், 'இக்கவியைப்போல் சிந்தாமணி ஆசிரியர் ஒரு கவி சொல்லுகின்றாரல்லவா? அது தெரியுமா? என வினவினர். பின்னர் நிறைந்த நகையுடன்,

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக்
கமுகி னெற்றிப்
பூமாண்ட தீங்தேன் றொடைகீறி
வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப்
பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற்
றிசைபோய துண்டே

எனக் கூறி முடித்தனர்.

உத்தேசம் முன்னூற்றுக்கு அதிகமான கலைகள் இவர் எழுதியுள்ளார். இவற்றை ஆராய்ந்தெடுத்து அச்சடித்துப் பிரஸித்தம் செய்வது தமிழ்க் கிறிஸ்தவக் கலைக்குப் பேருதவி புரிவதாகும். இவர் எழுதியுள்ள சில பாடல்கள் மாத்திரம் 'தெக்ஷண தீபம்' என்ற தீபிகையில் அச்சிடப்பட்டுள்ளன. அவைகளில், நன் மணியாள், ஜாதிபேதப் பதிகம், ஜீவநாயகத் தூது' உடல் எடுத்த பயன் என்ன, திருப்பள்ளி எழுச்சி, சமுத்திர தீரத் தியானம், மெய்ப் பொருட் பதிகம், வேதப்பதிகம் முதலியன மிக்க அருமை வாய்ந்தவைகளாகும்.

(1936 ஜூின் 'தேசோபகாரி'யிலிருந்து எடுத்தெழுதப்பட்டது.)

CHURCH OF SOUTH INDIA
KANYAKUMARI DIOCESE

RT. REV. I. R. H. GNANADASON, M.A., B.D.,
BISHOP.

NAGERCOIL-1,
SOUTH INDIA,

15-6-1968.

எமது பாட்டனர் திரு. ஈசுவரபாக்கியம் அவர்கள் 1858-ஆம் ஆண்டில் பக்திநிறைந்த ஓர் இந்துக் குடும்பத்தில் பிறந்தார். தமது 2-ஆம் வயதிலேயே தந்தையை இழந்து தம் 5-ஆம் பருவ முதல் தமிழ்க் கல்வி கற்று, 15-ஆம் ஆண்டில் ஆசிரியப்பணி மேற்கொண்டார். தமது 11-ஆம் வயதில் கிறிஸ்துவ சமயத்தால் இழுப்புண்டு, 14-ஆம் ஆண்டில் ஈசாக்கு என்ற கிறிஸ்தவ பெயரையும் தெரிந்துகொண்டு திரு முழுக்குப் பெற்று, 18-ஆம் ஆண்டில் திருச்சபையின் முழு உறுப்பினரானர்.

நாளடைவில் தமிழ்க் கல்வியோடு சமயக் கல்வியையும் சம்பாதித்தார். திருப்பணியில் ஈடுபட்டு எழுத்தாளராகவும், வைத்தியராகவும் திருச்சபையில் பணியாற்றினர். தேசிகர் எனச் சிறப்புப் பெயர் பெற்றுச் சேவை பல புரிந்தார். அவர் எழுதிய நூல்கள் பல; அவற்றுள் இம்மெய்ஞ்ஞான மாலையும் ஒன்று.

57 ஆண்டுகள் திருப்பணியாற்றி ஓய்வெடுத்தபின்னர் தமது 74-ஆம் வயதில், 1932-ஆம் ஆண்டில் காலமானர். அவர் எழுதித் தந்த நூல்களின் வெளியீட்டால் அவரது பணி இன்னுந் தொடர்ந்து நடக்க இறைவன் அருள் தருவாராக.

IRH Gnanadason

அத்தியட்சர்.

உரையாசிரியர் முன்னுரை

தமிழ்க் கிறித்தவ இலக்கிய வானில் இலங்கும் புலவர் பெருமக்களில் கிருட்டினப் பிள்ளை இணையில்லாத இடத்தைப் பெற்றுள்ளார். அவர் காலத்திற்குப் பின்னர், பற்பல கிறித்தவப் புலவர்கள் ஆங்காங்கே தோன்றிப் பற்பல பாக்களையும், நூற்களையும் புனைந்து மறைந்தனர். அவர்களுள் பெரும்பாலானவர்கள் குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். கிறித்தாயனம் பாடிய திரு. சான் பால்மர்; ஆதிநந்தாவனப் பிரளயம், ஆதிநந்தாவனப் பிரளய மீட்சி முதலிய நூல்களைப் பாடிய மறைத்திரு. வேதக்கண்; இந்நூலாசிரியரான திட்டூர்த் தேசிகர் முதலியோர் அவருள் முன்னணியில் நிற்பவராவர்.

நண்பர், திரு. த. இயேசுதாசு அவர்கள் (தமிழ் விரிவுரையாளர், ஸ்காட் கிறித்தவக் கல்லூரி) திட்டூர்த் தேசிகரான ரா. ஈசுவரபாக்கிய ஈசாக்கு அவர்களின் நூல்களிற் சிலவற்றைக் (கையெழுத்துப் படிகள்) சடந்த டிசம்பர்த் திங்களில் எனக்கு அனுப்பினர்கள். அவற்றுள் இம்மெய்ஞ்ஞானமாலையும் ஒன்று. இதனைப் படித்துப்பார்த்த அளவிலேயே அடிக்குறிப்புரையுடன் இதனை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் அரும்பிற்று. பின்னர், குமரி மாவட்ட அத்தியட்சர் அவர்களின் விருப்பத்திற்கிணங்க, அவர்களிடமிருந்த தேசிகர் அவர்களின் ஏனைய நூல்களையும், திரு. இயேசுதாசு அவர்சளிடமிருந்த பிற புலவர்களின் நூல்களையும் நேரிற்பார்ச்துப் படியெடுக்க வேண்டும் என்ற அவாவால் உந்தப்பெற்றேன். அக்கருத்தைத் தெரிவித்த அளவிலேயே, மனமுவந்து பத்து நாட்கள் விடுப்பு ஈந்து ஊக்கிப் பேராதரவு தந்த எங்கள் கல்லூரி முதல்வர், டாக்டர், M. A. தங்கராசு அவர்களின் நல்லெண்ணத்தின் விளைவால் இந்நூல் இவ்வடிவைப் பெற்று வெளிவருகிறது; அவர்களுக்கு யான் என்றும் கடமைப் பட்டுள்ளேன்.

திட்டூர்த் தேசிகர், ரா. ஈசுவர பாக்கிய ஈசாக்கு அவர்கள், குமரி மாவட்டத்தில் கடந்த நூற்றாண்டின் மத்தியிற் பிறந்து, இந்நூற்றாண்டின் முற்பகுதியிற் புலமை நலனும்; பிறநலன்சுளும் பெற்றுத் திகழ்ந்த ஒரு புலவர், இயற்கை நுண்ணறிவும், பரந்த நூலறிவும்,

பட்டறிவும் பெற்றுத் திகழ்ந்த தேசிகர் அவர்களிடம், சமயப் பற்று மேலோங்கி நிற்பது அவர்கள் பாடல் களாற் புலனாகின்றது. தேசிகர் அவர்களின்,

வேதாந்த சாரமே விளம்பக் கேட்பாய்
விசுவாச மேநீதி சாதனம்மிப்
போதாந்த மேவியி யேசு கிறித்தைப்
பூரணமாய் முழுவிரு தயத்தி னேடு
நீதாந்த மத்தியத்த னைகப் பற்றி
நிகழ்த்துலகத் தாரிடையுன் னிமல சாட்சி
வாதாந்த மாக்குமிகத் தாழ்மை பூண்டு
மனங்குருசிற் றறை சுவர்க்கம் வாழுவாயே. 140

எனவும்,

ஆவி யுண்மை யால்வணங்க
வாக்கி யாபித் திருக்குமெய்
ஆவி யான திரித்துவத்தை
அறிந்து போற்ற வல்லீரேல்
ஆவி யான்மங் காயமீரு
மநித்தியம் போய்யென் றும்நல்
ஆவி சீவி கோடிகூடி
ஆனந் தம்பெற் ருள்வீரே. 189

எனவும்,

சீரான விருதுறவுஞ் செப்பக் கேளாய்
தீயபுவி மார்க்கமா சாரம் நீக்கி
நேரான கிறித்துசபை சேர்ந்து நிற்றல்
நிசமான புறத்துறவாம் நெஞ்சிற் றங்கும்
காரான சுயநீதி யறவே விட்டுக்
கருணை நிறை மாதேவ நீதி மேவல்
பேரான வகத்துறவா முண்மை ஞானி
பெறுமகிழ்ச்சி மற்றெவரும் பெற்றிடாரே. 284

எனவும்,

ஞானிகள் இயேசு என்னும்
ஞானத்தை யுடையோ ரென்றும்
மோனிகள் பாவ வார்த்தை
மொழிந்திடார் மிகச்சி றந்த
மானிகள் தீமை விட்டு
மாதுய்ய வழியிற் செல்வோர்
தானிகள் மோட்ச வீட்டைச்
சார்ந்தவர் ஐயம் இன்றே. 257

எனவும்,

அத்து விதத்தை யறியாம
　லையோ! வுலகின் மாக்கள்சிலர்
அத்து விதர்தா மெனவுன்னி
　யகந்தையாற்றும் பிரமமென்பர்
அத்து விதத்தை யறிந்தா
　லவ்வாறு கதைக்கா ரைக்கியமே
அத்து விதமென் றதேதெளிந்
　தமல மார்க்கம் நடப்பாரே. 276

எனவும் அமைந்துள்ள இவையும் பிறவுமான பாமலர்களின் நுகர்ச்சி மெய்ஞ்ஞானமூட்டும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறே, ஏனைப் பாக்களும் கற்பார்க்கு மனத்துயரைப் போக்கி, இறையருள் நல்கி மனத்தை இன்பக்காடாக்கும் நன்மலர்களாகத் திகழ்வது ஊன்றிக் கற்பார்க்குப் புலனாகும்; அதனைக் குறிப்புரை ஓராற்றான் தோற்றி நிற்கின்றது. தேசிகர் அவர்களின் நூல்கள் மிகப்பல. அவையனைத்தும் கையெழுத்துப் படிகளாக உள்ளன. இம்முதல் வெளியீட்டுக்கு மக்கள் தரும் ஆதரவு தேசிகர் அவர்களின் நூல்கள் அனைத்தையும் வெளிக் கொணர்ந்து தமிழகத்தில் தெய்வமணமும் தமிழ் மணமும் ஒருங்கே கமழச் செய்யும் கருவியாம்.

இம்மாலையில் அமைந்துள்ள பாமலர்களை மனனஞ் செய்து, ஏற்ற இடங்களில் எடுத்தாண்டு, இயற்றமிழ் வழக்கிற்கும், இறைவழிபாட்டிற்கும் பயன் கொண்டு இன்புற்றுவாழ இறையருள் கூட்டுவதாக.

மதுரை,　　　　　　　　　　மோசசு பொன்னையா.
15-6-1968.

மெய்ஞ்ஞானமாலை

பாயிரம்

பாயிரம் என்பது நூன்முகம். முகவுரை, பதிகம், அணிந்துரை, புறவுரை, தந்துரை என்பனவும் அதன் வேறு பெயர்களே. அஃது எல்லா நூல்களின் முகத்தும் அமையத்தகும் பொதுப் பாயிரம் எனவும், ஆசிரியர் ஒருவர் உரைக்கும் ஒரு குறிப்பிட்ட நூலுக்கே அமையும் சிறப்புப் பாயிரம் எனவும் இருவகைப்படும். அவற்றுள், சிறப்புப் பாயிரம் அடையின்றிப் பாயிரம் எனவும் வழங்கும். அஃது ஆசிரியரின் பெயர், நூல் வந்த முறை, அது வழங்கற்குரிய எல்லை, நூலின் பெயர், நூல்யாப்பு முறைமை, நூல் உரைக்கும் பொருள், நூலைக் கற்பதற்கு உரியார், நூல் கற்பதால் உண்டாகும் பயன் என்னும் எட்டினையும் விளங்க உணர்த்தி நிற்கும். நன்னூலார்,

> 'ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
> நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
> கேட்போர் பயனே டாயெண் பொருளும்
> வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே'

என்று அதன் இலக்கணத்தைத் தொகுத்துரைத்தார். அவற்றுள், நூல் நுதலிய பொருளைப் பாயிரத்துள் அமைத்துக் கூறுதல் மிகமிக இன்றியமையாதது. பாயிரம் ஆசிரியப்பாவாலும், வெண்பாவாலும் அமைதல்வேண்டும்.

> 'பாயிரத் திலக்கணம் பகருங் காலை
> நூல்நுதல் பொருளைத் தன்னகத் தடக்கி
> ஆசிரிய மானும் வெண்பா வானும்
> மருவிய வகையான் நுவறல் வேண்டும்'

என்ற தொல்காப்பிய உரை நூற்பாவால் அது விளங்கும்.

பாயிரங் கூறாது நூலுரைத்தல் தமிழ் மரபன்று.

'ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே' (நன். 54)

என்பது நன்னூல். இவ்வாசிரியர் காலத்தில் தற்சிறப்புப் பாயிரம் கூறல் மரபாயிருந்தமையின், தம் நூலுக்குத் தாமே பாயிரம் உரைத்தார்.

'வணக்கம் அதிகாரம் என்றிரண்டுஞ் சொல்லச்
சிறப்பென்னும் பாயிர மாம்' (பழஞ்சூத்திரம்)

என்பது மேற்கோள்.

நேரிசை ஆசிரியப்பா

நித்திய கடவு ணீணிலர்க் கினிதருள்
சத்திய வேத தழைநந் தனவனம்
பொருந்திய பொருளாம் பூமனக் கூடையில்
திருந்திய ஆய்வாஞ் செய்கையாற் கொய்தெடுத்
தொப்பறு சிலுவை ஒண்ணிழ லமர்ந்து
தப்பறு நற்றமிழ்ச் சார்பா லினநார்
கொண்டு முடித்துக் குவலயத தெவரும்
கண்டு மேவிக் கதிவழி களிக்கத்
திவ்விய தேவ திருச்சமு கக்கண்
செவ்விய ராகச் சிறக்க வியல்நடை
அஞ்ஞான மான தகன்று மாய
மெய்ஞ்ஞான மாலையென விளங்கு நாமம்
சூட்டிய இந்நூல் தூய ஆவி
ஈட்டிய துணைபெற் றினிது முடிந்த
தாகு மீதனை த தக்கவாறு
வாகு பெறவே மதியா மொய்ம்பில்
வேய்ந்தோ ரதினல் விரையா லூச்கம்
வாய்ந்தோ ராகி மன்னியே சிறைநெறி
முடக்க மின்றி முன்னுக் கேறி
நடக்க லாகும் நாத னருளால்
ஆத லாலிதை அனைவரு முணர்ந்து
நீத னியேசு நீதி யடைந்து
நித்திய சீவ நிலையுறத்
துத்திய பரமனற் றுணையரு ளுகவே.

இனி, சிறப்புப்பாயிர இலக்கணத்துள் இந்நூற்கமைந்த இப்பாயிரத்துள் அமைந்து விளங்குவனவும் பிறவும்:

ஆக்கியோன் பெயர்: திட்டூர் ஈசுவரபாக்கிய ஈசாக்கு தேசிகர் என அறிக.

வழி: 'சத்திய வேத..............இன நார்கொண்டு முடித்து' என்றதனல் இது சத்திய வேதத்தின் வழி நூல் என்க.

எல்லை: 'நற்றமிழ்ச் சார்பால்' என்றதனல், இது வழங்கும் எல்லை தமிழ் மொழி பேசப்படும் இடமெல்லாம் என்பதுரைத்தார்.

நூற்பெயர்: 'மெஞ்ஞான மாலையென விளங்கும் நாமம் சூட்டிய இந்நூல்' என்றதனல் இதன் பெயர் 'மெஞ்ஞானமாலை' என உரைத்தார்.

யாப்பு: தொகுத்தல் விரித்தல் தொகை விரியாக அமைத்தல், மொழிபெயர்த்தல் என்னும் யாப்புவகை நான்கனுள், சத்திய வேதப் பொருளாம் பூத்திரளுள் ஆய்ந்து எடுத்து மனத்திற் சேர்த்துச் சிலுவை நிழலிருந்து தமிழ் யாப்பாம் நார்கெண்டு தொடுத்து மாலை செய்த முறைமையைச் சுட்டிக்காட்டி இது தொகைநூல் என்பதைத் தெளிய உரைத்தார்.

நுதலிய பொருள்: சத்திய வேதம் நுதலிய பொருளாகிய சத்திய சுவிசேடத்தின் சாரமே இந்நூல் நுதலிய பொருளும் என்க.

கேட்போர்: 'தப்பறு நற்றமிழ்ச் சார்பால்' நூல் செய்தது நற்றமிழுணர்ந்தார்க்கு நற்செய்தியுரைக்கும் ஆர்வமிகுதியால் ஆதலின், நற்றமிழ் உணர்ந்தா ரனைவரும் நூல் கேட்பதற் குரியார் என்றும், நற்றமிழுணராதோரும் அறிந்தோர் உரைக்க உணருவராதலின் 'குவலயத் தெவரும், கண்டு மேவிக் கதிவழி களிக்க......இனிது முடிந்தது' என்றார் ஆதலின், மக்களனைவரும் உணர் தற்கு உரியர் என்றும் கொள்க.

பயன்: 'கதி வழி களிக்க'. செவ்வியராக', 'அஞ் ஞானமானது அகன்று மாய', இனிது முடிந்த இந்நூல் உணர்த்தும் பொருளை மேற்கொண்டொழுகின் அதன்

மணத்தால் ஊக்கம்பெற்று வாழ்ந்து, சிறை நெறியாகிய தடை நீங்கி முன்னேறி நடக்கலாகும். அதனோடு, நடுத் தீர்ப்புச்செய்ய வரும் நீதன் இயேசுவினால் நித்திய வாழ்வு நிலைக்குரியர் என்ற தீர்ப்பும் பெறலாம். அதுவே பயன்.

பொருள்

1—15. குவலயத்து எவரும் கண்டு, மேவி, கதி வழி களிக்க, திவ்வியராகச் சிறக்க, அஞ்ஞானமானது அகன்று மாய, மெஞ்ஞானமாலை என விளங்கும் நாமம் சூட்டிய இந்நூல், நித்திய கடவுள் நீள் நிலர்க்கு அருள் சத்திய வேத நந்தனம் பொருந்திய பொருளாம் பூ, ஆய்வாஞ் செங்கையால், மனக்கூடையில் எடுத்து, நற்றமிழ்ச் சார்பால், இன நார்கொண்டு முடித்து, தூய ஆவி ஈட்டிய துணைபெற்று இனிது முடிந்ததாகும் என வினை முடிக்க. வேத நந்தனவனம், பொருளாம்பூ, மனக்கூடை, ஆய்வாஞ்செங்கை என்பன உருவகங்கள்.

1. நித்தியம் — தோற்றம் ஒடுக்கம் இல்லா நிலை. நீள் நிலத்தர் — இம்மாநிலத்தவர். *2.* சத்திய வேதம் — விவிலியம் (Bible). தழை நந்தனவனம் — வினைத்தொகை; எக்காலத்தும் செழித்து விளங்கும் பூந்தோட்டம். *3.* ஆம் (பொருளாம்) — ஆகும் என்றதன் விகாரம். *5.* ஒள் + நிழல் — ஒண்ணிழல். *6.* சார்பால் — மரபு நெறிப்படி. இனநார் — நார்த்தொகுதி; நார் என்றது வெண்பா, ஆசிரியப்பா முதலிய யாப்பு அமைப்புக்களுக்கு உவமை ஆகுபெயராய் அமைந்தது. *8* மேவி - முறைமையிற் பொருந்தி. கதி — மேற்கதி: முத்தி. *9.* திருச்சமுகக்கண் — திருச்சந்நிதியின்கண்; திருமுன். *10.* இயல் நடை — மாந்தருக்கு இயல்பான ஒழுக்கநெறி. **11.** அஞ்ஞானம்—அறியாமை × மெய்ஞ்ஞானம். **14.** ஈட்டிய — திரண்ட, செறிந்த; ஈண்டிய என்பதன் வலித்தல் விகாரம். *16.* வாகுபெற — ஒழுங்காக: அழகுற. மதியா — மதித்து, செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். மொய்ம்பில் வேய்தல் — தோளில் அணிதல்; அதாவது ஏற்று நடத்தல். *17.* விரை — மணம். *18.* சிறைநெறி—அடிமை ஒழுக்கம்; குற்றமுள்ள ஒழுக்கம். *19.* முடக்கம் — தடை. *22.* நீதர் — நடுவர். நீதி — தீர்ப்பு. **24.** துத்தியம் — துதி; புகழ். ஏ—ஈற்றசை,

பாயிரம் முற்றும்.

அவையடக்கம்

அறுசீர் விருத்தம்

ஏரணிந்த கல்வியெனும் அகண்டவுல கியாவையுமோர்
எதிரி யின்றிச்
சீரணிந்த புலற்செங்கோ னெறிசெலுத்தி யாணெடிய
திறற்சான் ருேரே
பேரணிந்த அவையடக்கம் இசைத்தனரால் எளியேனும்
பேசற் பாற்ருே?
நேரணிந்த தகைநலலோர் குறைகழுவிக் குணந்தழுவிக்
காக்க நேரே.

காப்பு

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

நித்திய சீவ வாழ்க்கை நேருமெய் நெறியைக் காட்டும்
சத்திய சுவிசே டத்தின் சாரமெஞ் ஞான மாலை
துத்திய தூய னுற்றுந் துணைநாடித் தொடுக்கக் குன்ருத்
தத்திய திரித்து வத்தேந் தாளிணை தழைத்த காப்பே.

அவையடக்கம்

புலன் செங்கோல் நெறி செலுத்தி ஆள் நெடிய திறல் சான்ருேரே அவையடக்கம் இசைத்தனரால் எளியேனும் பேசற்பாற்ருே? தகை நல்லோர் கழுவி, தழுவி நேரே காக்க என முடிக்க. அகண்ட உலகு—முழுவுலகு. எதிரி—எதிர்க்கும் ஆற்றலுடையார் சீரணிந்த—சிறப்பமைந்த. புலன் செங்கோல் நெறி—புலமை ஆட்சி. ஆள்+நெடிய—ஆணெடிய. பேரணிந்த—புகழ் வாய்ந்த. நேரணிந்த தகை நல்லோர்—நேர்மையமைந்த பண்புடை நல்லோர் கழுவுதல்—நீக்குதல். தழுவுதல்—ஏற்றுக்கொள்ளுதல். நேர்—முறையாகும் ஏகாரம்—ஈற்றசை. இவ்வாறே ஏனைச் செய்யுள்கட்கும் ஈற்றசை பிரித்துணர்ந்து கொள்க. அவையடக்கம் பாடுதல் கவிமரபு.

காப்பு

வழிபடு கடவுள் காக்க என வேண்டிப் பாடுவது காப்பாகும். தமது வழிபடு கடவுளான திரித்துவத்தை

நூல்

நேரிசை வெண்பா

1 அருவ பரிபூர ணனந்தன் றுய்ய
சொருவ மகிமைச் சுதனு—லுருவ
உலக மமைபொருளும் ஒதருமெஞ் ஞானம்
இலக வமைத்தா னிசைந்து.

வேண்டிக் காப்புப் பாடினர். நித்திய சீவ வாழ்க்கை — அழிவில் வாழ்வு. நேரும் — தரும். சத்திய சுவிசேடத்தின் சாரம் — உண்மை நற்செய்தியின் பிழிவு; என்றது, உலகின் தோற்றம். திருக்குமரன் ஈந்த மீட்பு, தூய ஆவியின் நடத்துதல், இனிவரும் நடுத்தீர்ப்பு, நிலைத்த பேரின்ப வாழ்வு பற்றிய செய்தியை. துத்ரிய தூயன் — துதிக்குரிய தூயவனை கடவுள். குன்று, தத்திய, தழைத்த, திருத்துவத் தேம் தாள் இணைகாப்பு என வினை முடிக்க. குன்றுதல் இல்லாத, பொங்கி மிளிர்கின்ற, செழுமைவாய்ந்த திருத்துவத்தின் இனிய தாளிணை காப்பாகுக என்று பொருளுரைக்க. தேம் — மகரம் னகரத்தின் போலி. திரித்துவம் — பிதாவாகவும், திருக்குமரனுகவும், தூய ஆவியாகவும் விளங்கும் கடவுள். கடவுளின் தாளிணை காப்பு என்றது இலக்கணை.

நூல்

1 அருவ பரிபூரணனந்தன் சுதனல் உலகம் அமைபொருளும் ஞானம் இலக இசைந்து அமைத்தான் என முடிக்க. அருவம் × உருவம். பரிபூரண + ஆனந்தன் — பரிபூரணனந்தன். வடமொழிப் புணர்ச்சி; தீர்க்கசந்தி. சொருவம் — வடிவம். சொரூபம் என்பதன் விகாரம். ஓத + அரும் — ஓதரும். விகாரப் புணர்ச்சி; அகரம் விகாரத்தால் தொக்கது. மெஞ்ஞானம் × அஞ்ஞானம்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

2 இசையவே படைத்த மாந்தரிச் சையை யறிவால் வென்று
வசையவே மனதற் றையன் வழுத்துநல் லுரையை மீறி
அசையவே முளைத்த பாவ மகன்றுயக் கருணை மைந்தன்
மிசையவே யவதரித்தல் விளம்புதற் கெட்டா வன்பே.

கட்டளைக் கலித்துறை

3 எட்டாத வன்பே திருவுரு வாகி யெழுந்தருளி
முட்டாத ரட்சிப்பின் முறைமை யீதென் றுரைத்தருளி
தட்டாத மெய்வழி காட்டிவிண் ணேறிய தண்ணளியைக்
கிட்டாத மன்பதை யைம்பலன் போக்கியே கேடுறுமே.

கலிவிருத்தம்

4 கேடு நீங்கக் கிருபைக ளோங்கிட
நாடு யர்ந்தே நலம்பெற்று வாழ்ந்திட
நீடு வாழ்க்கை நிறைபரம் பெற்றிடத்
தேடு மார்க்கந் திரித்துவத் தேவனே.

---

2 படைத்த மாந்தர் வென்று வசைய மனதற்று ஐயன் நல்லுரை மீறி வழுத்து அசைய முளைத்த பாவம் அகன்று உய, கருணை மைந்தன் அவதரித்தல் எட்டா அன்பு என முடிக்க. வசைய — இணங்க. ஐயன் நல்லுரை மீறி வழுத்து அசைய என மாற்றிக் கூட்டுக. வழுத்து — புகழ், துதி அசைதல் — ஓய்தல், சோர்ந்து போதல் உய — ஈடேற; இடைக்குறை விகாரம். ஏகாரம் நான்கும் அசைநிலை.

3 அன்பே உருவாகி, எழுந்தருளி, உரைத்தருளி, மெய்வழிகாட்டி விண்ணேறிய தண்ணளியைக் கிட்டாத மன்பதை ஐம்பலன் போக்கியே கேடுறுமே என முடிக்க.
ஐம்பலன்: தெய்வீக மகிமை, ஞானம், பரிசுத்தம், பாக்கியம், சாவாமை.

4 நிறை பரம் நீடு வாழ்க்கை பெற்றிட என மாற்றிக் கூட்டுக. நிறைபரம்—எல்லாச் செல்வங்களும் நிறைந்த மேலோகம்.

நேரிசை வெண்பா

5 தேவ னொருவன் திரித்துவ னந்தரங்கம்
சீவ மொழிவேதஞ் செப்பற்த—மாவன்
புட.னே யடங்க லுயர்கடனென் றுன்னி
உடனெ குருவடியை யொண்டு.

கொச்சகம்

6 ஒண்ட நலமடைய ஊக்கமுடன் றொண்டியற்ற
அண்ட ரடிபரவு மம்பரன்மேற் கூர்பரிவால்
கண்ட வுலகிற் கனிவுறலை வெல்லதிருத்
தொண்ட ரவையாளாய்ச் சூழ்வர்விசு வாசிகளே.

கலிவிருத்தம்

7 வாசி தாரரணை மற்றுள கன்மங்கள்
பாசி போலகம் பற்றுவெம் பாவநோய்
வீசி டாதுயிர் மீண்டுவிண் சேர்ந்துயற்
காசி யேசைய னற்புத புண்யமே.

---

5 செப்பற்கு அந்தரங்கம் என்பதனைச் செய்யுளின் முதற்கண் கொண்டு கூட்டுக. செப்பற்கு அந்தரங்கம் என்பது உரியாருக்குமட்டும் சொல்லப்படவேண்டிய இரகசியம் அல்லது மறைபொருள் என்றவாறு.

செப்பற்கு அநதரங்கம் தேவன் ஒருவன், திரித்து வன்; சீவமொழி வேதம்: அன்புடனே அடங்கல் உயர் கடன்: உன்னி குருவடியை ஒண்டு என முடித்துக் கொள்க. ஒண்டு — சார்க; சரண்புகுக.

6. (குருவடியை) ஒண்ட நலமடைய, தொண்டியற்ற, அம்பரன்மேல் கூர் பரிவால் உலகில் கனிவுறலை வெல்ல விசுவாசிகள் தொண்டர் அவையாளாய்ச் சூழ்வர் என முடிக்க. அண்டர் அடிபரவும் அம்பரன் — தேவர்கள் தம் திருவடியைப் புகழ வீற்றிருக்கும் வானிறைவன். கூர் பரிவு - நிறை அன்பு. கனிவுறல் - பற்று மிகுதல். திருத்தொண்டரவை — திருச்சபை. சூழ்வர் — மொய்ப் பர்; கூடுவர்.

7. வாசிதாரரணை, மற்றுள கன்மங்கள், பாவநோய் வீசிடாது உயிர் மீண்டு விண்சேர்ந்து உயற்கு இயேசு ஐயன் அற்புத புண்யம் ஆசி என முடிக்க.

நேரிசை வெண்பா

8 புண்ணிய வாளுகப் பூரணமாய்க் கையடைகொள்
கண்ணிய யேசுபரன் காலிணைகள்—நண்ணிய
சுத்தஞ் சுகானந்தஞ் சோதனைமேற் கெம்பீரம்
நித்த முறும்விழிப்பாய் நில்.

9 நில்லென மூவாசை நீக்கவருள் டேடியடி
மெல்லெனவன் பின்வழி மேற்பதித்தே—செல்லெனச்
சொன்ன வுரைமீறேல் சோம்பிக் கிடக்கேல்பார்
மன்னவருஞ் சாகா வரம்.

வாசிதாரணை — இயற்கையாய்ப் பெற்ற இயல்பு. *கன்மங்கள்* — செயலால் விளைந்த தீமைகள். *அகம்* — மனம். *வீசிடுதல்* — அழித்தல்; எறிதல். *மீண்டு விண் சேர்ந்து உயற்கு* — இறைவனிடமிருந்து உடலுட்புகுந்த உயிர் மீண்டும் அவனிடமே (விண்ணில்) சேர்ந்து ஈடேற. *ஆசி* — விரும்பு. *புண்ணியம்* — நற்பலன்.

8. புண்ணியவாளுக, காலிணைகள் கையடைகொள்; (அவ்வாருயின்) சுத்தம், சுகானந்தம், சோதனைமேற் கெம்பீரம் நித்தம் உறும்; (ஆதலின்) விழிப்பாய் நில் என முடிக்க. *பூரணமாய்* — முழுதுமாக. *கண்ணிய* — மேலான. *இயேசுபரன் காலிணைகள் கையடைகொள்* — இயேசுவாகிய கடவுளின் திருவடிகளின் பாதுகாப்புக்கு ஒப்புவி. இயேசு பரன், இருபெயரொட்டுப் பண்புத் தொகை; இயேசுவாகிய பரன் என விரியும். *சுத்தம்* — (மனத்) தூய்மை. சுக + ஆனந்தம் — சுகானந்தம்; வட மொழிப் புணர்ச்சி; தீர்க்கசந்தி. *கெம்பீரம்* — வெற்றி. *நித்தம் உறும்* — ஒவ்வொரு நாளும் நிகழும்.

9. மூவாசை நில்லென நீக்க, அருள் தேடி அன் பின் வழி மேற் பதித்தே மெல்லெனச் செல் எனச் சொன்ன உரை மீறேல்; சோம்பிக் கிடக்கேல்; சாகா வரம் பார் மன்ன வரும் என முடிக்க. *மூவாசை* — மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்பர். *பார் மன்னவரும்* — பூமியில் நிலைத்துவரும். மன்ன எச்சத் திரிபு; மன்னி எனற்பாலது மன்ன என நின்றது.

நிந்தனைகள் யாரையுமே நீசவுரு வம்படங்கள்
வந்தனைகள் செய்யேல் மனதிலெழுஞ்—சிந்தனைகள்
எப்போதும் நன்றாயி ருக்கவிழிப் பாயிருப்பாய்
முப்போதும் போற்று முறைபரனை—இப்போதும்
கூடும் மறுமையிலுங் கொண்டாட்ட முண்டாகும்.
நீடும் விமல நிலைபெறுவாய்—தேடும்
அரிய கிறித்தவ வைம்பவன்கள் மேவிக்
கரிய வலகைக் கபடம்—பெரிய
மலைபோல வந்தாலும் வற்றியு லர்ந்த
இலைபோல வேத மிறையால்—அலைபோல
சூழும் பயங்கரங்கள் சூரியனைக் காணிமமாம்
வீழும் உடற்கிரியை மெய்யுள்—ஏழும்
துவமுஞ் செழிக்குஞ் சுகமே கதிக்கும்
பவமுந் தொடர்பழியும் பாழாம்—அவமும்
நடக்கப் பதமிலதால் நாணி நரகில்
மடக்க மகிமை வரும்.

செய் என்னும் வாய்பாட்டு வினைப்பொருளில்வந்தன; எனவே அடங்கு, விழிப்பாயிரு எனப் பொருணர்த்தி நின்றன. மயர்வு—மயக்கம். 6. ஆவலாகும் முடக்கவழி செல்லாதே—ஆவலாகிய கோணல்வழியே செல்லாதே. 8. கல்விமதம்—மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை. கல்வியால் உண்டாகும் மதம் என விரியும். மதம்—செருக்கு. 9. நீசவுருவம் படங்கள்—உம்மைத்தொகை; நீச உருவமும் படங்களும் என விரியும். 10. வந்தனை-வணக்கம். 12. பரனை முப்போதும் முறை போற்று என மாற்றிக் கூட்டுக. 12. இப்போது-இம்மை. 14. விமலநிலை—தூயநிலை. 15 செய்யுள் 3. குறிப்புரை பார்க்க. 16. அலகை—பேய். வகரம் உடம்படுமெய். 18. இலைபோல் ஏகும். 19. இமம்—பனி. 20. உடற்கிரியை மெய்யுள் வீழும் என முடிக்க. வீழும்—ஒடுங்கும். 21 ஏழும் துவமும்—ஏழும் இரண்டும்; ஆவியின் கனிகளான அன்பு, சந்தோசம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்ற ஒன்பதுமே அவை. கதிக்கும்—மிகும். 22. பவம் பாவம். அவம் வீண் ஆடம்பரம். 23. பதம—பாதம் என்பதின் குறுக்கல் விகாரம். மடக்க—மடங்க, தொடை நோக்கி வலித்தது; ஒடுங்க என்பது பொருள். 24. மகிமை—மேன்மை, மேம்பாடு,

கட்டளைக் கலித்துறை

13 வருமா வொருகற் சிலைக்குப
தேசம்விழைந்து வைத்தும்
தருமா முளைமழை யோயாம
லோட்டின்மேற் றுன்பொழிந்தும்
பெருமா துரியம் பிறக்கநற்
போதனை பேசிடினும்
குருமா கிறித்தரு ளிலலார்
திருத்தங் கொளலரிதே.

எண்சீர் ஆசிரிய விருத்தம்

14 அரிதான சுவிசேட வுபதே சப்பால்
ஆச்சரிய சொற்புரியுந் தூய வாவிப்
பெரிதான வுதவிபெற் றூட்டுங் காலே
பேதைமையிற் கிடக்கு மனுச்சிசுக்கண் மீளும்
கரிதான பவமுடா ணவங்க ளோடும்
கைகூடும் பரிசுத்த சீவி யம்மே
பரிதான மேலோக வினப மேவ
பாவமனந் திரும்பு வதேதகுதி தானே.

---

13 குருமா கிறித்து அருள் இல்லார், உபதேசம் விழைந்து வைத்தும், பொழிந்தும், பேசிடினும் திருத்தங் கொளல் அரிது என முடிக்க. வருடம்— வருடக்கணக் காக. மாதுரியம்— புத்தி நுட்பம், இனிமை. திருத்தம் கொளல்—தீர்வு காணல். கிறித்துவின் அருளில்லாமல் வெறும் சடங்குகளால் மனந்திரும்புதல் அரிது என்றவாறு.

14 சுவிசேடப்பால் தூய ஆவி உதவிபெற்று ஊட் டுங்கால் மனுச் சிசுக்கள் மீளும், ஆணவங்கள் ஓடும், பரிசுத்த சீவியம் கைகூடுமே என முடிக்க அரிதான— பலருக்கு மேற்கொண்டொழுகற்கு அரியது என்று காணப்படுகிற. சுவிசேட உபதேசப்பால்—உருவகம். பேதைமை—'இயல் நடை அஞ்ஞான, (பாயிரம்) மாகிய அறியாமை. பாவம் மூடு ஆணவம். மூடாணவம்—விளைத் தொகை. ஆணவம்—செருக்கு. பரிது—மிகப் பெரிது. மேலோகம் (கலவைச்சொல்) மே+லோகம். மே மேம் பாடு (தமிழ்) லோகம்—உலகம் (ஆரியம்) பாவமனம்— பாவ நெறிக்கண் சென்ற மனம். திரும்புவதே—ஏகா ரம் தேற்றப்பொருளது. தானே—தான்+ஏ; அசை நிலைகள்.

நேரிசை வெண்பா

15 தானே புரிபவங்கள் சாமுன் றவிர்ந்தமலன்
வானே சிறையான் மருவாதார்—கோனே
சிறைசெய் விதியடைந்து தீநர காழ்வார்
முறைசெய் மரணவரு முன்.

கொச்சகம்

16 முன்னே யறியாமன் மூர்க்கப்பி சாசுடைய
பின்னே திரிந்தே பெரும்பாத கம்புரிந்தாய்
இன்னே மனந்திரும்ப எம்பெருமா னேவுநலை
உன்னே பொருந்தேநீ யொண்டேயல் லால்வெட்டையே.

கலிவிருத்தம்

17 வெட்டை வெளியடா! வேறெது மில்லையடா!
வெட்டை வெளியடா! மெய்த்தசங் குணியடா!
வெட்டை வெளியடா! விளங்கெண் செயலடா!
வெட்டை வெளியடா! மிகுபரி வுறுமடா!

---

15. அமலன் வான் ஏசு இறையால் தானே புரிபவங்கள் சாமுன் தவிர்ந்து மருவாதார் என முடிக்க. தானே புரிபவங்கள்— இயல்பாயமைந்த பாவங்களின்று வேறுபட்டு ஒருவன் தானே செய்பாவங்கள் எனச்சிறப்பித்து உணர்த்த ஒருமையால்தானே என்றார். அமலன்—இறைவன். மருவுதல் கூடுதல், அடைதல். கோன் ஏசு இறை செய் விதி அடைந்து எனப் பிரிக்க. விதி ஆகுபெயராய்த் நடுத்தீர்ப்பைக் குறித்தது. தீநரகு—இருபெயரொட்டுப் பண்புத்தொகை. தீயாகிய நரகு என விரியும். முறைசெய்—இறை அருள் நெறிப்படு. மரணம் வருமுன் எனற்பாலது செய்யுள் விகாரப்பட்டு மரணவருமுன் என நின்றது.

16 ஏவுதல்—ஆணை. உன்னே, பொருந்தே, ஒண்டே.—உன்னு பொருந்து, ஒண்டு ஏகாரங்கள் அசை நிலைகள். வெட்டை—வெறுமை.

17 மெய்த்தசம்—உண்மை ஆணை பத்து (கற்பனைகள்). குணி—ஏற்றுநட. எண் செயல்—செய்யுள் 116 ல் காண்க. பரிவு—அன்பு. அடா எல்லாம் அசை நிலைகள்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

18 உறுமடா வகில மெல்லா
மொன்றினு மடங்கா தன்பு
பெறுமடா வறிவா தீதப்
பெரும்பொருள் சுயத்திற் றாணாய்
அறுமடா அருளா னோர்க்கே
யருண்மறை வெளிச்சம் போட
இறுமடா வகத்தார் மங்குல்
இன்ப வவ்வேதங் கல்லே.

நேரிசை வெண்பா

19 கல்லே னிறைமகிமை காண்டாத வெந்நூலும்
நில்லே னவற்றை நிகழ்த்தவையுள்—எல்லே
இருக்கவே யப்பிரகத் தின்மினுக்கம் யார்தான்
பெருக்கமெனச் சேருவார் பேசு.

---

18 அவ் இன்ப வேதங்கள், ஒன்றினுமடங்காத அகிலமெல்லாம் உறும் அறிவு அதீதப் பெரும்பொருள், அன்பு பெறும், சுயத்திற்காணாய், அருளானோர்க்கு அறும். அருள்மறை வெளிச்சம்போட அகத்தார் மங்குல் இறும் என்று முடிக்க.

அறிவு அதீதப் பெரும் பொருள் அன்பு பெறும்—அறிவைக்கடந்த பெரும் பொருளான அன்பு பெறப் படும். அறிவதீதம்—வடமொழிப் புணர்ச்சி. அதீதம்—கடத்தல். பெறும்—செய்வினை செயப்பாட்டு வினைப் பொருளில் வந்தது. காணாய், எதிர்மறை முன்னிலை வினை. அருளானோர்—இறைவன் அருள்பெற்று அருள் மயமானோர்; வினையாலணையும் பெயர். மறை வெளிச்சம் போட-மறைவெளிச்சம் ஏற்ற. அகத்தார்—வீட்டிலுள்ளார். வீட்டிலே மறையாகிய வேத வெளிச்சத்தை ஏற்றிவைத்தால் வீட்டிலுள்ளாரின் அஞ்ஞான இருள் அழியும் என்றவாறு. மங்குல்—அஞ்ஞான இருள். இறும்—அழியும்.

19 இறை மகிமை காட்டாத எந்நூலும் கல்லேன். அவற்றை நிகழ்த்தும் அவையுள் நில்லேன்; எல் இருக்க அப்பிரகத்தின் மினுக்கம் யார்தான் பெருக்கமெனச் செய்வார்? பேசு. என முடிக்க. நிகழ்த்துதல்—விரித்துரைத்தல். எல்—ஒளி; ஞாயிறும் ஆம். அப்பிரகம்—காக்காய்ப் பொன். இதன் கண்முன் கூறிவைத்த பொருளை

20 பேசுவது ஞானம் பிசாசுபாச னுமூர்த்தி
கூசுவது மில்லிவர்தங் கொள்கையென்னே?—ஏசுவதும்
தம்மியற்கை யாய்க்கொண்டார் தற்பரனைப் போற்றார்பின்
விம்மியழு தென்கொல் விளம்பு.

21 விளம்ப வரியதிரு வேதாந்தஞ் சற்றும்
தளம்ப லடுக்காமற் சாற்றும்—களங்கமறு
மெய்விசுவா சத்தை விடுத்தெவரோ ரட்சைபெற்
றுய்குவர் கூடாதென் றோது.

22 ஓது மிரண்டுண்மை யுற்றவேற் பாடுநரர்
தீது கொலைக்குந் திவியனை—மாது
குலத்தில் வருவானிக் கோவந்தா னென்றிந்
நிலத்திற் பறைசாற்று நேர்.

உறுதிப்படுத்தற்கு மற்றொரு பொருளைப் பின் கூறி யமைப்பதாகிய **வேற்றுப்பொருள் வைப்பணி** அமைந்துள்ளமை காண்க.

20 உபாசனை + மூர்த்தி — உபாசனமூர்த்தி — வடமொழிப்புணர்ச்சி, வழிபடு கடவுள். இல்லிவர் தம் கொள்கை — மண வாழ்க்கை மேற்கொண்டாரது கொள்கை. இச்செய்யுள் 'பேசுவது மானம் இடை பேணுவது காமம்' என்ற கம்பர் செய்யுளை நினைவுக்குக் கொண்டுவருகிறது.

21 வேதாந்தம் தளம்பல் அடுக்காமல் சாற்றும் களங்கமறு மெய் விசுவாசத்தை விடுத்து எவரோ ரட்சைபெற்று உய்குவர்? கூடாது என்று ஓது என முடிக்க. வேத + அந்தம்—வேதாந்தம்; வடமொழிப் புணர்ச்சி. வேதத்தின் முடிவு எனப் பொருள்படும். தளம்புதல் அடுக்காமல்—மலைவு பொருந்தாமல்; மயக்கமின்றி; தெளிவாக.

22 ஓதும் உண்மையுற்ற இரண்டு ஏற்பாடு நரர் தீது கொலைக்கும் திவியனை, மாதுகுலத்தில் வருவான். இக்கோ வந்தான் என்று இந்நிலத்தில் நேர் பறை சாற்று என முடிக்க. கொலைத்தல்—அழித்தல், கெடுத்தல். திவியன்—திவ்வியன் என்பதன் விகாரம். இது மெய்விசுவாசம் (21).

23 நேரான மார்க்க நெறிபிசகிக் குத்திருளில்
சீரான சிந்தையற்றுச் செல்லுவோர்—பேரான
பொன்னுலகம் போகார் புழுநெருப்பும் வாதனைசெய்
துன்னுலகம் வீழ்வார் துயர்.

24 துயர மகற்றிச் சுகமளிக்க வந்தோன்
பெயர திலங்கப் பெரிதாய்—அயரா
முயற்சி யனுதினமு முக்கியமாய்ச் செய்வாய்
உயற்சி யுனக்குண்மை உண்டு.

25 உண்மை துலங்க வொழுகிற் பரமசபை
வெண்மை யுடைபெறுவாய் மெய்யாகத்—திண்மைப்
புயனேசு நீதி பொருந்தினர்க்கென் றெங்கும்
பயமேது போமே பவம்.

வஞ்சித்துறை

26 பவமே பயனிழி
அவமே யறுந்தகல்
தவமே தருங்கனி
நவமே நாளுமே.

---

23 குத்திருள்—செறிஇருள். வாதனை — துன்பம். புழு நெருப்பும் வாதனை செய் துயர் துன்னுலகம் வீழ்வார் என முடிக்க; என்றது நரகு புகுவார் என்றவாறு. துன்னுலகம்—கெடுவுலகம், நரகம்; துன்மதி என்பது போலக் கொள்க.

24 பெயரது பெரிதாய் இலங்க என முடிக்க. சுகம்—இன்பம், நலம். இலங்க—விளங்க. உயற்சி—உயர்ச்சி என்பதின் விகாரம்.

25 துலங்க—விளங்க. பரமசபை—பரலோக பத்தரவை. வெண்மையுடை—வெள்ளாடை, வெள்ளங்கி. நீதி பொருந்துதல்—நீதி நெறிநிற்றல். போம்—போகும் என்பதன் இடைக்குறை விகாரம்.

26 நாளும் பவம் பயன் இழி, அவம் அறிந்து அகல், தவம் நவகனி தரும் என முடிக்க. இழி- இழிவு. முதனிலைப்பெயர். அவம்—வீண் ஆரவாரம். தவம்—நில்லென மூவாசை நீக்குதல் (9). ஏகாரங்கள் அசைநிலை.

நேரிசை வெண்பா

27 நாளு மறைவாசி நன்குதியா னித்திறைஞ்சு
மூளு மனலாவி முற்றுறும்—நீளும்
கடவுண் மகிமை கருத்துடன் றேடு
மடவுண் மசிந்தடையும் மாண்பு.

28 மாண்பு பயைன்னிப்பு மாதூய்மை மேவலன்றிக்
காண்பு முளதோவிக் காசினியில்—பூண்பு
நிறைந்த மனத்தாழ்மை நிச்சயம் பற்றுர்
குறைந்த விசுவாசர் கூறு.

கலி விருத்தம்

29 கூறு மொருநான்கு குறைய வோரெழுபான்
தேறு பரனீந்த திவ்விய வாகமங்கள்
வேறு படலின்றி விளம்பு முயர்ஞானம்
வீறு தணித்துலகை மேன்மை செயும்வழியே.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

30 வழியைக் காட்டிப் பரமவீட்டில்
வாழ வைக்குஞ் சற்குரு
மொழியை மாற்றி யாணவங்கண்
மொய்த்த வுலகப் பாதைபோய்ப்
பழியைக் கூட்டிச் சாபமேற்றுப்
பாழே நரகத் தாழாயல்
விழியைத் திறந்தொ முகவுதவும்
வேத போதந் தரிப்பையே.

---

27 மட—மடம், அறியாமை, கடைக்குறைவிகாரம். மசிதல்—அழிதல். மாண்பு—மேன்மை, மாட்சிமை, மேம்பாடு. நாளும் மறைவாசி, தியானி, இறைஞ்சு அனலாவி முற்றுறும்; நீளும் கடவுள் மகிமை கருத்துடன் தேடு, மட உள் மசிந்து மாண்பு வந்தடையும் என முடிக்க.

28 காண்பு—காணத்தக்கது பூண்பு-பூணத்தக்கது.

29 முன்னிரண்டு அடிகளும் 66 ஆகமங்களைச் சுட்டின. வேறுபடலின்றி வீறு தணித்து உலகை மேன்மை செயும் உயர் ஞானவழி விளம்பும் என முடிக்க. வீறு—வீருப்பு.

30 சற்குரு—நற்குரு; போதம்—அறிவு.

31 தரித்தென் மாயு மனிதஞானஞ்
சாகும் போதைக் குதவுமோ?
பிரித்தென்? இயேசு கிறித்துபாதப்
பிடியில் லாமல் மனதினைச்
சிரித்தென்? பாவமன் னிப்பாகார்
சினத்திற் கதறி யழுவரே.
கரித்தென்? நாளைபவத் துககின்று
கண்ணீர் சிந்தார் மோசமே.

32 மோசம் பின்னுண் டாமென்றோதும்
உண்மைப் போத மாயினும்
நீசம் புரிந்த வீனத்தேவர்
நேயம் அணுவும் நீக்காமல்
நாசஞ் சூழும் வழியில்
நிற்றல் ஞாயமோவொன் றும்பரன்
பாச முண்ணின் றூறிப்பாயப்
பத்தி தேறிப் பிழைப்பையே.

பஃறொடை வெண்பா

33 பிழைக்க வுனக்குப் பிரியமா? கேட்டி
தழைகக வுனையாள் தயாவுள்—உழைக்கவே

---

31 மாயும் மனித ஞானம் தரித்து என் சாகும் போதைக்கு உதவுமோ என மாற்றிக் கூட்டுக. பிரித்து—மனித ஞானத்தினின்று பிரித்து. கிறித்து பாதப்பிடி இல்லாமல் மனதினைச் சிரித்து என்? பாவமன்னிப்பாகார்—பாவம் மன்னிக்கப்படாதார். கரித்தல்—வெறுத்தல். செய்த பாவமன்னிப்பு அடையாதார் கரித்து என்? நாளை பாவத்திற்கு, இன்று கண்ணீர் சிந்தாதார் மோசமடைவர் என்றவாறு.

32 மோசம் பின் உண்டாம் என்று உண்மைப் போதம் ஓதும்; ஆயினும் நீசம் புரிந்த ஈனத் தேவர் நேயம் அணுவும் நீக்காமல், நாசஞ்சூழும் வழியில் நிற்றல் ஞாயமா? ஒன்றும் பரமன் பாசம் உள்நின்று ஊறிப்பாய பத்தி தேறிப் பிழைப்பையே எனப் பிரித்துக் கூட்டி உரைக்க. நீசம் இழிவு. ஈனம்—கீழ் ஞாயமா—நியாயமா என்பதன் மரூஉ. ஒன்றும் பரமன் திரித்துவமான ஒரே கடவுள்.

33 தழைக்க—(நீ) செழிக்க. உனை ஆள்தாயா உள்

சேருவாய் நல்லாவி செய்துணையால் மெய்ஞ்ஞானம்
நேருவாய் நெஞ்சம் நிருமலமாம்—கூடுவாய்
அன்பு விசுவாச மாச்சரிய நம்பிக்கை
துன்பு மடங்கத் துளங்குமோர்ப்பு—இன்பு
பெருகு மறுபிறப் பெய்தத்தான் முற்றும்
அருகு மநித்தியசக் தோடம்—உருகும்
மனது திருப்புகழை வாய்கூறு முள்ளம்
தனது மகிமைக்காய்ச் சாடா—தெனது
பொருளென் னுலோபமறும் போக்கிலார்க் கீதல்
தெருளென் பதிற்றேறல் சேரும்—மருளென்
பதுமுற்று மாய மனமாதி பாவர்
கதுமுற்றுக் காதல் கரியும்—எதுமுற்றும்
வாழு மவனி வளர்நீர்க் குமிழியெனச்
சூழு நினைவாற் சுமைகுறையும்—பேழும்
ஒழியுமே யுள்ளக்கண் ணெண்டாழ்மை தங்கி
வழியுமே யார்வநதி மாசுங்—கழியுமே
செய்கையிலே யெப்பவமுந் தீர்க்குந் திருக்குருதி
பொய்கையிலே யாடியகம் பூரித்தும்—உய்கையிலே
ஆண்டோன் மகிமைதனை யாவலொடு தேடிநிதம்
மீண்டோன் வலியை விளம்புவரம்—பூண்டோன்
எனவிளங்கி நன்மை யியற்றியா னந்த
மெனவிளங்கித் தீரவவை மாய்.

உழைக்கவே சேருவாய்—உன்னை ஆளும் கடவுள் அருள் உள்ளிடத்திலே சேருவாயாக. உழை—இடம். நெஞ்சம் நிருமலமாம் — மனந்தூய்மையடையும். மலம் — அழுக்கு. துளங்குமோர் — வருந்துவோர். சாடுதல் — விரைந்து சேருதல். லோபம் — உலோபம், கடும்பற்றுள்ளம். தெருள் — அறிவுடைமை; தெருள் × மருள். தேறல்—தேறுதல், துணிதல். மனமாதிபாவர்—மனம்முதலிய பாவக்கருவிகள். பண்புகளைப் பண்பிகளாக் கூறினார். கதுமுற்று—பிளந்து. காதல்—பற்றுள்ளம். பேழ் — பெருமை. உள்ளக்கண் — உள்ளத்தில். ஆடி — நீராடி. உய்கை—மீட்பு. ஆண்டோன் — ஆண்டவன், கடவுள். ஆனந்தமென விளங்கி — ஆனந்த மயமாகி. அவை — முன் ஆட்கொண்ட தீக்குணங்கள். தீர—கெட. மாய்—இறந்துபடு. இதனால், நீ பிழைக்க மாய்வாயாக என்று கூறி; மறுபிறப்பை விளக்கிக் கூறியுள்ளமை காண்க.

எண்சீர் ஆசிரிய விருத்தம்

34 திரமான வன்புக் கோராறு தன்மை
சேருமே மாயமின்மை களங்க மின்மை
மரமான தற்பொழிவில் லாமை யோடு
பகர்கிரியை யுடைமைமன் னிப்புச் செய்தல்
உரமான வனுதாபப் படுத லாகும்
உரைக்குமிந்த மெய்ப்பரிவுக் காதி மூலச்
சிரமான திறைநேய மஃதி னின்றே
செனித்ததீ துளனேதே வனைக்கண் டோனே

அறுசீர் ஆசிரிய விருத்தம்

35 கண்டான் கண்டா னென்னபலன்?
கடவுள் கண்டால் கண்டபலன்;
விண்டான் விண்டா னென்னபலன்?
வேதம் விண்டால் விண்டபலன்;
கொண்டான் கொண்டா னென்னபலன்?
குணமே கொண்டாற் கொண்டபலன்;
உண்டான் உண்டா னென்னபலன்?
உயிரே சுண்டா லுண்டபலன்.

வேறு

36 பலன்பெறு வழிநம் இயேசு
பற்றுநீ சுவர்க்கஞ் சேர்வாய்
பொலன்பெறு தடமற் றெல்லாம்
புலம்புவாய் சென்ருனாளை

---

34 அன்புக்கோர் ஆறுதன்மை; மாயமின்மை, களங்கமின்மை, தற்பொழிவில்லாமை, கிரியையுடைமை, மன்னிப்புச் செய்தல், அனுதாபப்படுதலாகும். இம் மெய்ப்பரிவுக்கு ஆதிமூலச் சிரமானது இறைநேயம்; அஃதின் நின்றே செனித்தது இது. ஈதுளனே தேவனைக் கண்டோனே என முடிக்க. சிரம்—தலை நேயம்—அன்பு. செனித்தல்—பிறத்தல்.

35 கடவுளைக்காண்டல், வேதம் விண்டல் (விள்தல்=சொல்லுதல்) குணம் கொள்ளுதல், உயிர் இயேசுவை உண்டல் இவையே பயனுடைய செயல்கள்.

36 பொலன்—பொன்(பொருள்). தடம்—வழி; சுவடு. சென்ருல் நாளை புலம்புவாய் எனமாற்றிக் கூட்டுக. புலன் பெறுமுடம்—மனத்திற் பொருந்திய அறிவீனம்.

புலன்பெறு மூடங் தீரப்
பொருந்தருள்செ பத்தின் மூலம்
நலன்பெறு சூட்சஞ் சொன்னேன்
நமபிமூ வாசை வெல்லே.

நேரிசை வெண்பா

37 மூவாசைக் காடெரித்து முத்திவிக்கி னம்மூன்றும்
தேவாசை யாலே செயிதது வரும்—பாவாசை
வித்தாஞ் சுயநீதி விட்டேசு கானந்த
சித்தா மிறைநீதி சேர்.

கட்டளைக் கலித்துறை

38 நீதி தவறிய மன்பதை மாதயை நிட்களங்கச்
சோதி கிறித்து விசுவாசத் தாற்பவ தோடமற்று
வாதி திகைக்கப் பரமண் டலப்பதி வாழ்வடைய
ஆதி பரமபி தாகாட்டு மாவன் பதிசயமே.

39 சயமே யளிக்குஞ் சிலுவை
நிழற்கண் தரித்திருந்து
பயமே யகற்றிக்கண் ணுன்குகொண்
டாடியாற் பார்க்கையிலே

புலன் ஆகுபெயராகப் பொறிக்காயிற்று. புலன்பெறு மூடந்தீர அருள் பொருந்து செபத்தின் மூலம் நலம் பெறு. நம்பி மூவாசைவெல், சூட்சம் சொன்னேன் என முடிக்க. சூட்சம்—நுண்கருவி, நுண்மை; சுட்சுமம் என்பதின் மரூஉ.

37 மூவசை—மண், பெண், பொன்னாசைகள். விக்கினம்—இடையூறு முத்தி விக்கினம் மூன்று--காமம், வெகுளி மயக்கம். சுகானந்த சித்தாம் இறைநீதி சேர் என முடிக்க. சுகம்+ஆனந்தம்—சுகானந்தம். சித்து—அறிவு.

38 மா தயை நிட்களங்கச் சோதி கிறித்து விசுவாசத்தால் நீதி தவறிய மன்பதை பவதோட மற்று வாதி திகைக்கப் பரமண்டலப் பதி வாழ்வு அடைய ஆதி பரம பிதா காட்டும் மா அன்பு அதிசயமே எனக்கூட்டுக. நிட்களங்க—குற்றமற்ற; நிர்களங்கம் எனப்பாலது நிட்களங்கம் என விகாரப்பட்டு நின்றது. தோடம்—குற்றம் வாதி—எதிரி, இங்கே பசாசு.

நயமே புரிய வழிவகை
காண்கு நலஞ்செயன்பு
மயமே பரனையுங் காணகலா
மானந்தம் வாய்த்திடுமே.

நேரிசை வெண்பா

40 இடுகாடு போமுடலை யேன்பவத்துக் கேதாய்
அடுகாடு கொண்டு கொழுப்பாக்கிப்—படுகாடு
செல்லாமற் சிற்றின்பத தீவிளை யாடுகின்றாய்
நில்லாமற் செல்லுயிர்நா ணீ.

41 நீயே யுனக்கு நெடிய பகைவனறி
நீயே யுறவனையு னீதுபெற்றால்—நீயே
உனக்கு விடமா யுயிரைக் கெடுக்கேல்
கனக்கு மறமயர்நீக் கேல்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

42 நீக்கல் செய்வாய் விசுவாசத்தா
னீசெய் பாவத்துடக் கெலாம்

---

39 சயம்—வெற்றி. நிழற்கண்—நிழலிலே. கண் நான்கு செய்யுள் 45 உரை நயம்—அருள், பார்க்க. நன்மை.

40 ஏது—காரணம். அடுகாடு—உணவுப்பிண்டம் (காடு—பெருக்கம்). கொழுப்பாக்கி கொழுவியதாக்கி படுகாடு—சேரவேண்டிய இடம்; பொருந்த வேண்டிய இடம். சிற்றின்பமாகிய தீ என்க. நில்லாமல் நாள் செல் உயிர்; நீ இடுகாடு போம் உடலை ஏன் கொழுப்பாக்கி, தீ விளையாடுகின்றாய் என முடிக்க. உயிரை வேறு நிறுத்தி அதற்கு உரைப்பதாக அமைந்தது இச் செய்யுள்

41 நெடிய பகைவன்—பெரும் பகைவன். நீயே பகைவன் அறி, நீயே உறவு. இது மனித உடலின் தன்மையைச் சுட்டிற்று. அனைய நீதி பெற்றால்—அத்தகைய தீர்ப்பு இறைவனால் பெற்றால், உயிரை நீக்கும் வினை வழிநின்று அதனை நீக்காதே. கனக்கும் மறம் அயர்—பாவம் பாரமானது, அதனைமற. உடலை வேறு நிறுத்தி அதற்கு உரைப் தாக அமைந்தது இச்செய்யுள்.

42 விசுவாசத்தால் நீ செய் பாவத் துடக்கு எல்லாம் நீக்கல் செய்வாய்; தலைவன் ஏசு தாக்கல் செய்யும் கடி துற்சென்னி மித்தனன் ஆக்கல் ஊட்டி அணைத்து

தாக்கல் செய்யுங் கடிதுற்
சென்னி தலைவனேசு மிதித்தனன்
ஆக்கல் ஊட்டி யணைத்தி
ரட்சை யாக்கலாதி யவன்செயல்
தேக்கல் செய்வா னன்மையாவுஞ்
சிந்தை சிலுவை ப்திப்பையே.

வேறு

43 பதிப்பையேல் சிலுவை யிற்கண்
பகவனன் புடனே தோன்றும்
துதிப்பையேல் புதிய நன்மை
சோடுசோ டாகச் சேரும்
மதிப்பையேல் அகலா துன்னுள்
மாபரன் வசிப்பா னீயும்
வதிப்பையேல் அவனுண் மோட்சம்
மருவுவதுறுதி தானே.

44 உறுதியாய் அடியே னென்னை
ஒருதினந் தனித்துக் கூட்டிப்
பொறுதியாய்க் கிருபைச் செட்டை
பொருந்திய நிழலான் மூடி
அறுதியாய்ச் சொன்ன னையன்
அகல்சுய நீதி யென்றே
இறுதியாய்க் கண்டேன் வேதத்
திலங்கரும் பொருட்கெல் லாமே.

இரட்சை ஆக்கல் அதி அவன் செயல் நன்மை எல்லாம் தேக்கல் செய்வான்; சிந்தை சிலுவை பதிப்பையே என வினைமுடிக்க. தாக்கல் செய்தல் தாக்குதல் தேக்கல்—தடுத்தல். கடி - விடமுள்ள. துன்—கெட்ட. சென்னி—பசாசின் தலை. ஆக்கல்—ஆக்கம்.

43 சோடு—இரட்டை. அவனுள் வதிப்பையேல்—அவனுள் தங்குவாய் என்றால்.

44 இது முதல் தம் அனுபவமுரைக்கின்றார். அறுதியாய்—முடிவாய் அணைத்து 'சுயநீதி அகல்' என்றே ஐயன் அறுதியாய்ச் சொன்னான் என்க வேதத்து இலங்கு அரும் பொருட்கெல்லாம் இறுதியாய் அவனைக் கண்டேன் என ஒரு சொல் வருவிக்க.

45 இலங்கிய மெய்வே தாந்த
எழிற்பொருள் விளக்கித் தேவன்
கலங்கிய வென்னைத் தேற்றிக்
கண்ணொரு நாலு நல்கித்
துலங்கிய தெய்வ நீதிச்
சுந்தர மடையச் செய்து
மலங்கிய நரருக் கோதும்
வரங்களு மருளி னுனே.

46 அருளினுன் கருமத் தாலே
அகஞ்சுசி யாகா தென்றும்
தெருளினுன் சிலுவை யேறிச்
சிந்திய செங்நீர் யாரும்
மருளினுன் மயங்கா வாறு
வன்பவ மொழிக்கு மென்றும்
பொருளினுன் ஆவி கொண்டு
போதித்தான் மலைவற் றேனே.

---

45 மலங்கிய—மயங்கிய. கண்ணொரு நாலு.

'தேவ வசனர் முரணுத
சிறந்த நியாயம விவேகமும்
தாவ லுறுமிச் சையடக்கம்
தைரியமிவ் வொரு நான்கும்
மேவ லர்ன இருயக்கண் ...... (தனிப்பா 205)

எனத் தேசிகரே கூறியுள்ளமை காண்க.

46 கருமத்தால்—சுயநீதி விளைக்கும் வினைகளால். அகம் சுசியாகாது—மனம் தூய்மையடையாது. வன்பவம் கொடியபாவம் இறைவன் அருளால் அன்றிக் கருமத்தால் மனம் தூய்மையடையாது என்றும் தெளிவுற சிலுவை ஏறிச்சிந்திய செந்நீர் எவரும் மயக்க உணர்வால் மயங்காதவாறு கொடிய பாவத்தை ஒழிக்கும் என்றும், ஆவி துணைகொண்டு பொருள்பட மலைவு அறப் போதித்தான், மலைவு நீங்கப்பெற்றேனே என்றும தான் பெற்றது உரைக்கின்ருர்.

47 அற்றிடச் செய்தான் பாவம்
அரிமனச் சாட்சி யச்சம்
கற்றிடக் கருணை பூத்தான்
கைவல்ய சிலுவை ஞானம்
பெற்றிட வன்பு கூர்ந்தான்
பீடுறு கிறிஸ்து சிந்தை
உற்றிடத் தயைசி றந்தான்
உன்னத சீவி யந்தான்.

48 தானொரு முதல்வ னென்றும்
தரணிதன் சிருட்டிப் பென்றும்
நானொரு பாவி யென்றும்
நந்தனன் மீட்ப னென்றும்
கானொரு நிலையன் றென்றுமீ
கருணையா வியினுற் காட்டி
வானொரு வீடுங் கட்டி
மனங்களி கூர்வித் தானே.

நேரிசை வெண்பா.

49 வித்தா யிருந்துலக மெல்லாம் வகுத்தகர்த்தன்
சத்தா மறிவாந் தகுங்களிப்பாம்—எத்தா
லிறையோ னரன்றேகி யென்றுர் விமல
மறையோ தினர்தழு வார்.

47 அரிமனச் சாட்சி—குற்றங்கண்டவிடத்து அரியும் தன்மைத்தாய மனச்சான்று. கைவல்யம்—முத்தி; மோட்சம். கைவல்ய சிலுவை ஞானம்—முத்திப்பேற்றுக்குரிய சிலுவை அறிவு.

48 தரணி—பூமி. சிருட்டி—படைப்பு. நந்தனன்—மகன், திருக்குமரனை இயேசு. கான் ஒரு நிலையன்று—உலகு நிலையற்றது. கான் × வான். மீ கருணை ஆவியி னுற் காட்டி என முடிக்க. இவை நான்கும் அனுபவ முரைத்தல்.

49 வித்து—மூலம். சத்து, அறிவு, தகுங்களிப்பும்—சத்சித்ஆனந்தமாம். எத்தால்—எதனுல். நரன் தேகி—மனித உடல்கொண்டவர். விமலன்—தூயன். ஓதினர் தழுவார்—ஓதித்தழுவாதவர். ஓதினர் முற்றெச்சம். விமலன் மறை ஓதினர் தழுவார் எத்தால் இறையோன் நரன்தேகி என்றுர் எனமுடிக்க.

கட்டளைக் கலித்துறை.

50 தழுவார் கடவுளை யன்பா லறிந்தவர் தற்பெருமை
தொழுவார் இருதயம் வாயு மொருமிக்கத் தோத்திரித்து
விழுவார் தனையறி யாதவர் ஞாய விதிதினத்தில்
வழுவார் அருளினு னீதியின் மார்க்க மமைந்தவரே.

51 வரையேறிக் கன்முழை வாழ்கினும்
யோகத்தில் வல்லவராய்
நரையேறி ஞானங்கள் பேசினு
மோனமாய் நாள்வீடினும்
புரையேறி நெஞ்சிடி கொண்டவர்
வெம்பவம் போக்கடித்துக்
கரையேறி வாழ்தலி லேசுவை
யன்றியே காண்கிலரே.

கலிவிருத்தம்

52 ஏக மாய்த்திரி யேகமாய் நிற்போனைத்
தாக மாய்ச்சிரந் தாழ்த்தியே போற்றினேன்
மோக மாற்றினன் மூடத்தை நீக்கினன்
தேக மாத்துமம் திவ்வியஞ் செய்தனன்.

---

50 கடவுளை அன்பால் அறிந்தவர் தற்பெருமை தழுவார்; இதயம் வாயும் ஒருமிக்கத் தோத்திரித்துத் தொழுவார்; தனை அறியாதவர் ஞாய விதிதினத்தில் விழுவார்; அருளினால் நீதியின் மார்க்கம் அமைந்தவர் வழுவார் எனமுடிக்க. இதயமும் வாயும் என உம்மை விரித்துக்கொள்க தோத்திரித்தல்—துதித்தல். தனை—தன்னிலையை ஞாயவிதிதினம்—நடுத்தீர்ப்புநாள். மார்க்கம்—நெறி.

51 வரை—மலை. கன்முழை—மலைக்குகை. யோகம்—நிட்டை, தவம். நரையேறி—முதிர்ந்து. புரையேறி—குற்றம்மிக்கு. நெஞ்சிடி—நெஞ்சு + இடி; ஏழாம் வேற்றுமைத் தொகை—மனத்துயர்; தலையிடி என்பது போற் கொள்க வெம்பவம்—பண்புத்தொகை, கொடிய பாவம். போக்கடித்து—நீக்கி. போக்கி—கரையேறி, வென்று.

52 சிரந்தாழ்த்தி—தலை வணக்கி,

53 செய்த நன்மையைச் சிந்தித்துக் கொண்டாட
பெய்த தூயாவிப் பேர்மழை யீரத்தாம்;
எய்த நன்குணரின் பச்கு ணந்தேவை
உய்த லாமதா லொண்டநல் லாளையே.

54 நல்ல பாதையை நாடியே போதித்தான்
வல்ல வாவியின் மாத்துணை யாற்றினன்
செல்ல வென்னைக்கை சேர்த்துந டததினன்
வெல்ல மேலான மெய்யன்பு நாதனே.

55 நாத மற்றவர் நற்கதி பெற்றிட
நீத னுன்னத நீதிபா ராட்டினன்
வாத மென்கொலோ? வன்மனந் திருப்புவீர்
தீத றற்றிடுஞ் சேருவீர் மோட்சமே.

56 சேரு மார்க்கமுஞ் செல்வமும் யேசுவே
ஆரு மேவியா னந்தம டைந்திடச்
சீரு லாவிய சிந்தைய னம்பியே
வாரு மேயந்த மாணடி நீழலே.

நேரிசை வெண்பா.

57 நீழ லணைசீவ னீங்கிவிடு முன்பாவப்
பாழ தொழியவழி பாராக்கால்—வேழ

---

53 தூயாவிப்பேர்மழை—உருவகம். செய்த நன்மையைச் சிந்தித்துக்கொண்டாட, பெய்த தூயாவிப் பேர் மழை ஈரத்து (ஆல்) ஆம் எய்த நன்கு உணர் இன்பக் குணம் தேவை; உய்தல் ஆம்; அதால் அந் நல்லானை ஒண்டு எனப்பிரித்து உரைக்க.

54 மாத்துணை—மிக்க துணை. உரிச்சொற்றொடர்.

55 நாதம்—ஆதரிப்பார், ஆதரவு. நீதன்—நீதிபதி, நடுத்தீர்ப்பளிக்கும் இயேசு. பாராட்டுதல்—வழிநிற்றல். வாதம்—சொற்போர், ஆராய்ச்சி.

56 ஆரும் ஆனந்தம் மேவி அடைந்திட. ஆரும் யாரும் என்பதன மரூஉ. சீருலாவிய—புகழ்நிலவிய. சிந்தையன் நம்பி—இரண்டாம் வேற்றுமைத் தொகை.

57 சீவன் நீங்கிவிடுமுன் நீழலணை என முடிக்க. பாவப்பாழது பாவமாகிய பாழது. இருபெயரொட்

மருந்து கனிபோல் வகைக்காகா யுண்மையுள்
திருந்து விதித்தவழி செல்.

58 செல்லேல் விலக்குவழி தீய சுவடியெதுங்
கல்லேல் அனித்தியத்தைக் காதலித்து—நில்லேல்
சிரம தறுந்தாலுஞ் செப்பேல் படிறு
பரம கிறித்து சிந்தை பற்று.

கலிவிருத்தம்.

59 பற்று பேரின்ப பாக்கியம் பெற்றிட
முற்று நம்பிரான் முத்தடி, பித்தரின்
தெற்று ளாகிநீ சீவநாள் வீண்செய்தால்
சுற்று மேதுயர் சொல்லரும் நித்தியம்.

60 நித்தி யஞ்செயும் நின்சீவி யத்திலே
சத்தி யம்நீதி சாந்தமும் மெய்த்தேவ
பத்தி யோடன்பும் மாருதி லங்கிடில்
சுத்தி யுன்னுளிற் சூழ்ந்ததென் றுகுமே.

நேரிசை வெண்பா.

61 ஆகும் விசுவாசர்க் காண்டவனின் காருண்யம்
போகும் கலியும் பொருதலகை—ஏகும்

டுப்பண்புத் தொகை; அது பகுதிப்பொருள் விகுதி. வேழமருந்துகனி—யானையுண்ட விளாங்கனி. உவமையணி வகைக்காகாய்—பயன்பட மாட்டாய்.

58 விலக்குவழி—வினைத்தொகை. சுவடி—நூல், புத்தகம். காதலித்து—விரும்பி. சிரம்—தலை. படிறு—பொய்.

59 பாக்கியம்—செல்வம். பேரின்ப பாக்கியம் முற்றும் பெற்றிட நம்பிரான் முத்தடி பற்று எனமுடிக்க. பிரான்—தலைவன். முத்தடி—உவமைத்தொகை; முத்துப் போன்ற அடி எனவிரியும். தெற்றுளாகி—இடறி, இடறலடைந்து. சீவநாள் வீண்செய்தால் துயர் சொல்வரும் நித்தியம் சுற்றுமே எனமுடிக்க. நித்தியம்—முடிவின்றி.

60 நின் சீவியத்திலே சத்தியம், நீதி, சாந்தமும், மெய்த்தேவ பத்தியோடு அன்பும் மாருது விளங்கிடில் நித்தியஞ்செயும் சுத்தி உன்னுளிற் சூழ்ந்தது என்று ஆகும் என முடிக்க.

61 காருண்யம்—கருணை, அருள். கலி—துன்பம். அலகை பொருது ஏகும்—பிசாசு போரிட்டுப் புறங் காட்டி ஓடும். உடனே பல நன்மை நிறைவேற்றல்

உடனே நிறைவேற்ற லுண்மைபல நன்மை
திடனே யளிக்குஞ் சிறந்து.

62 சிறந்து விளங்கத் தினமு முயற்சி
மறந்து விடாதியற்று வாணு—ளிறந்து
கடருமுனங் தேடு கதிநலமுண் மூடம்
அடரும் படியடைஞா னம்.

63 ஞான மறிவென்னும் நல்லபொக்கி டங்களெலாம்
வான பரனேசுள் வைப்பதனல்—ஈன
நரரைக் குருவெனநீ நம்பி யலேயேல்
சுரரை வகிகிறித்தைச் சூழ்.

64 சூழு மெழுத்தெண்ணிச் சொல்லுவர்நா னுவிதமாய்ப்
பாழும் படினமவை பற்றுதே—வீழும்
கருத்து நமக்கேன் கடவுண் மகிமை
பெருத்து விளங்குவழி பேண்.

கொச்சகம்

65 பேண வகையறியாப் பேதைகட்கும் பொன்னணிகள்
பூண விருப்பம் பொலிவாகப் பூட்டுவரே

உண்மை எனமுடிக்க. உண்மை பல என்ற சீரில் ஐகாரம் குறுகி ஒரு மாத்திரையாகிக் குறிலிணை நிரைய சைக்கு உறுப்பாயிற்று.

62 சிறந்து விளங்கத் தினமும் மறந்து விடாது முயற்சி இயற்று; வாணுள் இறந்து கடரும் முனம் கதிநலம் தேடு; உள் மூடம் அடரும்படி ஞானம அடை என முடிக்க கதிநலம்—மேற்கதி, முத்தி. உள்மூடம்—மனத்து அறிவின்மை. அடரும்படி—நெருங்கும்படி, வருந்தும்படி.

63 வானபரன் இயேசு ஞானம் அறிவு என்னும் நல்ல பொக்கிடங்களெல்லாம் உள்வைப்பதனல், நீ ஈன நரரைக் குரு என நம்பி அலேயேல்; சுரரை வகி, கிறித்தைச் சூழ் என முடிக்க. வகி—தாங்கு.

64 எழுத்தெண்ணிச் சொல்லுதல்—முற்றுங்கற்று மொழிதல். நானுவிதமாய்—பற்பலவிதமாய். வீழும்—அழியும் பெருத்து—பெருகி.

65 பூட்டுவரே—(உலகோர்) அணிவரே. கண்+திறக்கார் எனப்பிரிக்க. இச்செய்யுளில் எடுத்துக்காட்டு

காண விருதயத்தின் கண்டிறக்கா ராயிடினும்
தோண அவாவுறுகிற் றூயோன்று ஊணசெய்வானே.

கலிவிருத்தம்

66 வானக் கண்பரு வக்காலங் தோன்றிடும்
மோனக் கண்ணுரை பொழியத்தி றந்திடும்
ஊனக் கண்ணரு ளொண்டவி ளங்கிடும்
ஞானக் கண்ணதே நன்ருய்த்து லங்குமே.

அறுசீர் ஆசிரியவிருத்தம்

67 துலங்கு மொருமா புஞ்சையின் மாரி
சொரியா மற்றனே
இலங்கும் வித்திற் றதிசயத் தருவொன்
றெழும்பிக் கனிமலிந்தே
மலங்கு மாக்கண மனங்கனிப் பிக்கும்
மகத்துவந் தெரிந்தாக்கால்
அலங்குங் குணநடை அழகுட னுயுளும்
அதிகரித் திடுநிசமே.

68 நிசமே மரத்தில் விளைதீ விடத்தை
நெடுமர மொன்ருலே
நசமே புரியத் திருவுளங் குறித்த
நாளதி னிறைவேற்றி

வமையணி அமைந்துள்ளது. உவம உருபின்றி உவமை யையும் பொருளையும் எடுத்துக்காட்டிப் பொருளை விளக்குவது அதன் இலக்கணம். தோண—தோன்ற என்பதன் மரூஉ.

66 வானம்—தெய்வீகம். தெய்வீகத்தைக் காட்டும் கண் வானக்கண். இச்செய்யுளாலும் அடுத்தசெய்யுளாலும் திருக்குமரன் பிறப்புப் பற்றிய முன்மொழிகள் (தீர்க்கதரிசனங்கள்) தொகுத்துரைக்கப்படுகின்றன.

67 துலங்கும்—விளங்கும். மாபுஞ்சை—நன்னிலம். மாரி சொரியாமல் தானே இலங்கும் வித்திற்று அதிசயத் தரு எழும்பி மலிந்தே கனிப்பிக்கும் என முடிக்க. வித்திற்று—வித்தின்று என்பதன் விகாரம். வித்தில்லாமல் என்பது பொருள். மலங்கும்—கலங்கும். அலங்கும்—விளங்கும்.

68 மரத்தில் விளை தீவினை—ஏதேனில் நிகழ்ந்தது. நெடுமர மொன்ருல் நசமே புரியத் திருவுளங்குறித்த நாள்: கல்வாரி நிகழ்ச்சி சுட்டிய முன்மொழி. அதின்

வசமே திரும்பு மன்பதைக் குதவி
வருமதி சயங்கண்டால்
தசமே தவற லினியொருக் காலும்
தலையெடா தொழிந்திடுமே.

69 இடுகா டத்தம் வாழ்வா ரம்பரம்
எல்லா மிழந்தையோ
முடுகா முன்னர் முத்திநல் லின்பம்
மொய்த்திட வழிதேடார்
கெடுகா லத்திற் கூவென் றலறிக்
கேடுறல் பயங்கரமே
மடுகா வுறுமான் நிகர்மகி ழொடின்னே
மாசில னடிபரவே.

எண்சீர் விருத்தம்

70 பரவை யோடம் பாறை மோதி
பாழி லமிழ்ந்திக் கேடா காமல்
இரவை யொளியாற் பகற்போ லாக்கி
இடற லணுகா மார்க்கத் தோட்டும்

என்றது 67-ஆம் செய்யுளிற் குறித்த 'தானே இலங்கும் வித்திற்று எழுந்த அதிசயத் தருவின் கனியால்' என்றவாறு வசமே திரும்புதல்—மனந்திரும்புதல். ஏகாரம் அசைநிலை. நிசமே முதல், உதவி வருமதி என்பது ஈருகத் திருத்தந்தை திருக்குமரனுக்கு இட்ட அன்பின் ஆணை. வருமதி—வருவாயாக. முன்னிலை ஏவல் வினைமுற்று. மதி முன்னிலை அசைச்சொல். தசம் பத்துக்கற்பனைகளுக்கு ஆகுபெயர்.

69 அத்தம்—எல்லை. ஐயோ! அம்பரம் எல்லாம் இழந்து இடுகாடத்தம் வாழ்வார் என முடிக்க. முடுகா முன்னர்—(ஆயுள்) நெருங்கா முன்னர். முடுகா முன்னர் தேடார் கெடுதல் பயங்கரம் என முடிக்க. மொய்த்திட—நெருங்கிட; சூழ்ந்திட. மடுகா—வினைத்தொகை; செறிகான். மான் நிகர்மகிழ் ஒடு—வஞ்சமில் மகிழ்ச்சியோடு.

70 பரவை—கடல். அமிழ்ந்தி—ஆழ்ந்து. தீரம் தொடைநோக்கிக் குறுக்கல் விகாரமாகித் திரமாயிற்று. தீரம்—வீரம். வைபோகம்—சிறப்பு மீகாமன் என்பது மீகான் என மருவி வழங்கிற்று. தீரவைபோக மீகான்—வீரமும் சிறப்பும் பொருந்திய மீகாமன். வைதீககாலம். உர உயிரும் உலப்பது ஒத்த செயலோ ஓராய்

திரவை போக மீகா னிருக்கத்
திவலைக் கஞ்சுஞ் சிறியர்க் கிசைந்தே
உரவை தீக கால முயிரும்
உலப்ப தொத்த செயலோ வோராய்.

கலிவிருத்தம்

71 ஓராய் பாராய் ஊராய் தேராய்
சீராய் வாராய் சேராய் காராய்
பேராய் ஆராய் பீராய் நேராய்
தோராய் நாராய் சோராய் தாராய்!

நேரிசை வெண்பா

72 தாரா யெனக்குத் தனயா விருதயமென்
றுராய் வதற்கரிய வம்பரன்—நேராய்
விரும்பப் படைக்காமல் வீணுக்கல் விட்டுத்
திரும்ப விதுகாலம் சேர்.

என முடிக்க. வைதீக காலம்—வேதங் கூறும் முடிவு காலம். உற எனற்பாலது எதுகைத் தொடைநயத்திற் காக வல்லினம் இடையினமாக விகாரப்பட்டு நின்றது.

71 தாராய்! பூலோக சஞ்சாரியாகிய மனிதனே! சோராய்—நீ சோர்படையாதே; ஓராய்—நான் சொல்லப்போகிறவைகளைக் கேட்டுச் சிந்தனை செய்; பாராய்—இப்பிரபஞ்ச அநித்தியத்தை விசாரணை செய்; ஊராய்—உன் ஊராருடைய உறவினைக்குறித்தும் ஆராய்ந்து பார்; தேராய்—உலக நேசத்தாலும் ஊருறவாலும் உன்னைத் தேற்றிக்கொள்ளாதே; சீராய்—செல்வம் நிலையாமையை உற்று விசாரி; வாராய்—கச்சணி மாதரின் காமசுகத்தையும் உணர்ந்து பார்; சேராய்—அவைகளைச் சதமும் சுகமும் என நம்பி அவற்றோடு சாராதே; காராய்—உன் பாவங்களைக் குறித்துச் சிந்தனைசெய்; பேராய்—உன்பேர் அவைகளால் எவ்வளவோ கெட்டுப் போயிற்று என்பதை யோசித்துப்பார்; ஆராய்—தேவனுடைய அன்பைக் குறித்து விசாரணைசெய்; பீராய் - உனக்குண்டாயிருக்கும் பயம் யாதென்று விசாரி; நேராய்—சத்தியமாவது என்னவென்று ஆராய்ந்துபார்; தோராய்—அசத்தியத்திஞேடு போராடுவதில் முதுகு காட்டாதே; நாராய் உன்னைக் கட்டியிருக்கிற பந்தம் யாதென்று நன்ருய்த் தற்சோதனை செய்.

72 தனயா (மகனே) எனக்கு இருதயம் தாராய் எனமுடிக்க. அம்பரன்—கடவுள். நேராய்—முறையாக. விரும்ப—விரும்பிநிற்க.

73 சேரா திருக்கிற் றிகைக்கச் சடுத்தம்வரும்
ஆரா யினுப் நீங்க லாகுமோ?—பேராப்
பெருமலை வீழின்மணல் பீடுடன்றுங் காதே
குருமலை யேசுகழற் கூடு.

74 கூடு கிடக்கக் குருவி பறந்தாற்போல்
ஓடு முடல்விட் டுயிரதன்முன்—தேடு
பரம பிதாமகிமை பாரினர ரட்சை
உரம துடனே யுணர்ந்து.

75 உணர்ந்து தெளிந்தவர்க ளுள்ளந்தே வண்டை
கொணர்ந்து படைப்பார்வெங் கோது—புணர்ந்து
கிடப்பார் அலகைக் கிணங்கிப் பவத்தில்
நடப்பார் அவஞ்சீவ நாள்.

76 நாளினரு மைப்பலனன் றுயறிந்தி றைபொற்
றுளின் புகழ்ச்சி தனைநாடித்—தாளின்
சரியாய்த் தமைத்தாழ்த்திச் சஞ்சரிப்பார் பத்தர்
அரியான் பரிவேமு லம்.

---

73 திகைக்க—மயங்குமாறு, சோர்ந்துபோகுமாறு. சடுத்தம்—போராட்டம், போட்டி. பெருமலை வீழின் மணல் பீடுடன் தாங்காது என்க. பீடு—மேம்பாடு குருமலை இரு பெயரொட்டுப் பண்புத்தொகை; குருவாகியமலை. மனிதன் சேருவதற்குரிய மலை குரு மலையே. மலைபோன்ற அவனை மணல் போன்ற பிற தாங்குவதற்குரியனவோ என்றவாறு.

74 கூடு கிடத்கக் குருவி பறந்தாற்போல் ஓடும் உடல்விட்டு உயிர் என்பது உவமையணி.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்பொ டுயிரிடை நட்பு (338)

என்ற குறள் இவண் ஒப்புநோக்கத் தக்கது. பாரின் நர ரட்சை உரமதுடனே உணர்ந்து பரமபிதா மகிமை தேடு என முடிக்க.

75 உள்ளம் தே அண்டை கொணர்ந்து படைப்பர் எனப்பிரிக்க. அலகைக்கு இணங்கிப் பவத்தில் கிடப்பார் கோது புணர்ந்து கிடப்பார்; சீவ நாள் அவம் கோது—சக்கை, கூற்றம். அவம்—வீண்

76 நாளின் அருமை பலன் நன்றுய் அறிந்து இறை பொன் புகழ்ச்சி தனை நாடி, தமமைத்தாளின் சரியாய்த்

அறுசீர் விருத்தம்

77 மூலமே மானிடர்க் காகமா நீதியை
முற்றுமு டித்திடவோர்
கோலமே கொண்டொரு சற்குரு வாகிய
கூறுப தேசமுறை
சீலமே யாதொரு பேதமி லாமலே
சேர்ந்துவி ளங்கியதால்
ஞாலமே நீயினி வேறொரு ரட்சகன்
நாடிடல் வேண்டாமே.

வேறு

78 வேண்டாம் பலதே வதைகள் விநயஞ் செய்தல் நரகத்
தூண்டாம் அதனை யொழித்துச் சுயம்பா மேக தேவை
வீண்டாம் பீக மின்றி விமல நெஞ்சாற் றொழுதால்
ஆண்டாம் வரைக்குங் காப்பா னங்கு மின்ப மளிப்பான்.

தாழ்த்திப் பக்தர் சஞ்சரிப்பார். அரியான்—சிம்மாசத்தில் வீற்றிருக்கும் திருக்கடவுள். பரிவு—இரக்கம். முலம்—ஆதாரம்.

77 மூலம்—ஆதிமூலமாகிய கடவுள். கோலம்—உருவம். அருவக் கடவுள் உருவமெடுத்து எனக் கொள்க சற்குரு—நல்லாசிரியன்; ஞானாசிரியன் கூறு + உபதேசம்—கூறுபதேசம். குற்றியலுகரப்புணர்ச்சி; வினைத் தொகை. சீலம்—தன்மை, ஒழுங்கு. நிறைமொழியாளர் முன்னர் வருவான் எனமொழிந்த சற்குருவுக்குரியன எனமொழிந்த உபதேசமுறைமையும் சீலமும் பேதமில்லாமலே சேர்ந்து விளங்கியதால் இனி வேறொரு ரட்சகனை நாடிடல்வேண்டா என விளக்கம் உரைத்துக் கொள்க.

78 பல தேவதைகள் வேண்டாம்; (அவற்றை) விநயஞ் செய்தல் நரகத்து ஊண் தாம். எனப்பிரித்துரைக்க. விநயஞ்செய்தல்—பணிதல். நரகத்து ஊண்—நரகத்துக்கு ஊட்டும் பலியுணவேயாகும். அதனை—பல தேவதைகளை விநயஞ்செய்தலை. சுயம்பு ஆம் ஏக தேவு—தானாக உண்டான ஒரே கடவுள். சுயம்பு—படைக்கப் படாது தானே உண்டானது. வீண் டாம்பிகம் இன்றி விமல நெஞ்சால் தொழுதால் ஆண்டு ஆம் வரைக்கும் காப்பான்; அங்கும் இன்பம் அளிப்பான். டாம்பீகம்—ஆடம்பரம் விமலநெஞ்சு—மாசிலா மனம் ஆண்டு ஆம் வரை ஆயுள் முடிவது வரை, ஆண்டு ஆகுபெயர். அங்கும்—மறுமையிலும், முத்தியுலகிலும்.

எண்சீர் ஆசிரிய விருத்தம்

79 அளிப்பான் பரமா னந்தம் பகவான்
அடிசேர்ந் தொழுகு மடியார்க் கன்பால்
தெளிப்பான் சுவிசே டந்தை நம்பிச்
சிந்தை குவிந்தே நிற்போர்க் ககத்தில்
களிப்பான் மீட்புற் றமல வழியில்
கருத்தாய்த் தனக்கூ ழியஞ்செய் வோர்மேல்
அளிப்பான் கருணைக் காலம் பிழைக்க
வீணும் பவிக ளெல்லாம் தயவாய்.

நேரிசை வெண்பா

80 வாயாற் கரங்காலான் மன்னவைதே வன்மகிமை
நோயால் விழுங்கா னுடங்கலால்—காயாத்
தருவை யுடையோன் றறிப்பான் விழிப்பாய்
இருவை மனம்ஞானத் தில்.

81 இல்லந் துறப்பதிலென்? ஈசுய நீதிவிடல்
நல்ல துறவதனை நாடிச்செய்—வல்ல
கடுவாய் அரவடவி கன்முழையுற் றென்கொல்?
நடுவாய் எழுங்குருநா ணடு.

---

79. அடி சேர்ந்து ஒழுகும் அடியார்க்குப் பகவான் அன்றல் பரமானந்தம் அளிப்பான் என முடிக்க. தெளிப்பான் — தெளிவுறுத்துவான். அகத்தில் — மனத்தில். மீட்புற்று அமலவழியில் கருத்தாய் தனக்கு ஊழியஞ் செய்வோர்மேல் அகத்தில் களிப்பான் என மாற்றிக் கூட்டுக. வீணும் பாவிகள் எல்லாம் பிழைக்கத் தயவாய் கருணைக் காலம் அளிப்பான்.

80. நோயால் விழுங்கால் நுடங்கு அலால் வாயால் கரம் காலான் மன் அவைத் தேவன் மகிமை காயாத் தருவை, உடையோன் தறிப்பான்; விழிப்பாய் இரு; ஞானத்தில் மனம் வை என முடிக்க. மன் அசை நிலை

81. இல்லம் — இல்வாழ்க்கை. கடுவாய் — பெரும் புலி. அரவு + அடவி—பாம்புக்காடு. கன்முழை— மலைக் குகை. நடுவாய் எழுங்குரு — நடுவராய் இனி வர இருக்கும் இயேசுவாகிய ஆசான். தாள் + நாடு எனப் பிரிக்க. முன்னிரண்டடிகளிலும்,

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன். (46)

என்ற குறளின் கருத்து அமைந்துள்ளது காண்க.

கட்டளைக் கலித்துறை

82 நாடு தினங்கிறித் துன்னுள வீட்டினி னன்குலவக்
கூடு கலிதுயர் வெம்பவச் சோதனை கூசிவெளி
ஓடு மமல முறுஞ்சீ வியத்தி லொளிர்பரம
வீடு மடைத லெளிதாகும் மேலின்ப மெய்திடுமே.

83 எய்தல் பிறர்க்குப காரம்புரி வரமின் பளிக்கும்
உய்தல் பரமகுரு வழியான்ம வுலப்ப றுக்கும்
பெய்தல் மறையுப தேசத்தைப் பிற்றிக் கழிக்கும்;
கொய்தல் திரிவித சத்துரு பொன்றுக் குணந்தருமே.

(84 பாடல் சிதைவு)

கொச்சகக் கலிப்பா

85 மறக்கரிய வருமன்பான் மனிதனுக வவதரித்தே
இறக்கரிய திருமகிமை யெழிலாக மறைத்துவைத்துத்
துறக்கரிய வருமுயிரைத் துயர்சிலுவை யருள்குருவின்
கறக்கரிய வுபதேசக் கருணையமு தினையருந்தே.

(86, 87 பாடல்கள் சிதைவு)

---

82. நாடு — (குருதாள்) நாடு. கிறித்து தினம் உன் உள வீட்டினில் நன்கு உலவக் கூடு; கலி துயர், வெம்பவச் சோதனை கூசி வெளி ஓடும். அமலம் உறும் சீவியத்தில் ஒளிர் பரம வீடும் அடைதல் எளிதாகும். மேலின்பம் எய்திடும் எனப் பிரித்து உரைக்க.

83. பிறர்க்கு உபகாரம் புரி வரம் எய்தல் இன்பு அளிக்கும் என்க. உய்தல் — மீட்படைதல், ஈடேறல். பரம குரு வழி உய்தல் ஆன்ம உலப்பு அறுக்கும் என்க. உலப்பு — அழிவு. மறையுபதேசத்தைப் பெய்தல் பின்றிக் கழிக்கும்; கொய்தல் திரிவித சத்துரு பொன்றுக் குணந்தருமே. பெய்தல் — இடைச் செறுகல்; பிற்றுதல் — மாறுபடுத்துதல்; கொய்தல் — அழித்தல். திரிவித சத்துரு — காமம், மயக்கம் வெகுளி. மூவாசை எனினும் ஆம்.

85. இறக்க—தாழ்த்துதற்கு அரிய. சிலுவை அருள் —சிலுவையில் அருளிய. கறக்கரிய — கறங்கரிய என்பதன் வலித்தில் விகாரம். ஒலித்தற்கு அரிய. மறக்க + அரிய — மறக்கரிய. அகரம் விகாரத்தால் தொக்கது. ஏனைய மூன்றற்கும் அவ்வாறே உரைக்க. கருணையமுது உருவகம்.

நேரிசை வெண்பா

88 மெய்ப்பொருளைச் சேர்ந்தோர்க்கே மேலான
வாழ்க்கையுண்டாம்
பொய்ப்பொருளை யுற்றோர் புகழிழப்பர்
—உய்ப்பொருளைக்
கண்டோர் பவம்புரியார் காப்பார்கால்
சுத்தவழி
தொண்டோர் ஒழுக்கமிது சொல்.

89 சொல்லும் பொருளுமொத்துத் தொன்றாத ஞானமன்ன
கொலலும் விடமாங் குருவெவரும்—புலலும்
உபதேச மொத்தொழுக லுத்தமம் பூவைக்
குபதேசந் துற்றலா கும்.

கொச்சகம்

90 கும்பி நிறைக்கவஞ்சர் கொள்வார்வே டந்திரளாய்
வம்பி லவர்நாட்களை மாயசாலத் திற்கழிந்தே
நம்பி யிருந்தவைசெந் நாயாய்ச்சூ ழவுமனமான்
வெம்பி வருந்துகுழி வீழ்ந்துதினம் நோவாரே.

---

88. உய்ப்பொருள்— உய்விக்கும் பொருள். உய்ப்பொருளைக் கண்டோர் கால் சுத்தவழி காப்பார்; காப்பார் — நிறுத்திக்காப்பார். தொண்டோர்—தொண்டர்.

89. குரு எவரும் புல்லும் உபதேசம் சொல்லும் பொருளும் ஒத்துத்தோன்றாக் கொல்லும் விடமன்ன ஞானம் (அது) பூவைக்கு உபதேசம் துற்றலாகும்; ஒத்தொழுகல் உத்தமம் என வினை முடிக்க. புல்லுதல் — பொருத்தியுரைத்தல். பூவை — நாகணவாய்ப் புள். துற்றல் — ஊட்டல்.

90. வஞ்சர் கும்பி நிறைக்க வேடந் திரளாய்க் கொள்வர். அவர் நாட்கள் மாய சாலத்தில் வம்பில் கழிந்து நம்பி இருந்தவை செந்நாயாச் சூழவும் மனமான் வெம்பி வருந்து குழி வீழ்ந்து தினம் நோவார் என முடிக்க. கும்பி — வயிறு வேடந் திரளாய்க்கொள்வர் — வேடம் பல போடுவர். மாயம் — பொய், வஞ்சனை, பாசாங்கு. சாலம் — மாய வித்தை, நடிப்பு. வம்பில் — வீணாக பின் இரண்டு அடிகளிலும் உருவக அணி அமைந்துள்ளது.

வஞ்சித்துறை

91 நோவு வெம்பவம்
தாவு தீவழி
சாவு ருமுனம்
வாவு தல்குணம்.

92 குணமே வேண்டிலிக்
கணமே யறவிடாய்
பணமே சதமெனல்
மணமே யென்றுமே.

93 என்று முய்திடற்
கொன்று மூன்றொன்றை
நன்று தெளிந்துறல்
மன்று துருக்கமே.

அறுசீர் ஆசிரியவிருத்தம்

94 துருக்கமாய்த் தேவ பாதம்
சூழ்ந்தவர் பயங்க டீரும்
நெருக்கமாய் வருபோர் வெல்ல
நிதமும் நல்லுதவி வாய்க்கும்
பெருக்கமாய்ச் செயங்கண் மேவும்
பீழைவந் தகந்தா வாதுள்
நெருக்கமாய்ச் செபித்து ஞான
உபதேசங் கூற லாமே.

95 கூறிய தேவ வாக்கு குணப்படு வோர்க்கொப் பற்ற
ஏறிய செல்வ மாகு மெளிமையில் லாமை நீக்கும்
தேறிய குருவாய் நின்று திருவுப தேச மூட்டும்
ஆறிய மனதை நல்கும் ஆத்தும வமுத மாமே.

---

91. வாவுதல் — தாண்டுதல், நீங்குதல்.

92. குணமே வேண்டில் இக்கணமே பணமே சதமெனல் அறவிடாய்; மணம் — நன்னிலை; உய்வு.

93. ஒன்று மூன்று ஒன்றை — ஐம்பலன் செய்யுள் (3), (12) உரை பார்க்க. மன்றுதுருக்கம் — மணங்கமழ் கத்தூரி.

94. பீழை—துன்பம்.

95. எளிமையில்லாமை — உம்மைத்தொகை, எளிமையும் இல்லாமையும் என்று விரியும். ஆறியமனது — அமைந்த மனம். தேவ வாக்கு ஆத்தும அமுதமாம் என முடிக்க.

வேறு

96 அமுதம் எவையும் நிகராமோ
அருமைத் தேவ னருண்மறைக்கே
குமுதம் திசைக ளோரெட்டும்
கொள்ள விதனைப் பரப்புசபை
சமுதம் அடையப் பேருதவி
தருணந் தோறுங் கருணையொடு
கமுதம் காட்டா தருள்கடவுள்
கழலென் றலைகொண் டொழுகுவனே.

நேரிசை வெண்பா

97 ஒழுகு பரிசுத்த வொய்யார மோங்க
கழுகு விடக்கைக் கருதி—விழுகும்
பசித்தும் புறவமோ பண்டமே தின்னும்
முசித்தும் முடியே லகம்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

98 அகத்துக்கண் ணாலே பார்க்க வேண்டிய வரிய வத்தை
முகத்துக்கண் ணதினா லேக்கி முக்கிய மறிய லாமோ?
சகத்துக்கண் செலலு ணீக்கித் தற்பர னுவி வேண்டில்
இகத்துக்கண் காண்பாய் தேவை யிருதயங் காடாகாதே.

---

96. திசைகள் ஓர் எட்டும் குமுதம் கொள்ள இதனைப் பரப்பு என முடிக்க. குமுதம் — பேரொலி சமுதம் அடைய — கூட. கமுதம் காட்டாது — தாழ்த்தாது. கமிதம் எனற்பாலது எதுகைக்காகக் கமுதம் என நின்றது.

97. ஒய்யாரம் — மனக்களிப்பு. விடக்கு — தசை, இறைச்சி, விழுகும் — விழும். புறவம் — புரு. புறவமோ பசித்தும் பண்டமே தின்னும். பண்டம் — (விடக்கல்லாப்) பிற பொருள் முசித்தும் அகம் முடியேல் — அழியினும் அகங்காரத்தை அணியாதே.

98. வத்து—வஸ்து என்னும் வடமொழித்திரிபு. சகத்துக்கண் செல்உள்(நின்று) நீக்கி எனக் கூட்டியுரைக்க. செல் — துன்பம். தற்பரன் — கடவுள். இகத்துக்கண் தேவைக் காண்பாய்; இருதயம் (துன்பக்) காடாகாது எனக் கூட்டி முடிக்க,

வேறு

99 காட்டை மெய்ச்சிக் கிடந்தங்கே
கனத்த சுவடி வரைந்தாலும்
வேட்டை யாளி யினப்பலுக்கம்
விளங்கா துரைத்தா ரைப்போல
நாட்டைத் திருத்து சுவிசேட
ஞான சபையு ளிருந்தாலும்
வீட்டை யளிக்கு மறுசனன
விபரந் தெளியா தாருமுண்டே.

கட்டளைக் கலித்துறை

100 உண்டா யிருக்கினு மீயா ருலோபிக
ளுத்தமரோ
அண்டா வெளிய ரழைத்துங் கொடுப்பர்கைக்
கானவைகள்
பண்டா ரிதனுற் றகுஞ்சாட்சி பெற்றனர்
பாவிகளைக்
கண்டா லவருய்தற் கானவை யோதல்
கனகுணமே.

---

99. மெய்ச்சிக் கிடத்தல் —புகழ்ந்து பலபட உரைத்தல். கனத்த சுவடி — பெருநூல். வேட்டையாளி — வேட்டைப் பொருளாம் யாளி. யாளி — ஒரு விலங்கு, அது இக்காலத்தில் இல்லை என்பர். இனப் பலுக்கம் — இனப் பெருக்கம். வீட்டை அளிக்கு மறு சனன விபரம் — முத்தி தரும் மறுபிறப்பு நுட்பம்.

100. லோபிகள் உண்டாயிருக்கினும் ஈயார்; உத்தமரோ அண்டா வெளியர் அழைத்தும் கொடுப்பர் எனப் பிரிக்க. அண்டா — நெருங்காத; ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். வெளியர் — அயலார். அழைத்தும் என்பதில் எச்ச உம்மை உள்ளது. அவர் வரினும் கொடுப்பர், வாராராயின் அழைத்துங் கொடுப்பர் எனப் பொருள்படும். கைக்கானவைகள் — கைப்பொருள். பண்டார் — சேர்த்து வையார். சாட்சி — சான்று. கனகுணம் — மேலான குணம்.

101 ஏதுந் தகுந்த பலனைப் பகிரா திடர்குவித்துக்
கோதும் பயமுங் கவலையு மாக்குங் கொடுஞ்சுவடி
போதும் நெருப்பிடு நன்ருய்ப் படிமறை பூரணமாய்
ஓதும் எவர்க்கு மளிக்குஞ் சதானந்த வூதியமே.

எழுசீர் விருத்தம்

102 ஊதி யூதிக் கண் புகைந்தே யுள்ள நாட்கள் போக்கினுல்
வாதி வந்து கட்டும் போது வந்தித் தாலும் விடுவனே?
ஆதி தேவன் போற்சி ருட்டிப் பாகு வீரோ பேதைகாள்!
வாதிக் கூட்டம் வங்கங் காண வாடி யோட்ட மாவதேன்?

நேரிசை வெண்பா

103 ஓடும் நிறத்தை யூட்டுவ தாற்கணகம்
கூடும் முறையே துரையிலை—சாடும்
பணவாசைப் பள்ளத்திற் பாழாத னீங்கிக்
குணவாசை கொண்டுநலங் கூட்டு.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

104 கூடும் மந்தி ரங்களினுல்
குறித்த கருமம் முடிப்பதற்கென்
ருடும் பேயர் தந்திரமல்
லாதிங் கெவர்க்கெந் நலம்புரிந்தார்?
ஓடும் உயிரை வீணசெயலால்
உதவா தாக்கற் பெருங்கெடுதி
தேடும் எவ்வா ருயினுமா
தேவ மகிமை வருங்களிப்பே.

---

101. கோது — குற்றம். கொடுஞ்சுவடி—கொடுமை விளைக்கும் நூல். போதும் — (கற்றது) போதும். சதானந்தம் — சதா + ஆனந்தம். நித்திய பேரின்பம். ஊதியம் — பயன். பூரணமாய் ஓதும் எவர்க்கும் (மறை) சதானந்த ஊதியம் அளிக்கும் என்க.

102. வாதி—வழக்கிடுபவன் (சாத்தான்). சிருட்டி—படைப்பு. வாதி கூட்டம் — பேய்கள். வங்கம் — படகு. (கலிலேயாவில் நடந்த செய்தி).

103. ஓடும் நிறத்தைக் கண்நகம் ஊட்டுவதால் கூடும் முறை ஏது? உரை; இலை என முடிக்க. கண் நகம் — உம்மைத் தொகை; கண்ணும் நகமும் என விரியும். இலை — இல்லை என்பதின் இடைக்குறை விகாரம்.

104. தேடும்—தேடுவீராக.

105 களித்துத் தினத்தைக் கழிக்கு மனுடர்
விளித்துத் திருத்து விளம்பி—தெளித்து
நடத்த வழுவாது நல்வழி காக்கத்
திடத்த நிமலாவி சேர்.

கலிவிருத்தம்

106 ஆவி துணைமேவி யன்புநவ சிட்டியாகிச்
சீவிப் பதற்குமகா தேவ கிருபைதனை
பாவி ! யடைந்துய்யப் பாக்கியவிந் நாள்நன்னுள்
ஏவி விடுமிப்போதே ஏற்றவா ரேடிவாவே.

எண்சீர் ஆசிரிய விருத்தம்

107 வாவேனீ வல்லமை நாலி னின்றே
மகிமையா யுனைமீட்ட மன்னன் பாதம்
தாவேனீ பிரபஞ்ச அடவி நீத்துச்
சந்ததா னந்தபதி வாசல நேரே
போவேனீ பாவவினை புரியச் செத்துப்
பொருந்தேனீ நீதிவழி பிழைக்குஞ் சீவன்
காவேனீ யிருதயத்தை யெதிலு மிக்கக்
கதித்தூன்றி பரவுமதி னின்றே சீவன்.

---

105. தினம் — நாள், வாணுள். மனுடர் விளித்து— மனுடரை விளித்து. தெளித்து நடத்த வழுவாது நல் வழி காக்கத் திடத்த நிமலாவி சேர்; களித்துத் தினத் தைக் கழிக்கும் மனுடர் (ஐ) விளித்து விளம்பித் திருத்து என முடிக்க. தெளித்து — தெளிவித்து. திடத்த — திட மான. நிமல + ஆவி — நிமலாவி; வட மொழிப் புணர்ச்சி.

106. நவ சிட்டி — நவ சிருட்டி என்பதன் விகாரம், புதுப் படைப்பு.

107. வா, தா, போ, பொருந்து, கா என்னும் ஏவல் வினைகள் ஏன் என்னும் விகுதி பெற்று, உரிமை ஏவ லாய் நின்றன. வகர ஒற்று உடம்படு மெய். பாதம் வா, வாசல் நேரே தா, பாவவினை புரியச் செத்துப் போ, நீதிவழி பொருந்து, இருதயத்தைக் கா என முடிக்க. வா ஏன் நீ எனப் பிரிக்க வல்லமை நாலு — துரைத் தனம், அதிகாரம், இவ்வுலக இருளின் அதிபதிகள், வான மண்டலப் பொல்லாத ஆவிகளின் சேனைகள். (எபே. 6: 12). தா — பாய். சந்தத + அனந்த + பதி — சந்ததானந்தபதி. நீதிவழி பொருந்து, சீவன்பிழைக்

நேரிசை வெண்பா

108 சீவன் வெறுத்துன் சிலுவை தினமெடுத்து
மாவன் புடனேசு மாணடிபின் — ஆவல்
பெருகி விரைந்தோடு பேறுண் டிடைஞ்சல்
அருகி யமையும்வாழ் வே.

வஞ்சித்துறை

109 வேத மிணங்கப்
போத முரைத்தல்
சாத லகற்றும்
வாத மபத்தம்.

நேரிசை வெண்பா

110 பத்தர் பழிக்கார் பரிவோ டுரைத்தழைப்பார்
பித்தர் இழிவாய்ப் பிதற்றுவார்—சுத்தர்
விசுவாசப் பூண்டின் விளைவான நீதி
வசுவாச மங்காதுய் வார்

அறுசீர் விருத்தம்

111 வாரா வாரா வெனப்பட்டும்
வந்த தொழியா துன்னைவிட்டும்
நேரா நேரா திருவுளத்தின்
நியமிப் பின்றிச் சுகதுக்கம்

கும்; இருதயத்தை எதிலும் மிக்கக் கதித்தூன்றிப் பரவு மதின் நின்றுகா; (உனக்கு) சீவன் எ.று. கதித்து — விரைந்து.

108. மா அன்புடன் ஏசு மாண் அடிபின் ஆவல் பெருகி விரைந்து ஓடு; பேறு உண்டு; இடைஞ்சல் அருகி வாழ்வு அமையும்.

109. வேதம் இணங்க — வேதத்தோடு பொருந்த. போதம் — அறிவு, ஞானம். வாதம் — விதண்டாவாதம்; குதர்க்கம். அபத்தம் — வீண்.

110. பழிக்கார் — பழியார். பரிவு — அன்பு. பித்தர் — பைத்தயர். பூண்டு — செடி; வசுவாசம் — தூதரோடு வாழ்தல். வசு — தூதர். மங்காது — குறையாது, நீங்காது.

111. வாரா — வாராயாக: எதிர்மறை ஏவல் சுக துக்கம் திருவுளத்தின் நியமிப்பின்றி நேரா. இயேசு

பேரா பேரா பவசேனை
பெருமா னியேசு துணையிலையால்
சேரா சேரா நவகுணங்கள்
செகத்தின் மாற்றிப் பிறக்காயேல்.

கட்டளைக் கலித்துறை

112 மாற்றிப பிறக்க வழிகிறித் தேசருண் மாநிமலன்
தேற்றிச் செபித்துமே காத்திருப்போ ரகஞ் சேரும்நிதம்
ஆற்றி லலையின் முழுக லளித்திடா தையமில்லை
கூற்றி னடுக்கம் வருமுன் பிடிதுறை கூடுமின்பே.

கலிநிலைத்துறை

113 பிடிக்குஞ் சோம்பனைத் தரித்திரம் பேய்மதுக் குடிப்போன்
இடிக்கும் நீங்கருங் கெருதியி லிடருந்திச் சாவான்
நடிக்கும் பொய்யனை யிகழுறும் நனிதுன்பந் திருடன்
துடிக்குங் கொலைகாரன் மரணமுஞ் சூழுதன் முறையே.

நேரிசை வெண்பா

114 முறையாய் விதைப்பதையே முற்ற வறுப்பாய்
மறையாய்ந் தறத்தைவிதை வாரி—குறையாய்
உடலுக் கெனவிதைத்கா லூதியம் நாசம்
விடலுட் படாமலிடு வித்து.

துணை இலையால் பவசேனை பேரா. பேரா — நீங்கா. மாற்றிப்பிறக்காயேல் நவகுணங்கள் சேரா. நவகுணங்கள். செய்யுள் 12 உரை பார்க்க.

112. மாற்றிப்பிறக்க வழி கிறித்து ஏசு அருள்; மாநிமலன் தேற்றி செபித்துமே காத்திருப்போர் அகம் நிதம் சேரும். ஆற்றில் அலையில் முழுகல் (மாற்றிப்பிறத்தல்) அளித்திடாது: ஐயமில்லை என முடிக்க. அலை—கடல்; ஆகுபெயர். கூற்றின் நடுக்கம் வருமுன் பிடி. பிடி — வழியைக் கடைப்பிடி. இன்பு துறை கூடும். துறை கூடுதல் — வந்தடைதல். இன்பு— இன்பம்.

113. சோம்பனைத் தரித்திரம் பிடிக்கும்; மதுக்குடிப்போன் பேய் இடிக்கும்; நீங்கரும் கெடுதியில் இடர் உந்திச் சாவான். பொய்யனைத் துன்பம் இகழுறும்; திருடன், கொலைகாரன் மரணஞ் சூழுதல் முறை என முடிக்க. இகழுறும் — அவமதிக்கும்.

114 மறை ஆய்ந்து அறத்தை வாரி விதை. விடல்— விழல். ழகரம் எதுகை நோக்கி டகரமாகத் திரிந்தது.

115 வித்தை மதமகற்றி மெய்ஞ்ஞானச் சோதிதுன்ன
பத்தை யுறுதுவத்தைப் பற்றிநின்றே—சொத்தை
நித்திய மாயுன்னை நிலைநிறுத்திக் காப்போனில்
சத்தியமாய்க் கொள்வாய் நேசம்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

116 நேச வழைப்பு மறுபிறப்பு நீதிதரிப் பிக்குதல் தேற்றல்
பாச முடனே கடிந்துகொளல் பரமபிதா புத்திர ராக்கல்
வாசம் பரிசுத்தப் படுதன் மகிமைப் படுத்தலிவை யெட்டும்
தேச திலங்கும் விமலாவி செய்கை சிறக்கும் பலன்கேளே

117 கேளே மெய்யா மறிவுண்டாங்
கிடைக்கும் புதுப்பிக் கப்படுதல்
தாளே மனத்தா பப்படுதல்
தம்பி ரான்பால் மனந்திரும்பல்
மூளே யிணக்க மிகவடைதல்
மூண்ட விசுவாசி யாதல்
நீளே யிறைக்கு மகவாதல்
நித்ய சீவப் பேறுறுமே.

---

115. வித்தை மதம் — கல்வியால் வரும் செருக்கு. பத்தையுறு துவம்— பத்துக் கற்பனைகளையுற்று நிற்கும் இரண்டு. அவை: தேவனிடத்தில் அன்புகூர்தல் ஒன்று; மனிதரிடத்தில் அன்பு கூர்தல் மற்றது. உன்னை நித்தியமாய் நிலைநிறுத்திக் காப்போன்—கடவுள். சொத்தை உன்னை — சொத்தையாகிய உன்னை.

116. வாசம் பரிசுத்தப்படுத்தல் — வாழ்வைத் தூயதாக்கல். தேசு அது இலங்கும் விமல ஆவி செய்கை சிறக்கும் பலன்கள் என முடிக்க. தேசு — ஒளி.

117. (பலன்) கேள் மெய்யாம், அறிவுண்டாம், புதுப்பிக்கப்படுதல் கிடைக்கும்; மனத்தாபப்படுதல், தம்பிரான்பால் மனந்திரும்பல் தாள், இணக்கம் மிகவடைதல் மூண்டவிசுவாசியாதல் மூள், இறைக்கு மகவாதள் நீள், நித்திய சீவப் பேறு உறுமே என முடிக்க. ஏகாரம் நான்கும் அசை நிலைகள். கேள், தாள், மூள், நீள் என்பன ஏவல் வினை முற்றுக்கள்.

118 பேறு கிடைக்க வேண்டுமெனில்
பேய்கொண் மாம்ச செயல்களுக்கு
நீறு ஞானக் கினியாலே
நிறைந்த வுண்மை யோடுசெபி
வேறு பாடாய் நடக்காதே
விமல குருதி குளித்துபவச்
சேறு களைந்தோ ரகம்புறமுஞ்
சிறப்பார் சூரி யன்போலே.

வேறு.

119 சூரிய கிரணத் தாலே சூழ்பனித் துளிகாய் தன்னேர்
பூரிய மாய்மா லத்தார் பொருந்துபொய் விசுவா சந்தான்
காரிய துன்பச் சூட்டாற் கழிந்திடுந் தென்படாமல்
சீரிய வுண்மை யாளர் செழிப்பர்மெய் விசுவா சத்தில்.

கட்டளைக் கலித்துறை.

120 சத்திய வேத சரித்திர போதகர் தங்கறிவு
மித்திய லோகத் ததுக்கு விருத்தம் விளங்குமன்பர்
துத்திய மோதித் தலைக்கொண் டுலகநூல் தூரவைப்பர்
நித்திய மானந்தங் கொள்வார் மயங்குவர் நிர்மூடரே.

---

118. நீறு ஞானக்கினி—நீறாக்கும் ஞானத்தீ. நீறு — சாம்பல். விமல குருதி குளித்து பவச் சேறு களைந்தோர் அகம் புறமும் சூரியன்போல் சிறப்பார் என முடிக்க.

119. பூரிய மாய்மாலத்தார் பொருந்துபொய் விசுவாசம்தான் காரிய துன்பச் சூட்டால் சூரிய கிரணத்தாலே சூழ்பனித்துளி காய்தல் நேர் தென்படாமல் கழிந்திடும்; சீரிய உண்மையாளர் மெய் விசுவாசத்தில் செழிப்பர் என முடிக்க. கிரணம் — ஒளி. நேர் — உவமை உருபு. பூரிய — கீழான. காரியம்—செயல், வினை.

120. மித்திய லோகத்துக்கு விருத்தம் விளங்கும் சத்திய வேத சரித்திர போதகர், தங்கு அறிவு அன்பர், துத்தியம் ஓதித் தலைக்கொண்டு நிததியம் ஆனந்தங் கொள்வர், உலக நூல் தூர வைப்பர்; மூடர் மயங்குவர் என முடிக்க. மித்தியலோகம் — நட்புலகம். விருத்தம் — விரிவுரை. துத்தியம் — துதி.

கலிவிருத்தம்.

121 மூட மனிதருக்கும் முத்திவழி யைக்கூறி
கேட தடையாமற் கீர்த்தியாய் மீட்குமுயர்
நாட னியேசுபதம் நத்தியடை யார்வனக்கண்
வேட ரடர்மானுய் விம்மிவ ருந்துவரே.

அறுசீர் விருத்தம்.

122 வருந்தி யுழன்றே வறுந்தவத்தில்
வாணுள் வீணுய்ப் போக்குவதேன்
திருந்தி விசுவா சக்கணினுல்
சிலுவை இயேசு வைநோக்கில்
பருந்தி னீழலிற் காணுவாய்ப்
பாய்ந்து விலகும் பவமாசை
மருந்தி ருக்க வருந்தியுய்ய
மனங்கொள் ளாதார் கருமமென்னே?

123 கரும்பு காமமென மிகவே
கருதி வேசை யுறவாடேல்
விரும்பு தனது மனையளவே
மீறியோடே லறக் கெடுதி
திரும்பு வேட்கை யடக்கவழி
செகசா லம் வெல் செபத்தாலே
இரும்பு கொண்ட நீரனைய
விருப்பாய் கருணைக் கிறித்துள்ளே.

---

121 உயர் நாடன் இயேசு பதம் நத்தி அடையார் வனக்கண் வேடர் அடர் மானுய் விம்மி வருந்துவரே எனப் பிரிக்க. நத்தி — விரும்பி. வனக்கண் — வனத்தில். அடர் — தாக்கு.

122. வறுந்தவம் — வறண்ட தவம்; இன்பமில்லாது வறண்ட தவம். வாணுள் — வாழ்நாள் என்பதன் மரூஉ. கணினுல் — கண்ணினுல்; இடைக்குறை விகாரம். பருந்தின் நீழலின் காணுவாய் பாய்ந்து விலகும் பவமாசை. நீழலின், இன் ஐந்தாம் வேற்றுமை உருபு, ஒப்புமைப் பொருள். பவமாசை — உம்மைத் தொகை; பவமும் ஆசையும் என விரியும்.

123. காமம் கரும்பு எனக் கருதி என முடிக்க. உறவாடல் — உறவுகொள்ளுதல் அறக் கெடுதி — அறங்கெட்ட ஒழுக்கம். செபத்தாலே செகசாலம் வெல். செகசாலம் — உலக மாயவித்தை; உலக நடிப்பு.

124 உள்ள நிறைவே வாய்காட்டு
மொளித்துப் பேசிடினு மசும்பில்
மெள்ளக் கபடம் வெளியாகி
மிகவே சிறுமை யுண்டாக்கும்
கள்ள நடை யான் மேன்மையிலை
கட்டி யொழித்தோர் புதுமனுடர்
விள்ள வரிய புகழுறுவார்
விண்ணு மண்ணு மிறைக்குள்ளே.

125 இறையே திலையென் றிறுதியெண்ணு
திழிதுன் மார்க்கக் காடேறும்
முறையே யுடைய முழுமக்கண்
மோச நிலைமை பயங்கரமே
கதையே தவிரக் கவலையின்றிக்
காலங் கழித்தன் மிருகக்குணம்
பொறையே மல்கு தேவபதம்
பொருந்தி வாழ்தற் கிதுநாளே.

நேரிசை வெண்பா

126 நாளு முடற்காய்நீ நாளு கவலைகொண்டாய்
மாளும் நிலையை மனத்சாய்ந்து—மூளும்
கொடிய நெருப்புக் குழிவீழா மார்க்கம்
முடியச் செலல்வேண்டா மோ?

---

124. அசும்பு — அசைவு. கட்டி ஒழித்தல் — முழுதுமாக நீக்குதல். விள் — சொல். விண்ணும் மண்ணும் இறைக்குள் விள்ள அரிய புகழ் உறுவார் என மாற்றிக் கூட்டுக.

125. இறை ஏது இலை என்று இறுதி எண்ணுது இழி துன்மார்க்கக் காடு ஏறும் முறையே உடைய முழுமக்கள் மோச நிலைமை பயங்கரமே எனப் பிரித்துரைக்க. இலை — இல்லை; இடைக்குறை விகாரம். துன்மார்க்கக் காடேறுதல் — துன்மார்க்கக் கூட்டத்தில் புகுதல். முழுமக்கள் — அறிவிலார். கதையே தவிர — கதைத்துத் திரிதலைத் தவிர. மல்குதல் — நிறைதல்.

126. மாளும் நிலையை மனத்து ஆய்ந்து நீ நாளு கவலை கொண்டாய்; நாளும் முடக்காய் என முடிக்க மூளும்—எரியும். முடிய — இறுதிவரை.

கலிவிருத்தம்.

127 போக சமுத்திரத்தின் மொய்போக மீன்வாய்பட்
டாக மலங்கி யலறியழு மானிடரே!
ஏக சருவேசன் ஏற்றிரட்சை நல்கிடுவன்
தாக முடன்செய்வீர் தாபந்த மாய்ச்செபமே.

கட்டளைக் கலித்துறை

128 செய்ம்மைப் பொருளின் சிறப்பை
வியப்பார் திருக்கடவுள்
மெய்ம்மைப் படைப்புகள் கண்டு
துதிப்பார் மிகச்சிலரே
பொய்ம்மைப் புளுகர் உறவறு
சேர்வைநற் போதகரில்
நெய்ம்மைப் பெருக்கமடை மீட்பன்
மார்க்கத்தில் நேருடனே.

நேரிசை வெண்பா.

129 உட்னே விசுவாசித் தொண்டிக்கோ நெஞ்சிற்
றிடனே யிருக்கநனி தேறு—மடனே
அழிக்க வெழுஞான ஆதித்த னேசுட்
செழிக்க முயல்வாய் தினம்.

---

127. முன் இரண்டு அடிகளில் **உருவக அணி** அமைந்துள்ளது. மோக சமுத்திரம் — ஆசையாகிய கடல். போகமீன் — இன்பமாகிய மீன். ஆகம் — மனம். தாபந்தமாய் — உருக்கமாய்.

128. செய்ம்மை—செய்கை. போதகரில்—போதகர் குழுவில். நெய்ம்மை—பளபளப்பு. நேர் — பொருந்து, உடன்படு.

129. விசுவாசத்து உடனே ஒண்டிக்கோ — விசுவாசத்தின் கண் உடனேகப் பொருந்திக்கொள். ஒண்டிக்கோ என்பது ஒன்றிக்கொள் என்பதன் மரூஉ. வெகுஞானம் — பெரு ஞானம். ஆதித்தன் — ஞாயிறு. வெகு ஞான ஆதித்தன் ஏசு உள் செழிக்க தினம் முயல்வாய் எனப் பிரித்துக் கூட்டுக.

எண்சீர் ஆசிரிய விருத்தம்.

130 தினந்தோறும் உள்ளானை நாடிச் சேர்ந்து
சீவிக்கும் சீவியத்தில் விழிப்பில் லாக்கால்
மனந்தோறும் அவம்விளைக்க விரைந்து சாடும்
வஞ்சகங்கொள் கலப்பாவி பழைய பாம்பால்
வனந்தோறும் ஓடுகுரங் கென்ன வாகி
வன்புலிவெஞ் சாவுநர கத்தில் வீழ்வாய்
தினந்தோறும் மதனமுறும் விடயர் மீளுந்
தருணமிதாங் கேட்கிலரேல் நாமென் செய்வோம்.

அறுசீர் விருத்தம்

131 செய்வார் நனிபல அனுட்டானம்
திருந்தார் குணத்திற் பயனென்கொல்?
பெய்வார் மாது ரியப்போதம்
பிசகாய் நடப்பார் சிறப்பென்னே?
கொய்வார் பாவச் செடிக்குழைகள்
குறிப்பாய்ப் பிடுங்கார் வேரோடே
நெய்வார் மூழி யானவிவர்
நிலத்திற் பார மன்றியுண்டோ?

---

130. உள்ளான் — உடையான் (இயேசு). அவம் விளைக்க — வீணாக்க, கெடுக்க வஞ்சகக் கொள்கலப் பாவி — வஞ்சகத்தையே வைத்திருக்கும் பாத்திரமாகிய பாவி. பழைய பாம்பால் (மனம்) வனந்தோறும் ஓடு குரங்கென்ன ஆகி வன்புலி வெம் சாவு நரகத்தில் வீழ் வாய் என ஒரு சொல் வருவித்து உரைக்க. என்ன — உவம உருபு; போல என்பது பொருள். வன்புலி வெஞ்சாவு நரகம்; உருவகம். குரங்கு வனந்தோறு ஓடிப் புலிவாயில் வீழுவதேபோல் மனம் மோகக்கா டெல்லாம் ஓடி நரகத்தில் வீழும் என உரைத்துக் கொள்க. மதனமுறும் விடயர் — காமமுறும் காமுகர். விடயர் — விடர்.

131. அனுட்டானம் — மதக்கிரியை; மதச்சடங்கு. மாதுரியப் போதம் பெய்வார் — விவேகமான போதகம் பொழிவார். பிசகாய் — மாறாக பாவச் செடியின் குழைகளைக் கொய்வார், வேரோடே அதைப் பிடுங்கார். மூழி — அகப்பை,

132 உண்டோ உலக ஞானத்தால்
ஒருவற் கெனினு மான்மசுகம்?
பண்டோ ருரைபற் றுறைகளுற்றுப்
பார்க்கில் மயக்கந் தெளிவில்லை
கண்டோ ரறையா விடிற்காணுர்
கரியை யெவரொப் புவரமுதம்
உண்டோ ரன்றே சுவைப்பலனை
உரைப்ப துசித முணர்வாயே.

நேரிசை வெண்பா.

133 வாயே தருண் மறையை மாட்சியோ டேற்கார்க்குப்
பேயே யவரைப் பிடித்தலைக்கும்—நோயே
நிசமாய்க் குதர்க்கமிடல் நீவிலகி யாவி
வசமாய் அறிந்துதெளி வாய்.

கட்டளைக் கலித்துறை

134 தெளிவாய் விபத்தொரு மூன்றையு மாய்ந்தகல் சேதமற
ஒளிவாய் நடத்தி யிருதயக் காரொழி யுன்னதனைக்

---

132. ஒருவனுக்கெனினும் உலக ஞானத்தால் ஆன்ம சுகம் உண்டோ என்றவாறு. பண்டோர் உரை பல் துறைகள் உற்றுப் பார்க்கில் மயக்கம்; தெளிவு இல்லை எனப் பிரிக்க. கண்டோர் அறையா விடில் காணுர் கரியை எவர் ஒப்புவர்? காணுதவர் சான்றை (சாட்சியை) எவரும் ஏற்றுக்கொள்ளார் என்றவாறு. சுவைப் பலனை அமுதம் உண்டோர் அன்றே உரைப்பது உசிதம், உணர்வாய் என மாற்றிக் கூட்டுக. இச்செய்யுளில் **வேற்றுப்பொருள்வைப்பணி** அமைந்துள்ளமை காண்க.

133. அருள் மறையை மாட்சியோடு ஏற்கார்க்கு வாய் ஏது? நிசமாய் அவரைப் பிடித்தலைக்கும் நோய் பேயே. நோயே என்பதின் ஏகாரம் அசைநிலை. நீ குதர்க்கமிடல், விலகி ஆவி வசமாய் அறிந்து தெளிவாய் என்று கூட்டுக.

134. விபத்து — அழிவு. ஒரு மூன்று — காமம், வெகுளி, மயக்கம். ஒரு மூன்றையும் தெளிவாய் ஆய்ந்து அகல். சேதம் அற ஒளிவாய் நடத்தி. சேதம்— அழிவு, கேடு. ஒளிவாய் — ஒளியினிடத்தில். இருதயக் கார் ஒழி; கார் — இருட்டு, அறியாமை. உன்னதனை அகமும் முகமும் களிவாய் இலங்கக் கன துதி செய், உன்

NADU ARCHIVES LIBRARY
110674

களிவாய் அகமும் முகமு மிலங்கக் கனதுதிசெய்
அளிவாய் நிலைத்திரு சுற்று கிறித்தவ வைந்துடையே.

கட்டளைக் கலிப்பா

135 ஏத மின்றிய வைந்துடை மேற்றரி
ஏற்ற மெய்ப்பரி வென்னுயர் கச்சையை
நீத நாதனி யேசுகி றித்துவின்
நேய நின்மல சாயலைக் காலுதல்
சாத கப்படும் நீதிக திப்புறும்
சத்தி யந்தலை காட்டிவி ளங்கிடும்
பேத போதகஞ் சூனிய மாமறை
பேச நாத்துடிப் பெய்திடு மொண்மையே.

நேரிசை வெண்பா

136 ஒன்றடை நன்றுசெய் யுண்மையுப தேசசபை
சென்றடை யாவருக்குஞ் செப்புதி—வென்றடை
ஈராறு சீட ரிருதயத்திற் றூயாவிப்
பேராறு பாய்ச்சினேன் பேர்.

னதன் — மேலான கிறித்து. களிவாய் — களிப்புப்பொருந்தி. அளிவாய் நிலைத்திரு—(அவர்) அன்பில் நிலைத்திரு. வாய் ஏழாம் வேற்றுமை உருபு. கிறித்தவ ஐந்துடை செய்யுள் செய்யுள் 3. உரை பார்க்க. சுற்று—உடு.

135. ஐம்பலன் ஏதமின்றிய ஐந்துடை மேல் ஏற்ற மெய்ப்பரிவு என்னும் உயர் கச்சையைத் தரி எனக் கூட்டுக. ஏதமின்றிய — குற்றமில்லாத. தரி — அணி. ஏற்ற — பொருத்தமான. மெய்ப்பரிவு — உண்மை அன்பு. நீத நாதன் — நீதிக் கடவுள். நேயம் — அன்பு. நின்மலம் — குற்றமில்லா, தூய. காலுதல் — தோற்றுவித்தல்; விளக்குதல். சாதகப்படும் — சாத்தியமாகும். கதிப்புறும் — மிகும், தலைக்காட்டி—தோன்றி, பேதபோதம்—கள்ளப் போதகம்; மாறுபட்ட உபதேசம். சூனியமாம் — இல்லாது போம்; ஒழியும். மாமறை ஒண்மை பேச நாத் துடிப்பெய்திடும். ஒண்மை — விளக்கம், சிறப்பு, அழகு.

136. ஒன்று + அடை — ஒன்றடை ஒன்று என்பது ஒன்றி என்ற இறந்தகால எச்சத்தின் திரிபு. சென்று + அடை — சென்றடை. வென்று அடை ஈராறு சீடர் இதயத்தில் தூய ஆவிப் பேராறு பாய்ச்சினேன்பேர் யாவருக்குஞ் செப்புதி. வென்று அடை சீடர் — உலகை வென்று (அவரை) அடைந்த சீடர்.

எண்சீர் ஆசிரிய விருத்தம்

137 பேர்போன குருக்களையார் மதிப்பார்? கூறும்
பேச்சிசையச் செலுங்குரவர்க் கியாதுங் குன்று
சீர்போன வெவரையங்கி கரிக்குஞ் சுற்றம்?
சேறினும் அகன்றொளிப்பர் செழுமை தீயக்
கார்போன குளக்குருவிக் குலங்கள் போலும்
கதிசேர்க்கும் குருபுகலும் கிறித்து ஒன்றே
நேர்போன தீயகுரு மாய யாந்தர்
நேயமொழிததி யேசிறைதாள் பொருந்தி வாழே.

எழுசீர் விருத்தம்

138 ஏரிணை கிறித்தாம் ஞானப்பே ராற்றில்
இந்திரி யங்கட விடயச்
சூரிணை யாம னீவிசு வாசத்
துறைப்புன லாடலே சுகிர்தம்
பாரிணை தீர்த்தம் மூர்த்தியோ டிடங்கள்
பலனிலை அபத்தமே நன்மைக்

---

137. பேர் போன — புகழ் கெட்ட. பேர் — புகழ். செலும் — செல்லும்; இடைக்குறை விகாரம்; ஒழுகும். குரவர் — குருக்கள். சேறினும் — சென்றடையினும். செழுமை தீயக் கார்போன குளக் குருவிபோலும் அகன்று ஒளிப்பர் எனக் கூட்டுக. கார் — கார்ப்பருவம். கார்ப்பருவம் கழிய, குளங்கள் நீரற்று வறண்டுபோம். குருவிக்குலம் — குருவிக் கூட்டம். 'அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்' என்றார் பிறரும். மாய மாந்தர் தீயகுரு நேயம் ஒழித்தி; கதிசேர்க்கும் குரு, புகலும் கிறித்து இயேசு இறை நேர்போன தாள் ஒன்றே பொருந்தி வாழ் என மாற்றிக்கொண்டு கூட்டுக. கதி— மேற்கதி. புகலும் — (மறை) உரைக்கும்.

138. நீ கிறித்தாம் ஏர் இணை ஞானப் பேராற்றில் இந்திரியங்கள் தீவிடயச் சூர் இணையாமல் விசுவாசத் துறைப் புனலாடலே சுகிர்தம் எனப்பிரித்துரைக்க. ஏர் இணை — அழகு பொருந்திய. ஏர் — அழகு. இந்திரியங்கள்—மெய் வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம் பொறிகள். சூர் — நோய், கொடுமை. சுகிர்தம்— இன்பம், நன்மை. பார் மூர்த்தியோடு இணை தீர்த்த இடங்கள் பயனிலை அபத்தமே என மாற்றிக் கூட்டுக. கார் இணை நன்மைக் கர தூயபரன் சுருதிக் கருத்து இது தெளிந்து

காரிணை தூய கரபரன் சுருதிக்
கருத்திது தெளிந்து சென் றுய்யே.

கட்டளைக் கலித்துறை

139 உய்யே யுனக்குப தேசமி யேசுவை யொண்டிநிதம்
செய்யே பரிசுத்த சீவியந் தீங்கிலை சேமமுண்டாம்
கொய்யே பழைய மனிதன் தலையைக் குணப்படுநீ
மெய்யே பவததினிற் போக்காய் தினங்களை வீண்படவே.

எண்சீர் விருத்தம்

140 வேதாந்த சாரமே விளம்பக் கேட்பாய்
விசுவாச மேநீதி சாத னம்மிப்
போதாந்த மேவியி யேசு கிறித்தைப்
பூரணமாய் முழுவிரு தயத்தி னேடு
நீதாந்த மத்தியத்த னகப் பற்றி
நிகழ்த்துலகத் தாரிடை யுன் னிமல சாட்சி
வாதாந்த மாக்குமிகத் தாழ்மை பூண்டு
மனங்குருசிற் றறை சுவர்க்கம் வாழுவாயே.

சென்று உய் என மாற்றிக் கூட்டுக. கார் இணை — மேகம்போன்ற. கரம் — கை.

139. உனக்கு உபதேசம்; இயேசுவை நிதம் ஒண்டி உய், பரிசுத்த சீவியம் செய், தீங்கிலை சேமம் உண்டாம். பழைய மனிதன் தலையைக் கொய், குணப்பட்டவர் தினங்களை பவத்தில் வீண்படவே போக்கார்; மெய்யே எனக் கூட்டியுரைக்க. பழைய மனிதன் — பழைய வாழ்க்கை என்னும் பொருட்டாய் நின்றது.

140. வேதாந்த சாரம் — வேத + அந்த + சாரம்; வேத முடிவின் பிழிவு. விசுவாசமே நீதி சாதனம் — விசுவாசமே நன்னெறிக்குக் கருவியாகும் சாதனம் — கருவி, உறுதிப்பத்திரம் எனினும் அமையும். போத + அந்தம் — போதாந்தம். ஞானத்தின் முடிவு. நீத + அந்த + மத்தியத்தன் — நீதாந்த மத்தியந்தன்; நீதிமுடிவின் நடுவன். உலகத்தாரிடை உன் நிமல சாட்சி நிகழ்த்து நிமல — குற்றமற்ற, தூய மிகத் தாழ்மை பூண்டு மனம் வாதாந்த மாக்குங் குருசில் தறை, சுவர்க்கம் வாழுவாயே என முடிக்க. வாத + அந்தம் குதர்க்க வாதத்தின் முடிவு. ஆக்கும் — விளக்கும், உண்டாக்கும். தறை — கடாவு; அறை.

நேரிசை வெண்பா

141 வாழ வுனக்கு மனமாகி லேசுவைச்சேர்
தாழ வெனிலெங்குஞ் சாருதி—சூழத்
தொடரும் பவஞ்சாபந் துக்கம் மரணம்
அடரும் நடுத்தீர்ப்பு மாம்.

கலிவிருத்தப்

142 மாமதுர மேதருகும் மாட்சிகிறித் தேசுநாமம்
தேமதுர மாதி திகட்டுந் திகட்டாதிதோ
ஓமதுர நாடி யுலையும் மனுக்குலங்காள் !
பூமதுர மாய்த்துப் பொருந்திற் கவலைபோமே.

நேரிசை வெண்பா

143 கவலை யுனக்கேன் கருத்தனெலாம் பார்க்க
அவலை நினைந்திடிப்ப தார்கல்—சவலைச்
சிசுவை மறக்காளாய் தேவனே தாங்கான்
வசுவைப் பசுபோற்காப் பான்.

அறுசீர் விருத்தம்.

144 காப்பான் கலியைத் தீர்ப்பான்
கருணை பெருகி வழியும்

---

141. எங்கும் — வேறெங்கும். அடரும் — தாக்கும். ஆம் — ஆகும், உண்டாகும்.

142. தருகும் — தரும்; கு ஒலித்துணை. தேமதுரம் ஆதி திகட்டும் இதுவோ திகட்டாது எனப்பிரிக்க. ஆதி — முதலியன. ஓமதுரம் — மருந்து. பூமதுரம் மாய்த்து (நாமம்) பொருந்தின் கவலைபோம் என மாற்றிக் கூட்டுக. பூமதுரம் — பூலோக இன்பம்.

143. கருத்தன் எலாம் பார்க்க உனக்குக் கவலை ஏன்? அவலை நினைத்துக் கல் இடிப்பது ஆர்? கல்— உரல். தேவனே சவலைச் சிசுவை மறக்காளாய்த் தாங்கான்? சவலை — இளமை. மறக்காளாய் — மறக்காத தாயாக. சவலை— இளமை. பசு—ஆன். வசு — இளங்கன்று. பசு இளங்கன்றைக் காப்பதே போல் கடவுள் காப்பார் என்றவாறு.

144. கருணை பெருகி வழியும் மூப்பான், நடுவான், கடையான், முத்திமுதல்வன், ஒழுக்கத் தேர்க்குஆப்பான், என் ஐயன் இயேசு கிறிஸ்து காப்பான், கலியைத் தீர்ப்

மூப்பான் நடுவான் கடையான்
முத்தி முதல்வன் பகையை
வீப்பான் விறற்ரு ளொதுக்கில்
விரும்பி யமைத்துக் களிப்பான்
ஆப்பான் ஒழுக்கத் தேர்க்கென்
னையனி யேசுக் கிறித்தே

வேறு

145 தேவ அன்பில் லாதவர்பால்
திரிந்தே யலுத்த காற்புண்ணும்
ஆவ லுடன்வெம் பாவத்துறை
அலைந்த மனம்வாய் கொடும்புண்ணும்
பாவ வியற்கை செயலுள்ள
பலதே வரைக்கை யெடுத்தபுண்ணும்
சிவ இயேசு வண்டைகொண்டு
சென்றே னாற்றிக் கொண்டேனே.

146 கொண்டேன் ஏகந் திரித்துவமாய்க்
குணத்தி னன்மாற் றம்பெற்றேன்
கண்டேன் றேவ பெரியஅன்பைக்
கல்வா ரியின்வெஞ் சிலுவையிலே
அண்டேன் என்ன வந்தாலும்
ஆகா வுலகத் தேவர்களை

பான், பகையை வீப்பான், விறல் தாள் ஒதுக்கில் விரும்பி அமைத்துக் களிப்பான் என முடிக்க. கலி—துன்பம். மூப்பான், நடுவான், கடையான், என்பன இறைவனது காலங்கடந்த நிலையைக் குறிப்பிட்டன. வீப்பான் — அழிப்பான். விறல்—வெற்றி. தாள்—முயற்சி. களிப்பான்—மகிழ்வான். ஆப்பான்—ஆப்புப் போல்வான். ஐயன்—தலைவன்.

145. திரிந்து அலுத்த கால் புண்ணும், அலைந்த மனம் வாய் கொடும் புண்ணும், பலதேவரைக் கையெடுத்த புண்ணும். சீவ இயேசு அண்டை கொண்டுசென்றேன் ஆற்றிக்கொண்டேன் என முடிக்க.

146. குணத்தின் நன் மாற்றம் எனப் பிரிக்க. என்ன வந்தாலும் ஆகா உலகத் தேவர்களை அண்டேன், **மெய்ஞ்ஞானமாலையாக** மெய்ப்படவே அறிக்கை விண்டேன் எனக்

விண்டேன் அறிக்கை மெய்ஞ்ஞான
மாலை யாக மெய்ப்படவே.

கட்டளைக் கலித்துறை.

147 படவே குறிப்பாய்மெஞ் ஞானவம்
பெய்து பலத்தைவெல்லக்
கடவே னுகவிது வேதின
மாமென் கனத்ததொழில்
சடவே தியரை மதியே
னிணங்கேன் றருக்கமிடேன்
கெடவே செலுவோ ரெவரே
துரைப்பினுங் கேட்கிலரே.

148 கேளார் அடையார் விசுவாச ரட்சிப்பு கேடறவே
தாளார் அருவ சொருவ மகத்துவ தற்பரனை
மீளார் கொடுமை யகற்றித் தரும வினைபுரியத்
தேளார் எடுக்கினுங் கொட்டுஞ் சுவாபமுஞ் சேருவரே.

கூட்டியுரைக்க. மெய்ப்பட — உண்மை வெளிப்பட. இதனால் ஆசிரியர் இந்நூல் செய்ததன் காரணம் உரைக்கின்றார்.

147. குறிப்பாய் மெய்ஞ்ஞான அம்பு எய்து, பவத்தைப்படவே வெல்லக் கடவேனுக, இதுவே தினம் என் கனத்த தொழில், (ஆதலால்) சடவேதியரை மதியேன், இணங்கேன்: தருக்கமிடேன்; (அவர்) கெடவே சொலுவோர், எவர் ஏதுரைப்பினும் (அவர்) கேட்கிலரே என முடிக்க. குறிப்பாய்–குறிதவறுமல். ஞான அம்பு – உருவகம். சடம்—அழிவுக்குரியது.

148. கேளார்கேடு அறவே விசுவாச ரட்சிப்பு அடையார் என அமைக்க. ஏகாரம் அசைநிலை. அருவம்—உருவமற்ற நிலை. சொருவம்—அழகு. மகத்துவம்—மேன்மை. தற்பரன்—கடவுள். தாளார் —அடிதொழார். மீளார்—திரும்பார். தேள் ஆர் எடுக்கினும் கொட்டும் எனப் பிரிக்க சுபாவம்—இயல்பு.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

149 சேரும் பொருளைத் தெளியாமற்
சேர்வார் மருள ரருளானோர்
ஆரும் அவித மடையார்தூ
யாவியவரை நடத்து வதால்
தேரும் மனப்பாக் கியங்களுற்றுச்
சிந்தை மலர்வா ரெத்திறனும்
நாரும் பூவால் மணமுறுநேர்
நன்மை பெறுவா ருறவருமே.

நேரிசை வெண்பா.

150 உறவா யிராநின்ற வுற்றோர்மற் றோரும்
இறவா துயராத்தி யென்ப—துறவா
யிருந்தா லிருப்ப ரிலையேற் றுறப்பர்
வருந்தா பயவுற வால்.

151 வாலறிவு மாக்கள் வசமன்று கற்றமட்டும்
நூலறிவு மாத்திரமாம் நுண்ணறிவும்—மாலறிவு
சிக்கிக் குறைவுளதாந் தேமறையே சுத்தாங்கம்
புக்கி மகானந்தம் பூண்.

---

149. மருளானோர் சேரும் பொருளைத் தெரியாமல் சேர்வார்; அருளானோர் தூயாவி அவரை நடத்துவதால், தேரும் மனப்பாக்கியங்கள் உற்றுச் சிந்தை எத்திறனும் மலர்வார்; ஆரும் அவிதம் அடையார் என முடிக்க. நாரும் பூவால்மணமுறும் நேர், நன்மை பெறுவார் உற வருமே என்றது நாருக்குப் பூவால் மணம் பொருந்துவது போல ஒருவருக்கு நன்மை பொருந்த நன்மை வருமே என்றவாறும். நேர்—உவமஉருபு.

150 ஆத்தி என்பது இறவாது உறவாய் இருந்தால் இருப்பர் என மாற்றிக் கூட்டுக. ஆத்தி—ஆஸ்தி.

151. வாலறிவு—தூய அறிவு. வசம்—வயத்தது. மாலறிவு—மயக்க அறிவு. சிக்கி—பிணக்கம் நிறைந்து. தேமறையே சுத்த அங்கம்—இனிய விவிலியமே தூய நூல். தேன் + மறை—தேமறை; உவமத்தொகை. அங்கம்—நூல். புக்கி—புக்கு என்ற எச்சத்தின் திரிபு.

152 பூணாரம் தாழ்மையைப் பூண்டால் மகிமைமற்றும்
வீணாரம் ஏதுக்காம் வீண்பிலுக்கே—நாணாரம்
பூண்டாலும் அன்பாரம் பூண்டாலு மிச்சீவன்
மாண்டாலும் மாயாதே மாண்பு.

153 புத்தி தெளியப் புதுக்காட்சி காணநிதம்
பத்தி நெறியிற் பலத்தொழுகச்—சுத்தி
பெருகச் சுருதியுரை பேரறிவாக் காவி
வருக பரிவாய் மகிழ்ந்து.

154 இழந்துவிட்ட தைத்தேடி யெம்பெருமான் வந்தான்
இழந்துவிட்ட என்னை இரட் சித்தான்—இழந்துவிட்ட
எப்பா வியையு மிரங்கிப் புரக்கவலன்
தப்பா னதிற்சற்றுந் தான்.

155 தானென்னும் மேடுந் தனதென்னும் பள்ளமும்
நானென்னும் காடும் நலியாக்கால்—கோனென்னும்
யேசுக் கிறிததெம்மா னீயுமா ரட்சணியம்
ஆசுங் கிடையா தறி.

156 அறிவாய் விசுவாச மானபின்பே நன்மை
செறிவாய் இயற்றுந் திறமாம்—நெறிவாய்
கிடக்குந் தெருட்சியிதைக் கிட்டி யுணர்ந்து
மடக்கு மனக்குதிரை மால்.

---

152. வீண் பிலுக்கு—வீணான பகட்டு. மாண்பு—மேம்பாடு.

153. புத்தி தெளிய, காட்சி காண, நிதம் பத்தி நெறியிற் பலத்து ஒழுக, சுத்தி பெருக சுருதி உரை பேரறிவாக்காவிப் பரிவாய், மகிழ்ந்து வருக என முடிக்க.

154. வலன் — வல்லன் என்பதின் இடைக்குறை விகாரம்.

155. ஆசும்—ஒட்டு, உறவு.

156. நெறிவாய்—இறை நெறியின் கண். தெருட்சி—அறிவுரை. மனக்குதிரை மால் மடக்கு—மனமாகிய குதிரையின் ஆசையினை நீக்குவாயாக. இது உருவகம்.

157 மாலதிக மாகின் மலியும ருட்சிவிட
நூலதிக மோதினும் நூன்மற—மேலதிகம்
செய்யினுங் கூடாது தேவாவி யாற்கூடும்
உய்யினுஞ் சத்தியத்தி னுள்.

கலிவிருத்தம்

158 உள்ள முனைச்சதிக்கு முய்த்தாய்ந்து சோதியுனே
கள்ள மறைந்திருக்கும் கண்டுபிடி ஆவியினல்
வெள்ள முறிமுன்னணே வேகமாய்ச் செய்நரகம்
பள்ளம் படியேல் படியகலக் கூறும்நூலே.

நேரிசை வெண்பா.

159 கூறும் அசுத்தங் குரோத மநீதிவிட்டுத்
தேறும் விசுத்தமன்பு சேர்நீதி—ஏறும்
படிகள் இருநான்கும் பற்றியே ருயேல்
அடிகள் மிகக்கொளுவாய்.

160 வாயினல் ஞானம வழங்கியென்ன? பாலருந்தித்
தாயினல மக்க டழைப்பதுறழ்—பேயினல்
கேடடைந்த மானிடம் வீடடையக் கல்வாரிப்
பாடடைந்த மீட்பனற்ருள் பற்று.

---

157. மால் அதிகம் ஆகின நூல் அதிகம் ஓதினும் மருட்சி மலியும், (மால்) விட நூல் மற; மேல் அதிகம் செய்யினும் கூடாது, தேவாவியால் கூடும்; உய் இனும்; சத்தியத்தின் உள் எனப் பிரித்துக் கூட்டி வினே முடிக்க. மேல் என்றது ஆகுபெயராய் மேலான நற்செயல்களைக் குறித்தது.

158. உள்ளம் சதிக்கும், உனேச் சோதி, கள்ளம்... ஆவியினல் கண்டுபிடி, வெள்ளம் முறிமுன் அணே வேக மாய்ச் செய்; நரகம் பள்ளம், படி அகலக் கூறும் நூல் படியேல் என முடிக்க. வெள்ளம் முறிமுன்—வெள்ளம் வடியும் முன்என்றது உயிர்நீங்கும் முன் என்று குறிப்பால் உணர்த்தினவாரும். படி அகல—நெறி தவறு மாறு.

159. அசுத்தம், குரோதம், அநீதி விட்டு, விசுத்தம் (பரிசுத்தம்) அன்பு சேர், நீதி ஏறும் என முடிக்க. இரு நான்கு படிகள் பற்றி 116-ஆம் செய்யுளிற் காண்க. மிகக் கொளுவாய்—நன்ருகப் பொருத்தமாட்டாய்.

160. உறழ்—போல். மீட்பன்+நல்+தாள்+மீட்ப னற்ருள்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

161 பற்று குளதா வரங்கணிகர்
பட்சி சாலம் போலாகேல்
சுற்று முற்றும் பாரிங்கே
சுகிர்த னியேசு நேருனக்குச்
சற்று மொருவாய் கண்டு
கொளாய் சாட்சியனந் தமையமுறிற்
கற்று மென்கொல்? பத்தியின்றேல்,
கதியை யிழக்கிற் பயனென்னே?

162 என்னே வறிந்தே சுகமாக்கி
ஏற்ற வுதவி யளிப்பதற்குத்
தன்னே விலலா தாரிந்தத்
தரணித் தேவர் தமக்குள்ளே
முன்னே ரலைந்துங் கண்டிலராய்
முடிந்தார்; அதுவக் கிறித்துவே
புன்னே வொழித்துப் பரமசுகம்
பூர்த்தி செய்யும் பெருமானே.

163 மானார் கலவி மயலாழ்ந்தி
மறுமை வாழ்வின் வழிகாட்டுந்
தேனார் வேத மாராய்ந்து
தெளியார் நரகத் தெருவூடே

---

161. குள தாவரங்கள் நிகர் பற்று, பட்சிசாலம் போலாகேல் எனக்கூட்டுக. சுகிர்தன்—நல்லன். ஒரு வாய்—பயப்படாதவனாக. அனந்தம்—அளவற்றது. இச் செய்யுளின் முதல் அடியில்,

**'அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைப்போல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.'**

என்ற முதுரையின் கருத்து அமைந்துள்ளமை காண்க.

162. என்+நோ—என்னே. தன்+நோ—தன்னே. புல்+நோ—புன்னே; புன்மை தரும் பாவநோய். பூர்த்தி —நிறைவு.

163. மானார்—மான்போன்ற மடநல்லாராகிய பெண்கள். கலவி—முயக்கம். மயல்—மையல், காமமயக்கம்.

போனுர் அந்தோ அவர்நிலைமை
புகல வரிய நிர்ப்பந்தம்
கோனுர் அசட்டை செய்வர்பிழை
கொஞ்ச மலகாண் நிச்சயமே.

வேறு

164 காண வரிய வுவமா
தீதக் கருணு கரப்பெருமான்
பூண மாலை விரும்பிச்
செஞ்சொற் புனைபா வரமளித்தான்
வேண கவிவிண் ணவர்மண்
ணவரும் விநயமொடு சாத்தும்
மாண மலங்க பரமா
சனக்கண் மன்னலை மனப்பாரே.

நேரிசை வெண்பா.

165 பாராங்கா ரம்லோபம் பற்றியமோ கங்கோபம்
பேராங்கா லம்போக்கும் பேருண்டி—சூராங்கா
ஆகாத வன்காரம் அற்பம்வகுத் துஞ்சோம்பல்
ஏகாத போக்கிசை யேல்.

தேன்—இனிமைக்கு ஆகுபெயர். ஆர்—நிறைந்த. நிர்ப்பந்தம் — இடுக்கண். கோனுர் — நல்ல மேய்ப்பனை இயேசு. அசட்டை—மதியாமை.

164. உவம+அதீத—உவமாதீத, உவமம் கடந்த. பாவரம்-பா புனையும் வரம். வேண — விரும்ப. விநயம்—பணிவு. சாத்தும்—கொண்டாடும். மாணம் மலங்க—மணங்கமழ. மாணம்—நீட்டல் விகாரம். மனம் (கருணுகரப் பெருமான்) மாணம் மலங்கப் பரமாசனக்கண் மன்னலைப் பார் என முடிக்க. பரமாசனக்கண்—பரம ஆசனத்தின்கண்.

165. பேருண்டி ஆங்காரம், லோபம் பற்றிய மோகம், கோபம் பேர் ஆம் காலம் போக்கும் பார்; சூர் ஆம் கா ஆகாத வன்காரம், அற்பம், வகுத்தும் சோம்பல், ஏகாதபோக்கு; இசையேல் என முடிக்க ஆங்காரம்—செருக்கு. லோபம் கடும் பற்றுள்ளம். மோகம்—ஆசை. பேர்—புகழ். பேருண்டி– பெருந்தீனி. சூர்—கெடுமை. ஆம்—ஆகிய. கா—காப்பு. வன்காரம்—கொடுமை. அற்பம்—சிறுமைக்குணம். வகுத்துஞ் சோம்பலா

166 ஏலா நரர்பிணேயோய் இங்நிலமுற் றேன்புகழ்சொல்
நூலா னதின்மேலாம் நோக்கமொத்துச்—சீலா
விடுக சுயநீதி மேவுகதே நீதி
நடுக பரமான்பி னற்று.

167 நாற்றிசையும் பாவிக னன்மாற்ற முற்றுபரம்
ஈற்றிசையும் வண்ண மினிதாகச்—சாற்றிசையும்
வாக்குமாய்ப் போதம் மகிமைக்கிரீட முனக்
காக்குமாய் விக்கு மருள்.

168 மருளை யொழித்தகங்கண் மன்னுவிக்கும் வேதம்
இருளை யகற்றிரவி யென்னத்—தெருளை
அடைய வவசிய மற்புதத்தே வாவி
சடைய விடாதாளுந் தான்.

வது, நற்செயல் செய்வதை ஏற்றுக்கொண்டும் செய்து முடிக்க முடியாது சோம்பியிருத்தல். ஏகாத—மேலோர் செல்லாத. போக்கு—வழி. இசையேல் — இவற்றிற்கு இணங்காதே.

166. ஏலா, நூலானதின் மேலாம் (நூல்) நோக்கம் ஒத்து, பிணையாய் இங்நிலம் உற்றேன் புகழ் சொல்; சீலா; சுயநீதி விடுக; மேவுக தே நீதி; பரமான்பின் நாற்று நடுக என முடிக்க. ஏலா—நண்பனை அழைக்கும் விளி பிணை—பிறர் குற்றத்தைத்தன் மேல் ஏற்றல். விவிலியமே நூலதின் மேலாம் நூல். சீலா—நற்குணவானே. தே நீதி—தேவ நீதி.

167. பரம் ஈற்று இசையும் வண்ணம்—பரம்பொருளின் முடிவை ஏற்குமாறு. ஈறு எனற்பாலது எதுகை நோக்கி விகாரப்பட்டது. போதம் சாற்று இசையும் வாக்குமாய், அருள் மகிமைக் கிரீடம் உனக்கு ஆக்குமாய்விக்கும் என முடிக்க. போதம் — தேவஞானம். சாற்று—புகழ் (ஆகுபெயர்). அக்குமாய் —ஆக்குவதுமாய்.

168. அகங்கண் மன்னுவிக்கும் — அகத்தில் கண் விளங்குமாறு செய்யும். இருளை அகற்று இரவி—இருளை ஓட்டும் சூரியன். என்ன — உவமஉருபு. சடைய — சோர்ந்து போக.

பஃறொடை வெண்பா

169 ஆளு மருவாரி னாவிநரர் நெஞ்சகத்தே
மூளு நெருப்பென்ன மூண் டெழுந்து—நாளும்
திரமா யொளியுஞ் செயற்கா மனலும்
உரமா யெழுந்துபவ வூத்தை—சரமாய்
எரித்து விடலு மியற்றவே நீபஞ்
சரித்துப் பிரார்த்தி தயவாய்—உரித்து
விளங்க வரவணைப்பு மேவுவாய் சற்றும்
களங்க முறுஞானங் காண்பாய்—சளங்க
ளொழியுமே யன்புண்மை யோங்கக் கபடம்
அழியுமே நன்மையா னந்தம்—பொழியுமே
சித்தியற்ற செய்கையெதுஞ் செய்யா யனுதினமும்
பத்தியற்ற தொன்றுமுனைப் பற்றாது—புத்தியற்ற
நீசரைச் சேராய் நிருமல மாதேவ
தாசரைச் சேர்ந்து தழைப்பாயுன்—நேசரைக்
கண்டோர்க ளுன்னையே கண்டோர்க ளாகுவர்
விண்டோர்க ளும்மாற்றம் மேவுவிப்பார்—தொண்டர்கள்
சந்தோடங் கொண்டுபரன் றாளேத்துவார் பவிகள்
வெந்தோடம் நீங்கவி சாரிப்பார்—சந்தோடம்
விண்ணாட ருள்ளு மிகவுண்டாம் நித்தியமாய்
மண்ணாட ருய்யவென்றே வந்துதித்த—விண்ணாடர்
யேசு பெருமா னிருதய மெக்களிக்கும்
கூசு மலகை கொடுமைவிட் டுத—தேசு
சுடரும் சுவிசேடந் தூயசபை யெங்கும்
அடரும் குணநடைஞா னம்.

---

169. 1, 2 — மருவு ஆர் இன் ஆவி நரர் நெஞ்சு அகத்தே நெருப்பு என்ன மூண்டு எழுந்து மூளும் எனப் பிரிக்க. மருவு ஆர்—மருவுதல் பொருந்திய. *3.* திரமாய்—ஸ்திரமாய் என்ற வடசொற்றிரிபு; நிலையாக என்பது பொருள். அனல்—தீ. *4.* உரம் வலி. பவ ஊத்தை—பாவ அழுக்கு. சரம்—கொத்து. *6.* பஞ்சரித்து—விடாது தொடர்ந்து. *6, 7.* தயவாய் உரித்து விளங்க அரவணைப்பு மேவுவாய் எனப் பிரிக்க. *8.* சளங்கள் மனநோய். *16.* விண்டோர்—விள்ளப்பட்டோர், மேவுவிப்பார் — மேற்கொண்டு நடப்பர். தொண்டோர்கள்—திருத்தொண்டர்கள். *17.* தாள் ஏத்துவர்—திருவடி துதிப்பர், *18.* வெம் + தோடம்—வெந்தோடம். விசா

அறுசீர் விருத்தம்

170 ஞானம் கிறித்துவை யன்றியிங் கேதுரை
ஞாலம் கடைத்தேற
வானம் துறந்துமே மானிட கோலத்தில்
வந்தவர் யாருமுண்டோ?
ஊனம் பறந்திடும் ஊக்கஞ் சிறந்திடும்
ஒண்டவன் செஞ்சரனே
கானம் புவிபரம் கோசித்து வாழ்நிலை
கண்டடை வாய்திரமே.

கட்டளைக் கலித்துறை

171 திரமே தருசு நிலத்தைத் திருத்தித் திருவிதையா
வரமே புனல்விடு இச்சா விலங்கினம் வந்தழிக்காத்
தரமே உரப்பு நிசியில் வெளிச்சஞ் சரிப்பதிவை
பரமே துணையொன்று பத்துநூ ருகப் பலன்றருமே.

நேரிசை வெண்பா

172 பலனை யருளிறைதாட் பற்றற்ரு ரெந்த
நலனை யடைவார் நசையார்—புலனைத்
தொடக்கார் வழியிற் சுழலா தருளால்
அடக்கார் அடைவரா பத்து.

ரிப்பார்—ஆலோசிப்பர். 19. விண்ணுடர்—பரலோகத்திலுள்ளோர். 21. எக்களிப்பு—மிகுகளிப்பு. 22. அலகை-பேய். தேசு-ஒளி. 24. அடரும்—மிகும்.

170. கடைத்தேற—ஈடேற; மீட்படைய. கோலம்—வடிவம். ஒள்+தவன்—ஒண்டவன். செம்மை+சரன்—செஞ்சரன் என்றது செஞ்சொற்களை. ஒண் தவன் செஞ்சரனே கானம் புவி பரம் கோசித்து திரமே வாழ்நிலை கண்டடைவாய் என முடிக்க; என்றது கிறித்துவின் நற் சொல்லைக் காட்டிலும், புவியிலும், அம்பரத்திலும் முழங்கி உறுதி வாழ்வைக் கண்டடைவாய் என்றவாறும். கோசம்—முழக்கம்.

171. இச்சை ஆசை தரம்—தகுதி. உரப்பு—அதட்டு. நிசி—இரவு நிசியில் இவை வெளிச் சஞ்சரிப்பது பரமே துணை எனப் பிரித்துக் கூட்டுக,

172. தொடக்கு—குற்றம்.

கலி விருத்தம்

173 ஆபத்துக் காலத்திற் றைபத்து நட்டான்
தாபத்துக் காலத்திற் காபத்த றுப்பான்
ஆபத்துக் காலத்திற் றைபத்தி டானேல்
தாபத்துக் காலத்திற் காபத்தெ டானே.

174 காபத்தி நெஞ்சத்திற் கர்த்தன்வ சிப்பான்
மாபத்தி ரத்தோடு மாவீடு சேர்ப்பான்
கோபத்தி னளதிற் குன்றமுழை மேவாய்
தேபத்தி யெம்மையுஞ் சிறப்புள தறியே.

நேரிசை வெண்பா

175 சிறந்தோர் இயேசிறைவன் சிந்தை தரித்தோர்
இறந்தோர் அதனை இழந்தோர்—மறந்தோர்
இருண்ட துறைபோய் எரிநர காழ்வார்
அருண்ட மனதை யகற்று.

176 கற்ற நெறிநில் கதியேசு மற்றோர்க்குப்
பெற்ற வரமபகர் பேதைமை—உற்ற
இனத்துக் குருகி யியற்று கிரியை
மனத்துக் கமையு மகிழ்.

177 மகிழ்ச்சி பெருகமன மாகிற்செய் நன்மை
மகிழ்ச்சி சிறுகவெனின் மாற்று—மகிழ்ச்சி
இகத்திற் குறைவென் றிடையேல் பரம
அகத்தில் நிறைவறி வாய்.

---

173. தைபத்து—நெல்வகை; அது தைத்திங்கள் பத்தாம் நாள் அளவில் அறுவடையாவது ஆதலின் அப்பெயர் பெற்றது, தாபத்து—துன்பம். கா—ஒரு முகத்தல் அளவு.

174. காபத்தி நெஞ்சம்—பத்தியைக் காத்த நெஞ்சம். மாவீடு—முத்தி கோபத்தின் நாள்—நடுத்தீர்ப்பு நாள். குன்றம் முழை மேவாய்—குன்றையும் குகையையும் (நடுத்தீர்ப்பு நாளில் ஒதுக்கிடமாகத் தேடி) அடையாய் தேபத்தி—கடவுள் பக்தி. எம்மையும்—இம்மையிலும், மறுமையிலும்.

175. அருண்ட—மருண்ட.

176. கிரியை—ஊழியம்.

177. மனமாகில்—மனமுண்டென்றால். மாற்று—நன்மையைமாற்று. இகம் × பரமஅகம்.

கட்டளைக் கலித்துறை

78 வாட்டம் அகற்றிப் படிமூன்று மேறி மகிழ்ந்துதினம்
ஓட்டம் பிடிலக்கைச் சற்றும்வி டாமலு லகவகை
கோட்டம் புரியுடன் மேற்சயம் வாய்த்திடுங் கோதகற்ற
நாட்டம் பொருந்தி யிங்குற்றோ துனக்கென்றும் நல்லிடமே

அறுசீர் ஆசிரியவிருத்தம்

179 இட்ட தருந்து சுவைநாடிப்
பிறந்த வெரிச்சல் விடுபரிந்து
அட்ட திசைக்கும் அத்தனே
சருட்செய லன்புடனே சாற்றுய்நீ
சட்ட முணர்ந்தப் படியேசெய்
தலைவ னேய மறக்காதே
துட்ட சகவா சம்போக்கு
துயர முறுவோ ருளந்தேற்றே.

180 தேறறத் துடனே ஞானமுரை
சிலுவைக் கல்விச் சாலையிற்கல்
ஆற்ற லளிக்கு மறிவுண்டா
மனந்த ஞானவி வேகமுண்டாம்

---

178. படி மூன்று எவை என்பதை,

'தூய மூல குணமூன்று
சுத்த விசுவா சத்தோடு
மேய மெய்யாம் நம்பிக்கை
விளங்கு பரிபூ ரணஅன்பாம்
தூய இவைகள் புதுமாற்றம்
அமைந்த இருத யத்தினிதம்
நேய கிறித்து திருச்சாயல்
நிலவ அனுகூ லத்தகைத்தே'

எனத் தேசிகரே தனிப்பாவிற் கூறியுள்ளதால் அறியலாம். லக்கைச் சற்றும் விடாமல் ஓட்டம்பிடி—இலக்கு (குறி) ஐச் சிறிதும் விடாமல் ஓடுவாயாக. உலக வகை கோட்டம் புரி உடல்—உலக இயல்பான குற்றங்களைச் செய்வதை இயல்பாகக் கொண்ட உடல். சயம் -வெற்றி. கோது - குற்றம். ஓது - உபதேசஞ்செய்.

179. நேயம்—அன்பு.

180, தேற்றம் — தெளிவு. ஆற்றல் — வலிமை.

தோற்ற மனைத்து மநித்தியமாந்
துரிதிலடை நித்திய சீவன்
ஏற்ற விசுவா சம்மதனை
யெளிதி லுறுவிக் கும்வழியே.

நேரிசை வெண்பா

181 வழிசத் தியஞ்சீவன் மாசிலா யேசு
மொழிசத் தியங்கண் முழுதும்—பொழிசத்
தியவாவி போதந் திகழ்ந்தவர்க் கன்றோ
நயவாவி நல்லுயிர்மெய் யாம்.

182 மெய்யே கெலிக்குமென்று மேதினியிற் கண்சிமிட்டிப்
பொய்யே நடித்தென்ன? போகச்சொல—வெய்யோன்
உதிக்க விருளோடி யோய்தலொப் பாமே
துதிக்க விறைகழலுட் சூடு.

ஆறுசீர் விருத்தம்.

183 சூடு வாய்கி றித்து சிந்தை தூயவாவி நின்றுனை
நாடு தேவ மாட்சி பூவாழ் நரரிரட்சை யுறவெனக்
கூடு பத்தர் குழுவிலின்பம் கொண்டு மென்மே லுங்களித்
தாடு வானோர் கண்டுதுள்ள சருவங் கிறித்தா தீனமே.

அனந்த—அளவற்ற. விவேகம்—புத்தி நுட்பம். அநித்தியம்—நிலையில்லாதது. துரிது—விரைவு.

181. இயேசு வழி சத்தியஞ் சீவன், மொழி சத்தியங்கள் முழுதும், பொழி சத்திய ஆவி போதம் திகழ்ந்தவர்க்கன்றோ நய ஆவி நல்லுயிர்; (இது) மெய்யாம் என முடிக்க.

182. கெலிக்கும்—வெற்றி பெறும். துதிக்க இறை; கழல் உள் சூடு என முடிக்க. 'கண்சிமிட்டி', 'போகச் சொல்' என்னுந் தொடர்கள் இச்செய்யுளின் கவிதைத் தன்மையை மிகச் செய்கின்றமை காண்க.

183. பூவாழ் நரர் இரட்சையுற எனக் கூடு பத்தர் குழுவில் எனப் பிரிக்க. சருவம்—எல்லாம். ஆதீனம்—ஆட்சி.

வேறு

184 சருவம் கிறித்துவைச் சேவிக்கு
மாதினஞ் சடுதியில் வருவதினல்
கெருவம் அடங்கியே வாதியின்
கூட்டமும் கேவல மாகிடும்பார்
உருவம் பணிதற்கட் டோடறுந்
திருச்சபை யொன்றுபட் டுவந்துசித
பருவம் நிறைவதாற் சீவநா
யகன்பதி பரிப்பனெக் காலமுமே.

நேரிசை வெண்பா

185 எக்கால மும்மெனக் கின்பா தரவருளும்
முக்கால முந்தெரிந்தாண் மூலநலன்—இக்காலம்
தந்தான் இரண்டிரட்சை தட்டாதொன் றீவனம்மைச்
சொந்தான் உனக்கும்வந்து சொல்.

186 சொன்னல் விசுவாசஞ் சோதித் துடனிரங்கி
இன்னர் இனியாரென் றெண்ணமல்—முன்னன்
அருளுவான் ரட்சிப் பவசியந்தே ரானே
உருளுவான் வெந்நரகத் தூடு.

பின் முடுகு வெண்பா

187 ஊடாட்டம் பேய்மனித ரோடுத
வாதுசெயின்
காடாட்டம் கொள்ளாட்டுக்
காதையொக்கும்—போடாட்டம்

---

184. கெருவம்—செருக்கு. கேவலம்—இழிவு. உரு பணிதல்—உருவ வழிபாடு பரிப்பன்—பரிபாலிப்பான்; ஆளுவான்.

185. மூல நலன்—எல்லா நன்மைப்பாட்டிற்கும் ஆதி காரணன். இன்பு—இன்பம் நம்மைச் சொந்தான்—நம்மைச் சொந்தமாக ஏற்றுக்கொண்டவன்.

186. முன்னன்—நேராகவந்து உருளுவான்—கதியற்றுவிழுவான். வெம்மை+நரகம்—வெந்நரகம்.

187. ஊடாட்டம்—பலகால் பழகுதல் காடு ஆட்டங்கொள் ஆடு மேய்ப்பன் பாதுகாபபு இன்றி இறந்துபடும் என்பதை இரண்டாம் அடியிற் குறித்தார்.

சித்தரொடும் பத்தரொடும்
வித்தரொடும் முத்தரொடும்
தத்தரொடும் அத்தரொடுந்
தான்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

188 தானதான தான தான தான தான ஏகனே
தானதான தான தான தான தான தந்தையாம்
தானதான தான தான தான தான மைந்தனும்
தானதான தான தான தான தான வாவியே.

189 ஆவி யுண்மை யால்வணங்க
வாக்கி யாபித் திருக்குமெய்
ஆவி யான திரித்துவத்தை
அறிந்து போற்ற வல்லீரேல்
ஆவி யான்மங் காயமீளு
மநித்தியம் போய்யென் றும்நல்
ஆவி சீவி கோடிகூடி
ஆனந் தம்பெற் றுள்வீரே.

190 பெற்ற வாழ்வு இம்மையிற் பேச வற்பம் நூற்களால்
கற்ற கல்வி சொற்பமாங் கண்ட வின்ப மணுவதாம்
உற்ற நேரம் நீர்த்துளி உண்மை மேலாம் வீட்டிலோ
அற்ற மில்லா வாழ்க்கை ஞானமாகு மின்பம நேசமே.

போடாட்டம் என்பதை ஆட்டம் போடு எனமாற்றுக. பின் இரு அடிகளில் குறில்களே வந்ததால் இது பின் முடுகு வெண்பாவாயிற்று.

188 ஏகனே தந்தை மைந்தன் ஆவியாம் என்றது முழுமுதல் ஒருவனே மூவருமாம் என்றவாறும். இது திரித்துவ விளக்கம்.

189 ......மெய் ஆவியான திரித்துவத்தை அறிந்து போற்ற வல்லீரேல் ஆவி ஆன்மம் காயம் அநித்தியம் போய் என்றும் மீளும; நல் ஆவி பெற்று சீவி ஆனந்தம் கோடி கூடி ஆள் வீரே என முடிக்க. ஆக்கியாபித்திருத்தல்—நிலைத்திருத்தல். சீவி ஆனந்தம்—வாழ்க்கையின் இன்பப்பேறு

190. இம்மையில் பெற்ற வாழ்வு அற்பம், கல்வி சொற்பம். இ ாபம் அணு, நேரம் துளி; மேலாம் வீட்டிலோ அற்றமில்லா ஞானம் இன்பம் நேசம் வாழ்க்கை யாகும் என முடிக்க. அற்றம்—முடிவு.

நேரிசை வெண்பா

191 நேசப் பெருக்கனை நீவிட்டு ஞானமற்ற
மோசப் புருடரை மொய்க்காதே—நாசப்
படுத்து மவர்போதம் பாவக்கொடு நஞ்சாம்
மடுத்து விடாதே மறந்து.

கட்டளைக் கலித்துறை

192 மறந்து விடுபிற ருன்னேர்க் கியற்றிய வன்பிழைகள்
இறந்து விடுபவஞ் செய்வதிற் சீவியெழி னலத்தில்
துறந்து வ்டுதற் பொழிவடந் தேவன்பைச் சொல்வதிலே
சிறந்து விளங்கு பரலோகச் செல்விகை சேர்ந்திடுமே.

நேரிசை வெண்பா.

193 செல்விப் புணர்வாலென்? சேரு முயர்துறவாம்
நல்வி டயங்க ணடப்பதற்குக்—கல்வி
விலையமுத மன்று விசுவாச நீதி
மூலையமுத முண்டு முயல்.

194 முயலார் வறுமைதுயர் முந்நீரின் மூழ்கி
அயலார் பழிப்பேற்ப ரான்ம—செயலார்

---

191. நேசப்பெருக்கன் — நேசத்தைப் பெருக்குப வன். மொய்த்தல் – நெருங்குதல், கூடுதல். அவர் (நாசப் புருடர்) போதம் நாசப்படுத்தும் பாவக் கொடு நஞ்சாம், மறந்து மடுத்து விடாதே என முடிக்க. போதம்—உப தேசம்.

192. பிறர் உன் நேர்க்கு இயற்றிய வன் பிழைகள் மறந்து விடு என்றார்; வள்ளுவரும். 'நன்றல்ல தன்றே மற' என்றார். பவஞ்செய்வதில் இறந்துவிடு: எழில் நலத் தில் சீவி; தற்பொழிவு அடம் துறந்துவிடு; தேவ அன் பைச்சொல்வதிலே சிறந்தது விளங்கு பரலோகச் செல்வி கை சேர்ந்திடுமே என்று முடிக்க. தற்பொழிவு — சுய நீதியை எடுத்துரைத்தல். அடம் பிடிதாதம். பரலோகச் செல்வத்தைப் பரலோகச் செல்வி என்றது இலக்கணை.

193. சேரும் உயர் துறவு ஆம், பரலோகச் செல்வி யின் புணர்வால் மேலானதுறவு நிலை கைகூடும். பின் னிரு அடிகளிலும் உருவக அணி அமைந்துள்ளது.

194. வறுமை துயர் முந்நீர் — வறுமையும் துயரு மாகிய கடல்; உருவகம். ஆன்ம செயலார் இகழ்ச்சி அடையார் என முடிக்க. உழயபு அல்லார் — முயற்சி

அடையார் இகழ்ச்சியுழப் பல்லா ருறுவர்
புடையார் அளியர்கடைப் போது.

அறுசீர் ஆசிரியவிருத்தம்

195 போதும் அக்கி ரமவுளையிற்
புரண்டு ருண்ட திதுகாறும்
சூதும் பகையும் பிரிவினையுந்
துரிச்சை வெறியுங் களியாட்டும்
வாதும் கசடர் தோழமையு
மருவி யிருளி னடப்பதினால்
ஏதும் ஊதி யம்முளவோ?
இலையே கிறித்தி னருளடையே.

எழுசீர் விருத்தம்

196 அருணிறை தேவ கிருபையி னாலே
அனுதினம் புத்தி தெளிவாகி
தெருணிறை வமையச் சித்தமோ மிகவும்
சிறப்புடன் மறைக்கு நேராகி
பொருணிறை வாக விருப்பங்க ளெல்லாம்
பொருந்திய திருத்தம நனிமேவி
மருணிறை யுலகில் நவபிறப் படைந்து
மன்னுவர் விசுவா சிகள்சேரே.

நேரிசை வெண்பா

197 சேர்ந்து பிரியா திருந்தி முடிசூட்ட
ஓர்ந்து தெளியே சுருதிதான்—தேர்ந்து
பிடித்து நிலைபேய்ப் பெரும்போர்க் கயரேல்
அடித்துப் பறத்திவிட லாம்.

இல்லார். புடை ஆர் அளியர்—முற்றிலும் இரங்கத்தக்கார். கடைப்போது—இறுதிக்காலம்; நடுத்தீர்ப்பு நாள்.

195. உளை—சேறு. கசடர்—கீழோர்.

196. அருள் + நிறை—அருணிறை. இவ்வாறே ஏனை மூன்றையும் பிரிக்க. நனிமேவி—மிகப்பொருந்தி. நவ—புது.

197. சுருதி—வேதம். பேய் பெரும் நிலைப்படைக்கு அயரேல். அடித்துப் பறத்திவிடலாம் என முடிக்க. நிலைப்போர் — எக்காலமும் நாட்டில் நிலைத்திருக்கும் குழப்பம்.

எண்சீர் விருத்தம்

198 விடனுக நற்காலம் வீண்செய் யாமல்
வேதபர னருளாவி யுதவி யாலே
திடனுக வமராடு வாகை மாலை
செயவேசு புண்ணியத்தாற் சூட்ட லாவாய்
உடனுக வேண்டிய ரட்சை தூய்மை
ஒண்டாதா ரண்டாதார் பரம வீட்டைக்
கடனுக விசுவாச முயல்வா லுற்ருேர்
கதிபதியா யென்றூழி களிகூர் வாரே.

கட்டளைக் கலித்துறை

199 கூருவர் மெய்யன் புடன்மார்க் கபத்தர் குறைகளறத்
தேருவர் சத்திய வேதமனுதினஞ் சிந்தை களிப்
பாருவர் வாக்குத்தத் தங்கள்கண் டுன்னத பாக்கியத்தைச்
சாருவர் குன்ருர் சலிக்கார் கிறித்துடன் றங்குவரே.

கொச்சகம்

200 தங்கா வருளிலர்க்குச் சாற்றுமுப தேசவுண்மை
மங்கா வருணலங்கள் வாய்த்தவிசு வாசிகளின்
எங்கா வலனியேசிங் கெழுந்து வந்தளித்த
கொங்கா றெழுகிடத்திற் கூடாரம் போட்டுவாழே.

---

198. விடனுக—தூர்த்தனுக, துன்மார்க்கனுக. அமர்—போர். வாகைமாலை சூட்டலாவாய்-வெற்றியடைவாய். உடனுக—உடனே. ஒண்டாதார்—சேராதார். அண்டாதார்—கூடாதார். கடனுக—முறையாக; கடப்பாடாக. கதிபதியாய்—மேற்கதிக்கு ஆளாய். என்றூழி—எக்காலமும்.

199. மார்க்க பத்தர் மெய்யன்புடன் குறைகள் அறக் கூருவர் என முடிக்க. கூர்தல்—நிறைதல். ஆர்தல்—நிறைல். சார்தல்—அடைதல். சலித்தல்—சோர்தல்.

200. மங்கா—குறையாத. தங்கா, மங்கா—இரண்டும் ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள். விசுவாசிகளின் — இன் ஐந்தாம் வேற்றுமை ஒப்புமைப் பொருள். காவலன்—அரசன். கொங்கு ஆறு—தேன் ஆறு. எங்காவலன் இயேசு இங்கு எழுந்து வந்து அளித்த கொங்கு ஆறு ஒழுகு இடம் என்றது திருச்சபையை. கூடாரம் போட்டு வாழ் என்பதற்கு நிலைத்து வாழ் என்பதே பொருளாகக் கொள்க.

கட்டளைக் கலிப்பா

201 போட்டு வாபவம் புண்ணிய யேசிடம்
போகா வெம்பவம் போக்குவன் மெய்வழி
காட்டு வான்றினம் ஆவியி னுலுனேக்
கைவிட் டான்றிடம் நம்புநன் ருய்மறை
தீட்டு நன்மொழி முற்றுநி றைவுறும்
தீமை யாவுமிப் பாரைவிட் டோடுமன்
பூட்டு வேதிய சங்கமெ மும்பிடும்
பொய்யர் கூட்டம டங்கியே மாயுமே.

வெள்ளொத் தாழிசை

202 மாயு முலக மல்கி யாவுந்
தேயு மாசை செறிந்த வனைத்தும்
ஆயு மன்ப ரு.

அறுசீர் விருத்தம்

203 பழியார் துகளை வெறுக்கா தியற்றிப்
பன்னுள் வாழ்ந்தென்கொல்
விழியார் இச்சை கடிந்தே நலத்தை
விளைத்தற் கெனலாபம்

---

201. ஆவியினுல் மெய்வழி தினம் காட்டுவன், திடம் நம்பு என முடிக்க. திடம்—உறுதியாக. மாயும்—அழியும்.

202. உலகம் மல்கிச் செறிந்த அனைத்தும் மாயும்; யாவும் தேயும்; அன்பு அரு (இதனை) ஆயும் என முடிக்க. ஆயும்—ஆராயும்.

203. நலத்தை விளைத்தற்குப் பழி ஆர் துகளை வெறுக்காது இயற்றிப் பன்னுள் விழியார் இச்சை கடிந்தே வாழ்ந்து என் கொல்? என லாபம்? என முடிக்க. திருவள்ளுவர், உலகம் பழித்ததை ஒழியாது பெண் துறவையே துறவு என்று கருதி மழித்து முண்டிதஞ் செய்தும், தாடி முதலானவற்றை வளர்த்தும் திரிவோரைப் பார்த்து,

மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

என்று உரைத்தவாறே இவ்வாசிரியரும் முதல் இரு அடிகளிலும், நலத்தை விளைத்தற்கு உரிய வழியைச் சுட்

வழியார் தடைக ளொழிக்க வொருவன்
மனம்வல் லபமுளனுய்
ஊழியார் வுடனே யிருக்க மலைப்பேன்?
ஓடாய் பகலிதிலே.

நேரிசை வெண்பா

204 பகலை வெறுக்கும் பரும்புள் கிறித்து
புகலை யசடர் பொருந்தார் — இகலை
அறிந்தா கிலுமடையா ராயினென் செய்வாம்?
செறிந்தா வியைச்செய் செபம்.

கட்டளைக் கலித்துறை

205 செபமே தினம்புரி ஏகாக்கிரசித்தஞ் சீரிலங்கச்
சுபமே பெருகப் பலபேர் திரும்புவர் துய்யனிடம்
நிபமே தெளியரு ளூற்றப் படுவதே நீதிதரும்
தபமே தருங்கிறித் தேசுபொற் ருளிணை சாருவதே.

அறுசீர் விருத்தம்

206 சாரும் பொழுது ஞானமன்பு
தழைக்குஞ் சிறப்புஞ் சீலமுமே
நேரும் துயரம் பயமேகும்
நீதி மானுய் நிலத்தொழுகிப்

டிக் காட்டியுள்ளார். துகள்—குற்றம். பல்+நாள்—பன்னுள். விழியார்—பெண்டிர். வழி ஆர் தடை—வாழ்க்கைப் பாதையில் வரும் இடையூறுகள். வல்லபன்—வல்லமையுள்ளோன். ஆர்வு—ஆர்வம். ஊழி—பக்கம். மலைப்பு—திகைப்பு.

204. பரும்புள்—கூகை. அசடர்—மூடர். முன்னிரண்டடிகளில் எடுத்துக் கட்டுவமை யணி அமைந்துள்ளது. இகல்—பகை. ஆவியைச் செறிந்து செபம் செய் என அமைக்க. செறிந்து—நெருங்கிச் சேர்ந்து.

205. ஏகாக்கிரம சித்தம் சீர் இலங்க—வானுலகிலும், பூவுலகிலும் இறைவனின் ஒரே ஆட்சி விருப்பு மேம்பட்டு விளங்க. ஏக+ஆக்கிரமம்+சித்தம்—ஏகாக்கிரமசித்தம். நிபம்—வஞ்சனை. தெளி—தெளிவிக்கும்; நீக்கும். தபம்—தவம்.

206. பேர்—புகழ். சீவ வாசனை—குன்றாத மணம். கோரும்—வேண்டும். ஈது—சுட்டு நீண்டது.

பேரும் சீவ வாசனையாம்
பிழைப்பார் பலரு‌ன் மாதிரியால்
கோரும் நன்மை கிடைக்குமுடன்
குணப்பட் டவரீ தறிகுவரே.

வேறு

207 அறிவி ருந்த தினந்தலத்
தறிவு தோன் றி யறிவுடன்
அறிவி ருந்த விதத்திலே
அனைத்து மாக்கி யறிவினால்
அறிவி ருந்த இடத்திலே
ஆனந் தங்கள் பெற்றுய்ய
அறிவி ருந்த அவத்தைகள்
அடைந்த அன்பைப் பாருமே.

208 பாரு மேபத் தெட்டினாற்
பாவப் பாரந் தட்டினான்
வாரு மேவிண் ணெட்டினல்
மாட்சி யாட்சி யாகலாம்
ஆரு மேகண் டெட்டிடான்
அவனி வந்து கிட்டினான்!

---

207. அறிவு (இறைவன் தந்த முதலறிவு) இருந்தது, இனம் தலத்து அறிவு தோன்றி (அவ்) அறிவுடன் (பொருந்தி) அறிவு இருந்த விதத்திலே (இனமும் தலமும் பற்றிய அறிவே) அனைத்தும் ஆக்கி (நிற்கும்) அறிவினால் (உலகியல்) அறிவிருந்த (அவ்) இடத்திலே; (பேர்) ஆனந்தங்கள் பெற்று உய்ய (தூய அவர்) அறிவு இருந்த அவத்தைகள் அடைந்த அன்பைப் பாருமே என இசையெச்சங்களை விரித்து உரைக்க. தலம்—இடம். அவத்தைகள்—கொல்கதா மேட்டில் (அவர் அறிவில் இருந்த) வேதனைகள். அவத்தை என்பது அவஸ்தை என்ற வடசொற்றிரிபு. அடைந்த—அனுபவித்த. அன்பை—இயேசுவின் அன்பை. இச்செய்யுளில் சொற்பின் வருநிலை அணி அமைந்துள்ளதைக் காண்க.

208. பத்து எட்டினால் பாவப்பாரந் தட்டினான்(ஐ)ப் பாருமே என முடிக்க. பத்து—மெய்த்தசம்; பத்துக் கற்பனை. எட்டு எவை என்பதைச் செய்யுள் 116-ஆல் அறிக. தட்டினனை—துடைத்தவனை. ஆர்—யார் என்

ஒரு மேயீவ் வற்புத
உண்மை யன்பை யுய்யவே

வேறு

209 உய்யவே உனக்கு மார்க்கம்
உண்மையாய்க் காட்டி நன்மை
செய்யவே யெழுந்த யேசு
செம்மலைப் புகணீ யெங்கும்
எய்யவே யெடுத்த வில்லான்
இடறல்கள் குவிப்பா னஞ்சேல்
கொய்யவே யவன்றூர்ச் சென்னி
கொள்வைகை வசன வாளே.

நேரிசை வெண்பா

210 வாணாள் விளங்க வொருமாகிரியை செய்தற்கடன்
பாணாட் படவிடுதற் பங்கமோர்—வீணாள்
கழித்தற் பரன்முற் கணக்குட் படுத்தும்
அழித்தல் எவர்க்கு மரிது.

பதன் மரூஉ. அவனி—பூமி. ஓரும்—உணரும். அற்புதம்—புதுமை. உய்ய—வாழ.

209. செம்மல் தலைவன். புகழ்+நீ—புகணீ. இதற்கு **வீரசோழியம்** அமைதி கூறும்; அன்றி, வருஞ்செய்யுளில் வரும் வாணாள், பாணாள் என்பனவே போல் மரூஉ முடிபுகள் எனலும் ஒன்று. எய்யவே, எடுத்த வில்லான்—எப்பொழுதும் எய்தற்குக் காத்திருப்பவன். குவிப்பான்—மிகுதியாக முற்படச் செய்வான். அவன் துர்ச் சென்னி கொய்ய வசனவாள் கைக்கொள்வை என முடிக்க. வசனவாள்—உருவகம்.

210. மாகிரியை—செயற்கரிய பெருஞ்செயல். பங்கம்—இழிவு. கணக்குட்படுத்தும்—கணக்குக் கொடுக்கும் நிலைக்கு உட்படுத்தும். சிறப்புப் பொருளாகிய வாணாளை அழித்தல் அரிது என்பதை நன்கு விளக்கப் பொது மொழியான (எதனையுமே) அழித்தல் எவர்க்கும் அரிது எனக் காட்டினர். இது வேற்றுப் பொருள் வைப்பு அணியாம்.

கட்டளைக் கலித்துறை

211 அரிது பவத்தை யழித்தான்முத் தான மறம்புரிந்தும்
பெரிது குருபரன் சோரிதரு நலம் பேசரிய
உரிது திசையெங்குங் காணே மதினிக ருன்பவங்கள்
கரிது பயங்கர மாயினும் நீக்கிடுங் கண்டடையே.

அறுசீர் விருத்தம்

212 அடைநீ நினைத்துக் கொண்டிருத்தற்
கான வுண்மை யாதியெட்டும்
உடைநீ யுலகநேச மெனும்
உபாயத் திருட்டு வங்கமதை
நடைநீ கொள்வாயி டுக்கவழி
நலிநற் றிடனுய் விரிந்தவழி
தடைநீ கண்டு திகைக்காதே
தருண துணைநம் இயேசிறையே.

நேரிசை வெண்பா

213 இறைவன் கருணை யிருக்கிற் பிசாசு
கறைவன் அகன்றே கடப்பான்—நிறைவன்
இருபுறமுங் காப்பானி ணைதாட் புகல்விட்
டொருபுறமும் போகா தொதுங்கு.

211. முத்தானம் அறம் பிரிந்தும் அரிது பவத்தைக் குருபரன் அழித்தான்; (குருபரன்) சொரிதரும் பெரிது நலம் பேசரிய; திசை எங்கும் காணேம் அதின் நிகர் உரிது; உன் பாவங்கள் கரிது, பயங்கரம் ஆயினும் (சொரிதரும் நலம்) நீக்கிடும்; கண்டடையே என முடிக்க. முத்தானம்—உடல் பொருள் ஆவியைத்தானமிடல். சொரி—இரத்தம்.

212. உண்மை ஆதி எட்டும் நீ அடை, திருட்டு வங்கமதை நீ உடை, இடுக்க வழி நீ நடை கொள்வாய் விரிந்த வழி நலி, தடை கண்டு நீ திகைக்காதே நம் இயேசு இறையே தருண துணை என முடிக்க. உபாயம்—சூழ்ச்சி. திருட்டு வங்கம்—உருவகம். நலி—கெடு. நற்றிடன்—நல்லுறுதி. தருண துணை—ஏற்றகாலத்தில் உதவும் துணை.

213. இருக்கின்—இருந்தால். கறைவன் பிசாசு—கறைப்பட்டவனை பிசாசு. நிறைவன்—நிறைந்த கடவுள். இணைதாள் புகல் விட்டு ஒரு புறமும் போகாது ஒதுங்கு எனப்பிரிக்க. ஒழுங்கு—அடைக்கலம் புகுக.

அறுசீர் விருத்தம்

214 ஒதுங்கினுல் லாபம் கோடி
உள்ளக்கண் ணலகை மெல்லப்
பதுங்கினுல் கேடுண் டாகும்
பார்த்தின்றே தூரத்து பின்கண்
பிதுங்கினுல் வரும்பே றுண்டோ?
பேசரும் நீதி யான்முன்
பொதுங்கினுல் சருவ ஞானம்
பொள்ளெனப் பிடித்தி டாதோ?

நேரிசை வெண்பா

215 தோட மறுத்துச் சுகமருளும் பேரின்ப
நாட னடிநிழலை நாடியுற்றுர்—கேட
தடையார் குதுகலிப்பே தானுறுவா ரெங்கும்
கடையார் இதையறியார் காண்.

கலி விருத்தம்

216 காணுங் கண்ணுங் கருத்து மிருக்கும்நாள்
நாணுங் கன்மம் நலிக்காமற் செல்பவர்
ஊணுந் தூக்கம் ஒழுங்காய் நடத்திபின்
கோணுந் தீயுங் கொதிகுழி வீழ்வரே.

---

214. உளக்கண்—உள்ளத்தின்கண். இன்றே பார்த்துத் தூரத்து பின் கண்பிதுங்கினுல் வரும்பேறு உண்டோ? எனப் பிரிக்க. கண்பிதுங்குதல் — துன்புறுதல். பேறு —பயன். நீதியான்—நீதியுள்ள இயேசு. முன் ஒதுங்குதல்—முன்னே சென்று அடைக்கலம் பொருந்துதல். பொள்ளென — விரைந்து. பொள் — குறிப்பு இடைச்சொல்.

215. தோடம்—தோஷம் என்னும் வடசொல்லின் திரிபு. குதுகலிப்பு — பெருமகிழ்ச்சி. தான் உறுதிப் பொருள் தரும் இடைச் சொல். கடையார்—கீழானவர்.

216, கருத்து—உணர்வு. நாணும் கன்மம்—நாணத் தகும் வினைகள். நலிக்காமல்—கெடுக்காமல். செல்பவர்—மேற்கொண்டு ஒழுகுவர். தூக்கம்—தூக்கமும்; எண் உம்மை தொக்கது. கோணும் — வெறுக்கத்தக்க. தீயுங் கொதி குழி—தீய்தல் (எரிதல்) செய்யும் கொதிக்கின்ற குழி.

கட்டளைக் கலித்துறை

217 வீயா திருக்க மருந்துண் டதனை விரும்பியுணற்
கோயா தமர்ந்து ஒளிகாலுஞ் சிலுவையை யுண்மையொடு
சாயா துருகியே பாரங் கிருந்தது சாடிவரும்
தேயா வரிய விசுவாச வாய்மறையாற் சேவிப்பையே.

218 சேவி நலியா தொருபோது மெய்யுயிர் ஏகியுமிப்
பூவி லுடலழிந் தாலுமுயிர்த்துப் பொருந்தும் விண்ணில்
சாவி யழித்து மணிகுதிர் சேர்சமு சாரியென்ன
தாவி யகண்டனுஞ் செய்வான் சமுசயஞ் சற்றுமின்றே.

219 இன்றே மரணத்தின் பின்பல சன்ம மெடுத்தனரர்
ஒன்றே பிறப்பிறப் பாமதின் பின்பல னொண்டுவதால்
நன்றே யிருக்குமிச் சீவனிற் றானே நவபிறவி
மன்றே நிருமல வாவியான் மேவி மகிழ்தினமே.

---

217. வீதல்—அழிதல். காலும்—வீசும். சாயாது—திறம்பாது. தேயா—தேயாத; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். சேவி—வணங்கு; ஊழியஞ்செய்.

218. ஒரு போதும் மெய்யுயிர் நலியாது; பூவில் உடல் அழிந்தாலும் (மெய்யுயிர்) உயிர்த்து விண்ணில் பொருந்தும்; சாவி அழித்து மணி குதிர் சேர் சமுசாரி என்ன அகண்டனும் தாவிச் செய்வான்; சமுசயம் சற்றும் இன்றே; சேவி என முடிக்க. குதிர்—நெற்களஞ்சியம். சமுசாரி—உழவன்; பயிர்த்தொழிலாளி. அகண்டன்—முழுமுதல் ஒருவன்: சமுசயம் — ஐயம். தாவி—விரைந்து. நியாயத்தீர்ப்பு உண்டு என்பது இதனல் வலியுறுத்திக் கூறப்படுகின்றது.

219. மரணத்தின் பல சன்மம் எடுத்தநரர் இன்றே; ஒன்றே பிறப்பு இறப்பாம்; அதன்பின் பலன் ஒண்டுவதால்; நன்றே இருக்கும் இச்சீவனில்தானே நவபிறவி மன்ற, நிருமல ஆவியான் மேவி மகிழ் தினமே எனப் பிரித்துரைக்க, இன்றே—இல்லையே. சன்மம்—பிறப்பு. ஒண்டுவதால்—பொருந்துவதால். பலன் என்றது நடுத்தீர்ப்பை. நவபிறவி—புதுப்பிறவி; மறுபிறப்பு. இதனல் ஒரே பிறப்பு, ஒரே இறப்பு, ஒரே நடுத்தீர்ப்பு என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டுள்ளமை காண்க.

அறுசீர் விருத்தம்

220 தினமும் தெளிவு நூலை யோதித்
தியானஞ் செய்தொழுகாய்
கனமும் துதியும் பரனுக் காக்கற்
கடமை நிறைவேற்ருய்
இனமும் நிலையில் உலகைச் சதமென்
றிருந்தே மயங்குவதேன்?
சனமும் தமரும் தனமும் பலவும்
சாம்போ துதவாதே.

கட்டளைக் கலித்துறை

221 உதவா வுலுத்தரைப் பின்ருெடர்ந்
தாவதென் ஒன்றுமில்லை
மதவா தனைப்பகை வன்மமுற்
ருேருமவ் வண்ணமரோ
இதவா யுடையரும் வஞ்சக
ரென்றவ ரிட்டமகல்
அதவா பதிதர் சகவாச
மும்மறுப் பாயன்பனே!

---

220 செய்தொழுகாய், நிறைவேற்ருய், இனமும் சதமென்றிருந்தே மயங்குவதேன்? என முடிக்க. ஒழுகாய், நிறைவேற்ருய் என்பன முன்னிலை எதிர் மறை முற்றெச்சங்கள். சதம்—நிலையானது. சாம்வரை—சாகும்வரை. சாம்—செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சத்தின் இடைக்குறை விகாரம்.

221 உலுத்கர்—உலோபர். மதவாதனை, பகை, வன்மம் உற்ருேரும் அவவண்ணம் அரோ எனப் பிரிக்க. மதம்+வாதனை—மதவாதனை—மடமை மணம். மதம், மதன் என்பதின் போலி. வன்மம்—தீராப் பகை அரோ—அசைநிலை இதவாயுடையர் இதமாக (இன்பமாக)ப் பேசும் வாயையுடையவர் இட்டம்—விருப்பம். அதவா—அதவாத, எதிர்த்துத் தாக்காத. பதிதர்—ஒழுக்கங் கெட்டவர். சகவாசம்—கூட்டுறவு; பழக்கம்.

நேரிசை வெண்பா

222 அன்புரு வான வமலநலன் புண்ணியத்தால்
அன்புரு வாக விலங்கிநட — அன்புருக்
கொண்டு சிதைதீமை கூறுமுயர் நன்மையினல்
மண்டு பழம்பகையும் மாற்று.

223 மாற்றிப் பிறக்கா மனிதரைப் பொன்னகரில்
ஏற்றி மகிழ்விக்க வேதுவிலை—போற்றி
அரிய திரியேக வையனைமன் ருடி
அரிய பிறப்பின்றே யாகு.

அறுசீர் விருத்தம்

224 ஆதுவாய் கிறித்து வுக்காளாகும்
வெந்துயருக் கஞ்சேல்
ஏகுவாய் சத்தி யத்தி லிடறலைப்
பொருட்டாய்க் கொள்ளேல்

---

222 அன்புருவான வான அமல நலன்—இயேசு. இலங்கி—விளங்கி. அன்பு உரு கொண்டு தீமை சிதை; கூறு உயர் நன்மையினல் மண்டு பழம்பகை மாற்று என முடிக்க. கூறுமுயர் நன்மை என்றது மேலோர் அனைவரும் ஒருங்கே உயர்த்திக் கூறும் நன்மை என்று அதன் சிறப்புரைத்தவாறு. பின் இரு அடிகளிலும் அன்பே வடிவாகித் தீமையை நன்மையினல் அழி என்று அறிவுரை தந்தார். இயேசுவின் வாழ்க்கையே அது. வள்ளுவரும்.

இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்,

என்று இவ்வுண்மையை எடுத்துரைத்தார். வள்ளுவர் கூறியதனோடு நில்லாமல், 'அமலநாதன் புண்ணியத்தால்' என்ற வழியையுங் காட்டி நெறிப்படுத்தினர் இவ்வாசிரியர்.

223 ஏது—வழிதுறை. மன்ருடி—பிடிவாதமாய் வேண்டிக்கொண்டு. இது இக்காலப் பொருள்; பழமையில் இத்தொடர், வழக்காடி என்ற பொருளிலே வழங்கிற்று. இச்செய்யுள் மறுபிறப்பின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றது.

224 ஆகும்—உண்டாகும்; வரும். சத்தியத்தில் ஏகுதல்—சத்தியத்தைப் பின்பற்றி நடத்தல். மூன்றும் அடி

சாகுவாய் பாவத் துக்கே தழைத்துய்தி
நீதிக் கோடிப்
போகுவாய் சீவ வார்த்தை புகன்றிடற்
கன்பா லெங்கும்.

வேறு

225 எங்கும் கொண்மூ விருப்பதுறழ்
இறைய வனுமென் றுல்வடிவில்
தங்கும் சிறுமை யடைவனலன்
தானே தெரிந்தெல்லாம் பரிப்பான்
மங்கும் அகக்கண் ணவருருவம்
வணங்கி யிழிவர் குணநடையில்
பொங்கும் விசுவா சிகளருவாய்ப்
பூசித் துயர்வர் இகபரமே.

நேரிசை வெண்பா

226 வர்த்தனை யாகுமுனில் மாபரிசுத் தம்விமல
கர்த்தனை நீங்காமற் காலமிதில்—நிர்த்தனை
செய்வாய் அறிவின்வழி சீயென் றுலகை விட்
டுய்வாய் சகசோதி யுள்.

227 சோதி மயமான சுந்தர மேலூரான்
ஆதி வினையை யறுத்துலகர்—நீதி
பெறவே கிருபை பெருத்தான் நிதனம
அறவே மரித்துயிர்த் தான்.

யில் 'பாவத்துக்குச் செத்து நீதிக்குப் பிழைப்பாயாக' என்றார். போகுவாய்—போவாய்.

225 இறைவன் மேகம்போல் எங்கும் இருப்பவன்; ஆனால், உருவில் தங்கி நிற்கும் சிறுமை இறைவனிடத்தில் இல்லை. எல்லாவற்றையுந் தானே தெரிந்து ஆளுகை நடத்துபவன் அவன் என்ற செய்தி முதலிரு அடிகளிலும் கூறப்படுகின்றது. பின் இரு அடிகளிலும் அகக்கண் மங்கியவரே உருவ வழிபாடியற்றிக் குணத்திலும் ஒழுக்கத்திலும் கீழாவர் என்றும், விசுவாசிகள் இறைவனை அருவாய் வழிபட்டு உயர்வர் என்றும் கூறுகிறார். இதனால் உருவ வழிபாடு கடிந்துரைக்கப்பட்டது

226 வர்த்தனை—பெருக்கம். விமல—தூய. நிர்த்தனை—வழிபாடு. சீ—இழிவுக்குறிப்புத் தரும் இடைச்சொல். சகசோதி—உலகுக்கு ஒளியான இயேசு.

227 மேலூரான்—மேலோக அதிபதி. பெருத்தான்—பெருக்கினான். நிதனம்—அழிவு; கேடு.

கட்டளைக் கலித்துறை

228 மரித்தும் பிழைத்து மெழுந்து மிருக்கு மகத்துவனை
உரித்தும் புகழு மருமையுந் தோன்றவே யொண்டியன்பு
தரித்தும் பிறருக் குரைத்தும் வதிதொண்டர் சத்துருக்கள்
சிரித்தும் சினந்து மருளா ரயரார் திருவருளே.

229 அருளே சகல விருதயத் தீங்கு மறத்துடைக்கும்
மருளே தொலைக்குஞ் சரியானபாதை வழிநடத்தும்
தெருளே யளிக்கு நவகனி யாக்குந் திகைக்கவரும்
இருளே யொழிக்குமெய்ஞ் ஞான சுகானுவ மீந்திடுமே.

நேரிசை வெண்பா

230 ஞான குணேந்திர நன்மைக் குருபரன்
ஈன மனுக்குலத்தை யீடேற்ற—வானந்
துறந்த பெருமன்பைச் சூழ்ந்தவர்க் கெல்லாம்
சிறந்த விதமாகத் தீட்டு.

அறுசீர் விருத்தம்

231 தீட்டுஞ் சுயம்பு நித்திய திவிய
சருவ வல்லவன்

---

228 உரித்து—உரிமை. தரித்து—தாங்கி. வதி தொண்டர்—வாழுந் தொண்டர், வினைத்தொகை. சத்துருக்கள் சிரித்தும் சினந்தும் மருளார், திருவருள் அயரார் எனக் கூட்டியுரைக்க. மருளுதல்—மயங்குதல். அயர்தல்—சோர்ந்துபோதல்.

229 இருதயத் தீங்கு—கெட்ட நினைவு. அறத்துடைக்கும்—முற்றிலும் நீக்கும். அருளே, மருளே, தெருளே, இருளே ஏகாரங்கள் தேற்றப் பொருளன. நவகனி செய்யுள் 12; அடி 21-இன் உரை காண்க. சுக+அனுபவம்—சுகானுபவம்: வடமொழிப் புணர்ச்சி; நல்வாழ்வு எனப் பொருள்படும்.

230 குண+இந்தரன்—குணேந்திரன்; வடமொழிப் புணர்ச்சி; குணத்திற் சிறந்த தலைவன் என்பது பொருள். குருபரன்—குருவாகிய பரன்; இருபெயரெட்டுப்பண்புப் பெயர். பரன்—கடவுள். குலம்—தொகுதி; கூட்டம். ஈடேற்ற மீட்க. பெருமன்பு—பேரன்பு; பண்புத் தொகை. சூழ்ந்தவர் சுற்றியுள்ளவர், வினையாலணையும் பெயர். விதம்—முறை. தீட்டு—புகட்டு.

231 சுயம்பு—தானே தோன்றிய முதல்வன். நித்தியன்—காலவரையறை இல்லாதவன். திவியன்—பரிசுத்

காட்டும் விசிட்ட வழிசெலல் கடமை
நன்மை சிலாக்கியம்
சூட்டு முலக வாழ்க்கைகள் சுவர்க்க
பேற்றிற் கீடலல
மோட்டு மாக்க ளிதுதேரார் முட்டுண்
டழுது தடவுவரே.

கட்டளைக் கலித்துறை

232 அழுவார் இறந்தபின் சீவ
னிருக்கையி லாதரியார்
தொழுவார் இடைஞ்சலிற் றேடா
ரிடும்பாய்ச் சுகமுடுக்கில்
விழுவார் உருவமுன் போற்று
ரருவ விமலனடி
கழுவார் உளத்தை யிவர்காண்
டலைவன் கறைநதியே.

கலிவிருத்தம்

233 நதியாடிப் பாவதுயர் நலியா விருத்த
நதியாடிப் போக்குதலும் நேரா திகத்தார்
பதியாடி யோட்டுதலும் பற்று கிறித்தின்
துதியாடி விசுவாசச் சூழ்வே துரத்தும்.

தன்; தூயன். விசிட்டவழி—மேலானவழி. சிலாக்கியம்—புகழ். ஈடு—சமம். மோட்டுமாக்கள்—உலகப் பெரு மக்கள். தேரார்—முற்றெச்சம்.

232 சீவன் இருக்கையில் ஆதரியார்; இறந்தபின் அழுவார், இடும்பாய்ச் சுகந்தேடார்; இடைஞ்சலில் முடுக்கில் தொழுவார்; அருவ விமலன் அடிபோற்றார் உருவம் முன் விழுவார்; இவர் காண் கறை உள்ளத்தைத் தலைவன் நதியே கழுவார் என வினைமுடிக்க. ஆதரித்தல்—அன்போடு காத்தல். இடும்பு அகந்தை. முடுக்குதல்—நெருக்கப்படுதல். அருவவிமலன உருவ மற்ற கடவுள். உருவம்—விக்கிரகம். போற்றார்—போற் றாராகி, முற்றெச்சம் கறை உளம் பாவக் கறை உள்ள மனம். தலைவன் நதி—தலைவனாகிய நதி; உருவகம்.

233 பாவத் துயர் நலியா இருத்த இகத்து ஆர் நதி ஆடிப் போக்குதலும் நேராது; பதி ஆடி ஓட்டுதலும் பற்று, கிறித்தின் துதிபாடி (தலைவன்) நதியாடி விசு

அறுசீர் விருத்தம்

234 துரத்துமே விசுவா சந்தான் சுற்றிய பாவ வேட்கை
கரத்துமே போச ஞதி கவலைகள் பகைவ ரச்சம்
நிரத்துமே நெஞ்ச மாவி நிறைந்த சந்தோச மன்பால்
உரத்துமே பொருதத் தாங்கி உதவும்நல் வெற்றி தானே.

நேரிசை வெண்பா

235 தாஞக நின்ற சயம்பன் புதுப்பிறப்பு
நாஞக செய்நன்றி நான்மறவேன்—தேஞகத்
தித்திக்கு தென்பெருமான் செல்வத் திருநாமம்
முத்திக்கு வாசன் முகம்.

236 முகங்கோணு தேற்று முத்தா விருத்தி
அகங்கோணு தாசீர் வதித்துச்—சுகங்கோணு
திங்குஞ் சுவர்க்கத் தினிலுந்தற் காப்பானீ
மங்குங் குணஞ்செயலை மாற்று.

வஞ்சி விருத்தம்

237 மாற்று சஞ்சலந்
தேற்று துக்கரைச்
சாற்று யேசுவைக்
கூற்று நீங்குமே.

வாசச் சூழ்வே துரத்தும் என முடிக்க. நலியா—நலிந்து; செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினை எச்சம். இகத்து—இவ்வுலகில். ஆர்—நிறைந்துள்ள. நதி—சாதி ஒருமை. பதி—புண்ணியச் சேத்திரங்கள். இதுவும் சாதி ஒருமை. ஆடி அலைந்துதிரிந்து; நீராடி. பற்ரு—கூடா. சூழ்வு—தழுவுதல். துரத்தும்—பாவத்துயரை ஓட்டும்.

234 ஏகாரங்கள் நான்கும் அசைநிலைகள். தான் அசைநிலை. கரத்துதல்—மறைத்தல். போசஞதி—உணவு முதலியன. நிரத்தும்—நிரப்பும். உரத்து—வலியுடன். பொருத—போரிட.

235 சயம்பன்—வெற்றிவீரன். வாசன் முகம்—வாசலாகிய முகம்; இருபெயரொட்டு.

236 கோண—கோணது; ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். முத்தா இருத்தி—முத்தாக இருத்தி. சுகங்கோணது—சுகம் கெடாது. மங்கும்—கெட்ட.

237 துக்கர்—துக்கமுடையார்.

நேரிசை வெண்பா

238 நீங்கும் மரணபயம் நித்திய சீவதிடன்
ஓங்கும் மனமகிழ்ச்சி யுண்டாகும்—ஏங்கும்
கொடிய வலகை குணமாறும் முற்றும்
முடிய விறைநேச முண்டு.

239 மூண்ட நெருப்பாக முத்திநல தேவர்வி
ஆண்ட தெனையகா வாச்சரியம்—பூண்ட
கருத்தோ டிறைஞ்சுனக்குங் கைகூடு மென்றும்
திருத்தோ ளணைக்குந் திறன்.

240 திறனில்லார் நன்மைசெய்யார் தீனர்க்குச் சற்றும்
அறனிலலார் தாங்கார் அகதி—பிறனில்லார்
வாழ்வை யழுக்காறு வைத்துச் சிரிப்பர்
தாழ்வை யறிவைதப்பி தம்.

241 தம்பிரான் றஞ்சாவூர் தான்போக வெண்ணிலார்
எம்பிரான் என்றழ தேகினர்பின்—நம்பிரான்
பச்சை மரத்தினும் பட்டமரத திற் கென்றான்
மிச்சை வினையருற் றார்.

242 உற்றா லென்னு முடன்பிறப்பா லென்னுகும்
பெற்றா லென்னும் பிரபஞ்ச—மற்றா
லென்னும் இயேசு இறையவனு லெல்லாமாம்
பொன்னுந் திருவடியைப் போற்று.

---

238 திடன்—கலங்கா நிலை; உறுதிப்பாடு. அலகை—பசாசு.

239 பூண்ட கருத்தோடு இறைஞ்சு; என்றும் திருத்தோள் அணைக்குந் திறன் உனக்கும் கைகூடும் என முடிக்க.

240 தீனர்—ஏழைகள். அகதி—ஆதரவற்றவன். இல் ஆர் வாழ்வு—வாழ்வாங்கு வாழும் இல்வாழ்க்கை அழுக்காறு—பொறாமை.

241 தம்+சா+ஊர்—தஞ்சாவூர்; கொல்கதா எண் இலார்—இறைவன் திருச்சித்தம் அறியார் பச்சை மரத்திற்கே இப்பாடாயின் பட்ட மரத்திற்கு எப்பாடு என்ற இறைவன் திருமொழி மூன்றும் அடியில் உள்ளது. உலக வாழ்க்கை பாடு நிறைந்தது என்பது பொருள். மிச்சை—அறியாமை.

242 பிரபஞ்சம்—இவ்வுலகம்.

243 போற்று நனிநேர் பொருந்திவீ தாவகலச்
சாற்று விரைந்து சகலருக்கும் — நேற்றுப்
பிறந்தான் நிதியிருககப் பேசாதின் றையோ !
இறந்தான் எனுமுலகத் தில்

அறுசீர் விருத்தம்

244 உலகமே கேளா யுன்னி லொருசுக மில்லை நாளும்
கலகமே செய்கின் றாயுன் கபடங்க ளறிந்து கொண்டேன்
சலகமே முடிக்கச் சென்று சகதிபூ சுதலுன் னேசம்
திலகமே தெனக்கென் றால்மா திவ்விய கிறித்தன் பாமே.

கட்டளைக் கலித்துறை

245 பாசம் சிலுவைப் பிராணேசன் மீது பதித்தவர்க்கு
மோசம் அணுவள வேனும வராதுயர் முததிசெலவர்
நீசம வருதது மலகைசொல் பாதை நிலைததவர்க்கோ
நாசம் இருமையும், நற்றுற வோரதை நாடிலரே.

அறுசீர் விருத்தம்

246 துறந்தார் துறந்தார் பயனென்கொல்?
சுயநீதி துறந்தாலே சுகபலனும்.
இறந்தார் இறந்தார் பயனென்கொல்?
இருமன மிறந்தாலே எழிற் சுகமாம்.
மறந்தார் மறந்தார் பயனென்கொல்?
வலுபவ மறந்தாலே மாஞானமாம்
சிறநதா சிறந்தார் பயனென கொல?
திருக்கதி சிறந்தாலே தினம் புகழாம்.

---

243 *வீ—அழிவு. தா அகல—குதித்து அகலுமாறு. வீ தா அகல நனி நேர் பொருந்திப் போற்று என முடிக்க. நேற்றுப் பிறந்தான் இன்று ஐயோ! இறந்தான் என்னும் உலகத்தில் நிதி இருக்க, சகலருக்கும் விரைந்து சாற்று என முடிக்க.*

244 *சலகம்—நீர். சலகம் முடித்தல்—நீராடல்.* **'சலகமே முடிக்கச் சென்று சகதி பூசுதல்'** *பழமொழி. திலகம்—சிறந்தது.*

245 *பிராண+ஈசன்—பிராணேசன்; வடமொழிப் புணர்ச்சி. துறவோர்—இவ்வுலக இன்பத்தைத் துறந்தோர்.*

246 *இருமனம்—அஞ்ஞானம்.*

வேறு

247 கதிவழி கிறித்து வென்னுங் கற்புறுங் குமர சாமி
துதிவழி வழியா யந்தத் தூயவன் பொற்பா தங்கள்
மதிவழி செல்வாய் ஞான மகிழ்ச்சி யுமடைவாய் பேயின்
சதிவழி சொல்லாய்ச் சீராய்த் தரணிநாட் போக்குவாயே.

எண்சீர் விருத்தம்

248 சீரான விருதுறவுஞ் செப்பக் கேளாய்
தீயபுவி மார்க்கமா சாரம் நீக்கி
நேரான கிறித்துசபை சேர்ந்து நிற்றல்
நிசமான புறத்துறவாம் நெஞ்சிற் றங்கும்
காரான சுயநீதி யறவே விட்டுக்
கருணைநிறை மாதேவ நீதி மேவல்
பேரான வகத்துறவா முண்மை ஞானி
பெறுமகிழ்ச்சி மற்றெவரும் பெற்றிடாரே.

எழுசீர் விருத்தம்

249 பெற்றவர் அடங்கி லோபிக ளாகார்
பிறருயக் கருணைகொண் டளிப்பார்
உற்றவர் புரைய நடிப்பவர் பேசா
தூமைபோல் மௌனமென் றுரைப்பார்

---

247 கதி--மேற்கதி. சதி—சூழ்ச்சி.

248 இரு துறவு: ஒன்று, தீய புவி மார்க்கம் ஆசாரம் இவை நீக்கி நேரான கிறித்துசபை சேர்ந்து நிற்றலாகிய புறத் துறவாம்; மற்றது, நெஞ்சில் தங்கும் கடுமையான சுயநீதியை அறவே விட்டுக் கருணை நிறைந்த மா தேவ நீதி மேலான அகத் துறவாம். பேர்—புகழ். (இவ்விரு துறவும் மேற்கொண்ட) ஞானி பெறும் மகிழ்ச்சியை மற்றெவரும் பெற்றிடார் என அமைக்க.

249 பெற்றவர்—இரு துறவால் மகிழ்ச்சி பெற்றவர். லோபிகள் ஆகார், கருணைகொண்டு பிறருக்கு அளிப்பர் என முடிக்க. புரைய—போல. (மற்றை துறவியர்) உற்றவர் புரைய நடிப்பவர்; பேசாது ஊமைபோல் மௌனம் என்று உரைப்பர் எனக் கூட்டியுரைக்க. கற்றவர்—இரு துறவும் பற்றிக் கற்றறிந்தவர். அருளால்—அருளுணர்வால். சுருதியோடு—மறையோடு பொருந்த.

கற்றவர் அருளா லிதபிழை யெனவே
கண்டனை சுருதியோ டுரைப்பார்
நற்றவர் ஏற்பார் போலிகள் புடைப்பார்
நமக்கென்? நாளைகண் சிவப்பார்.

கட்டளைக் கலித்துறை

250 பாரில் மவுட்டியம் மேட்டிமை யேறியே பாவநரர்
சீரில் வருணமுந் தீண்டலுங் கூறினர் தீமைநன்மை
ஊரில் உயர்விழி வாதிக்குக் காரண முற்றுணரார்
தாரில் முளைத்த பெருஞ்சாபப் பூண்டென்ப சாதுக்களே.

251 சாதுக்ள் நோசில தோற்றியும் மாறாத தடித்தனமாய்
வாதுகள் பேசி வெடுவெடுப் பாகி மனம்வருந்தக்
கோதுகள் மேவி யிடராகி மற்றோர் குணப்படுதற்
கேதுகள் ஆகா திருப்பதென் மாயமோ? கேட்டறியே.

நற்றவர்—மேற்கண்ட இருதுறவால் வீடுபேறு அடைய அதனையே கருதி நோன்பிருக்கும் மேலோர். போலிகள்—போலித் துறவிகள். கண்சிவப்பார்—அழுதுநிற்பார்.

250 மவுட்டியம்—அறியாமை. மேட்டிமை—அகந்தை; செருக்கு. பாவநரர்—பாவமனிதர். சீர் இல்—மேம்பாடில்லாத; கீழான. வருணம்—சாதி. தீண்டல்—தீண்டாமை (untouchability). பாவநரர் ஊரில் தீமை நன்மை, உயர்வு இழிவு ஆதிக்குக் காரணம் முற்றுணராதார், பாரில் மவுட்டியம், மேட்டிமை ஏறியே சீர் இல் வருணமும் தீண்டலும் கூறினர்; சாதுக்கள் (அவை) தாரில் முளைத்த பெருஞ் சாபப் பூண்டு என்ப, என முடித்துக் கொள்க. தார்—தாரணி; பூமி. சாபப் பூண்டு—சாபமாகிய பயிர்; இருபெயரொட்டுப் பண்புத் தொகை. சாதுக்கள்—அருள்நெறித் தொண்டர்.

251 நோசில—(வருந்தும் மனம் மாறி) வருத்தமற்று வாழுதற்குரியன. தோற்றியும்—அறிவுறுத்தியும். அவற்றைக் கேட்டும் மாறாத தடித்தனமாய்..............எனக் கூட்டியுரைக்க.

நேரிசை வெண்பா

252 கேட்டேன் மறுபிறப்பு கிட்டாத வாசியே
போட்டேன் அவர்கோளைப் பொய்யபலம்—மாட்டேன்
சாதிப் பெருமைத னையொருக்கா லுங்காட்ட
ஆதி முறைபார்த்த தால்.

253 பார்ப்பார்க்குச் சாதியுண்டோ பற்றிழிவுண் டோபறைக்கு
சேர்ப்பார்க்கு மேன்மை சிறுமையுண்டோ ?-ஆர்ப்பார்க்கு
கூச்ச முளவோ, குருதீட்சை பெற்றோர்க்கு
நீச்ச முளவோ? நிகழ்த்து.

அறுசீர் விருத்தம்

254 கத்துவோர் சாதி பேதம் காசினி யோரைவீணாய்
எத்துவோர் மூட ரென்றே யியம்புவர் வித்தர் பத்தர்
நத்துவோர் பிரபஞ் சத்தை நட்பெளி யோரில் வையார்
முத்துவோர் கிறித்து பாதம் முனைகிலார் யாரையுந் தான்

---

252 கேட்டேன்—(நோசில கேட்டும் குணப்படுதற்கு ஏதுகள் ஆகாதிருக்கும் மாயம்) கேட்டேன். போட்டேன்—தள்ளினேன். ஆதி முறை பார்த்ததால், சாதிப் பெருமைதனை ஒருக்காலுங் காட்டமாட்டேன், (அது) பொய்யபலம் என முடிக்க. ஆதிமுறை—உலகத்தைக் கடவுள் படைத்த படைப்பு முறை. பார்த்தால்—தெரிந்து கொண்டதால்: பொய்யபலம்—பொய்யான பலம்.

253 பார்ப்பார்—ஆதி முறை அறிந்து அதனைப் பார்ப்பார்; பறை—அதனை உலகுக்கு அறிவிப்பவர். சேர்ப்பார்—இறைவனுக்கு அதனைத் துதி சேர்ப்பார். ஆர்ப்பார்—பேரின்பம் துய்த்து மகிழ்பவர். கூச்சம்—நாணம். நீச்சம்—இழிவு; நீசம் என்பதன் விகாரம்.

254 கத்துதல்—பொருளில்லா வெற்றுரை பகர்தல். காசினி—பூமி. எத்துதல்—ஏமாற்றுதல். வித்தகர்—அறிஞர்; ஞானியா. பிரபஞ்சத்தை நத்துவோர் எளியோரில் அன்பு வையார்; கிறித்து பாதம் முத்துவோர் யாரையும் முனைகிலார் என முடிக்க. நத்துவோர்—(சாதிபேதம் கத்துவோர்) கெடுப்பவர். முனைகிலார்—வெறுப்புக்கொள்ளார்.

வேறு

255 தானே இரங்கி ரட்சணியங்
தரவே குமர னுவியருள்
தேனே பழித்த மறையானைச்
சேர்ந்தே ரட்சை யுடனடைநீ
வானே புகுதந் துறுமங்கிலை
மயக்கி யலகை கெடுத்துவிட்டான்
கோனே வருந்தி யழைக்கு
மின்றே குருநன்னீதி யடைவாயே.

256 நீதி யுள்ளோ ரிலரெனவே
நிகழ்த்திவ் விரண்டே பிரிவொழியச்
சாதி விததி யாசமுரை
சாத்தி ரப்பொய் புரளுபவர்
ஆதி தேவ கடுங்கோப
ஆக்கினைபெற் றேங்குவர்பின்
பூதி வருண பேதமென்றே
போட்டிங் குடைத்தார் ஞானிகளே.

வேறு

257 ஞானிகள் இயேசு என்னும்
ஞானத்தை யுடையோ ரென்றும்
யோனிகள் பாவ வார்த்தை
மொழிந்திடார் மிகச்சி றந்த
மானிகள் தீமை விட்டு
மாதுய்ய வழியிற் செல்வோர்
தானிகள் மோட்ச வீட்டைச்
சார்ந்தவர் ஐயம் இன்றே.

---

255 கோன்—இயேசு இறைவன். நல்+நீதி—நன்னீதி.

256 சாதி இரண்டு; நீதியுள்ளோர், நீதி இல்லார். புரளுபவர் — பொய்யுரைப்போர். பூதி—புழுதி. வருணம்—சாதி.

257 ஞானி—அறிவாளி; மோனி—மௌனம் பூண்டோன். மானி—மானமுடையோன்; நற்கொள்கை வாதி. தானி—உரிய இடத்திலிருப்பவன்.

நேரிசை வெண்பா

258 இன்றே இரட்சிப்பை யெய்தாமற் பாவத்தில்
நின்றே அழிய நிகழ்த்தும்பேய்—நன்றே
பெறுவாய் அவனுடைய பேச்சைக்கே ளாயேல்
உறுவாய் இரட்சை உடன்.

கட்டளைக் கலித்துறை

259 உடனே யருமைக் கிறித்துவை நோக்குநீ யுண்டிரட்சை
திடனே யிகத்தி லதுகிடை யாதெனச் செப்பியகம்
மடனே மிகுந்துழல் வாய்ஞானர் வாதம் வழுத்திலெதிர்த்
துடனே விளக்குன் அனுபவம்வேத வுறுதிகொண்டே.

260 கொண்டவர் ஈதல் கடமை பகிர்ந்து கொடுகிடைத்தால்
கண்டவர் விள்ளா திருந்தால் கிருத்திமர் காணலின்றி
விண்டவர் பொய்யர் அறிதுங் குணநடை விள்ளுதலில்
பண்டவர் கூறிய தெல்லாஞ் சரியெனப் பற்றிலமே.

261 பற்றுவம் தூய சுருதிக் கிணங்கிய பாகமுற்றுஞ்
சுற்றுவம் சற்றும் விலகா தவற்றைச் சுகவழிக்குத்
துற்றுவம் செல்லா தவரை யிடித்துச் சுறுசுறுப்பாய்
ஏற்றுவம் போதனை யத்திரம், மாநலன் எந்துணையே.

---

258 நிகழ்த்தும்—சொல்லும். உறுவாய்—அடைவாய்.

259 அருமைக் கிறித்துவை நோக்கு நீ, இரட்சை உடனே உண்டு. இகத்தில் அது கிடையாது எனத்திடனே செப்பி அகம் மடனே மிகுந்து உழல் வாய்ஞானர் வாதம் வழுத்தில், எதிர்த்து உடனே உன் அனுபவம் வேத உறுதிகொண்டே விளக்கு என முடிக்க. உழல்—திரியும். வாய்ஞானர்—வாய்ச்சொல் அளவில் ஞானம்பேசுபவர்.

260 கிருத்திமர்—வஞ்சகர். காணலின்றி விண்டவர்—ஒன்றைக் காணாதுங் கண்டது போற் பேசுபவர். குணநடைவிள்ளுதலில்—அவர் குணமும் நடையும் நமக்கு அறிவிப்பதிலிருந்து. பண்டு+அவர்—பண்டவர். பற்றிலம்—ஏற்றிலம்.

261 தூய சுருதிக்கு இணங்கிய பாகம் முற்றும் பற்றுவம்; அவற்றைச் சற்றும் விலகாது சுற்றுவம்; சுக வழிக்கு (அவற்றைத்) துற்றுவம் என முடிக்க. சுற்றுதல் — அணிதல். துற்றுதல் — மேற்கொண்டு நடத்தல். எற்றுதல்—தாக்குதல். போதனை அத்திரம்—போதனையாகிய அம்பு; உருவகம்.

262 துணையாகி நின்று செயந்தருவான் துயர்சூழ்ந்த தென்றால்
புணையாகி வந்து கரைக்கு நடத்துவன் பூரணமாய்
அணையாகி மோசங்கள் போக்குவ னீத மரியநிற்கில்
பிணையாகி சஞ்சலம் மாற்றிடு வான்புகழ் பேசுவனே.

நேரிசை வெண்பா

263 பேசுவேன் இப்போநான் பேரிரக்கன் செய்தவெலாம்
கூசுவேன் முன்னாள் குவலயத்தீர்—ஊசுவேன்
சத்திய யேசுவெனைத் தற்காத்து மீளாக்கால்
நித்திய காலமும் நின்று.

எண்சீர் விருத்தம்

264 நின்றேன் அலைந்தேன் நிறைமுட் காட்டில்
நீச ரோடுங் கூடிப் பவத்தைத்
தின்றேன் வருங்கே டுணரா தயர்ந்தேன்
செகமே சதமென் றகச்சாட் சியினைக்
கொன்றேன் இரங்கிப் பகவா னியேசு
கொடுத்தான் பவமன் னிப்பு நீதி
வென்றேன் பழஞ்சீர் அல்லே லூயா!
வேறே மனித னானேன் ஆமென்.

நேரிசை வெண்பா

265 ஆமே யெவர்க்கு மருமிரட்சை நிச்சயம்
ஆமே பரிசுத்த மாரொழுக்கம்—ஆமே
நிலைக்கும் கிருபை நிறைவிசுவா சத்தால்
அலைக்கும் பகையழியு மால்.

வெண்டாழிசை

266 அழியு முன்பா வங்கண் முழுதும்
இழியு மினிப்பா வஞ்செய் யிட்டம்
வழியு மருணம் பு.

---

262 நீதம் அரிய—அநீதி.

263 ஊசுதல்—பதனழிதல்; கெடுதல்.

264 அகச்சாட்சி—மனச்சான்று.

265 அருமை+இரட்சை—அருமிரட்சை; அரியமீட்பு. ஆர்—நிறைந்த. அலைக்கும் பகை—வருத்தும் பகை.

266 அருள் வழியும் நம்பு எனப் பிரிக்க.

அறுசீர் விருத்தம்

267 நம்புவாய் இயேசு னக்காய் நரருருத் தரித்தார் மாண்டார்
பம்புவாய் துதியு யிர்த்தார் பரமுற்றார் வருவார் இன்றும்
வெம்புவாய் இல்லா லான்ம மீட்சியற் றெரிதீப் பள்ளம்
சம்புவாய் அப்பம் போட்டுச் சங்கடஞ் சுமந்த நேரே.

நேரிசை வெண்பா

268 நேரே யொழுகு நிமல னேசு சென்றவழி
காரே நயனமதைக் கற்புநெறி—சீரே
பொருத்தாய் இருதயத்தை பெத்தரிக்க மாகப்
பொருத்தா யதிலற்பப் போது.

அறுசீர் விருத்தம்

269 போது போகு முன்னமே பூர்த்தி யாக்குன் ரட்சிப்பை
ஏது மில்லை செத்தபின் ஏற்ற ரட்சை மேவவே
வாது பேசி நிற்பதென்? வல்ல வாவி சொல்வழி
கோது நீக்கும் நல்வழி கூடு வாய்மெய்ஞ் ஞானமே.

நேரிசை வெண்பா

270 ஞானமென வீணாய்ப்பேர் நாட்டுலகா சாரங்கள்
ஊனமென விட்டேசை யொண்டுதலே—ஞானமெனத்
தேறித் தெளிந்தடைந்து சிந்தைசெயல் சுத்தாங்கம்
ஊறி மணக்க வொழுகு.

---

267 துதிபம்புவாய்—துதிசெய்வாயாக. சம்புவாய்—சாம்புவாய்; வாடுவாய். அப்பம் போட்டுச் சங்கடஞ் சுமத்தல் முது மொழி. நேர்—போல.

268 காரே நயனம்—கருவிழி. ஏகாரம் அசைநிலை. கற்புநெறி—வேதம் கற்பித்த நெறி. சீரே—முறையாக. ஏகாரம் அசைநிலை. பெத்தரிக்கமாக—பெருமையாக.

269 போது—பொழுது; வாணாள். ஏதும்—எவ்வழியும். கோது—குற்றம்.

270 உலக ஆசாரங்களை ஞானம் எனப் பெயர் நாட்டி வழங்குகின்றனர்; அதனை ஊனம் (கேடு) என விட்டு இயேசை ஒண்டுதலே ஞானம் என உண்மை ஞானத்தை விளக்கினர். சுத்த+அங்கம்--சுத்தாங்கம்; தூய ஒழுக்கம். ஊறி—திளைத்து; பண்பட்டு. மணக்க—எங்குங்கமழ.

கட்டளைக் கலித்துறை

271 ஒழுகு வியலக் குழுவி னிலையாய் உளமிலங்க
முழுகு கிறித்து குருதி நதிக்கண் முடையொழியும்
தொழுகு தலைநீ யகலேல் நெருங்கு துயருறுநாள்
அழுகு தலும்பிர மிப்பது மாகா தறிந்துகொள்ளே.

272 கொள்ளேன் உலக வஙித்திய தேவரைக் கூட்டுறவாய்
தள்ளேன் நடுக்குந் துரிதம் வரினுமோர் தற்பரனை
விள்ளேன் முறுமுறுப் பாகப் பிணிதுயர் மேவுகையில்
துள்ளேன் பரம குருமொழி தாண்டிச் சுயவழியே.

கலி விருத்தம்

273 தாண்டி ஓடியே சங்கையில் லாதவர்
மாண்டி றங்கினர் வன்குழி யென்பதற்
கீண்டி யம்புவ தேன்கரி நீநிதம்
காண்டி ருக்கிருய் கானமான் போனிலேல்.

அறுசீர் விருத்தம்

274 நில்லாய் பவிகள் செலும்பாதை
நீங்கு பரிகா சரையொழித்து
செல்லாய் வேதம் ஓரார்பால்
சேராய் மோட்சம் நினையாரை
சொல்லாய் புறணி யவதூறு
சுவையேல் பாவி களினுணவு
கொல்லாய் அவமாய்ப் பிராணிகளைக்
கொடுமை பரனுக் கருவருப்பே.

---

271 முடை—துர் நாற்றம். தொழுகுதல், அழுகுதல் என்பனவற்றில் கு ஒலித்துணை; முறையே தொழுதல், அழுதல் என ஆகும். பிரமிப்பது—வியத்தல்.

272 துரிதம்—கேடு. தற்பரன்—கடவுள்.

273 சங்கை—ஒழுங்கு; முறை. கரி—சான்று. கண்டிருக்கிருய் எனற்பாலது தொடை நோக்கி நீண்டு காண்டிருக்கிருய் என நின்றது (கண்டும்) கான மான் போல் நிலேல் என்றது அறிவு தெளிவாயாக என்றவாரும்.

274 புறணி—புறங்கூறுதல். அவதூறு—பழிச்சொல். அவமாய்—வீணாக. பரன்—கடவுள்.

நேரிசை வெண்பா

275 பேதை மனிதர் பிரானுரை தேராமல்
தீதை யியற்றித் திரிவர்பின்—வேதைப்
படுவ துணரார் பறவையொட் டாலே
அடுவ தறியுமோ வத்து.

அறுசீர் விருத்தம்

276 அத்து விதத்தை யறியாம
லேயோ? வுலகின் மாக்கள்சிலர்
அத்து விதர்தா மெனவுன்னி
யகந்தை யாற்றும் பிரமமென்பர்
அத்து விதத்தை யறிந்தா
லவ்வாறு கதைக்கா ரைக்கியமே
அத்து விதமென் றதேதெளிந்
தமலமார்க்கம் நடப்பாரே.

277 நடப்பார் சுத்த சுவிசேட
ஞானந் தெளிந்தோ ரருளாலே
கிடப்பார் முடவர் போலவத்திற்
கிருபை யிழந்தோர் மருளாலே

---

275 வேதை — வேதனை. பறவை ஒட்டாலே அழி வது அறியாது என்பது பழமொழி. இதன் கண் வேற் றுப் பொருள் வைப்பணி அமைந்துள்ளது.

276 உலகில் சிலர் தம்மை அத்துவிதர் (கடவுளோடு ஐக்கியமானவர்) என எண்ணி, அகந்தையால் தம்மையே பிரமம் (கடவுள்) என்பர்; ஒரே கடவுளை அறிந்தால் அவ்வாறு வீணைப் பேசாமல், இரண்டற்றது திருச் சபை ஐக்கியமே என்று தெளிந்து குற்றமற்ற நெறிப் பட்டு ஒழுகுவர் என்றவாறு. அத்துவிதம் என்பது சங் கராச்சாரியார் அறிவுறுத்திய சமயநெறி. கடவுளும் உயி ரும் இரண்டல்ல ஒன்றே என்பது அதன் கொள்கை.

277 சுத்த சுவிசேடஞானம் அருளாலே தெளிந்தோர் நடப்பார்; மருளாலே கிருபை இழந்தோர் முடவர் போல் அவத்திற் கிடப்பார்; மனது திரும்பினரேல் கடப்பர்; காணாப் பொருளை அடைதல் ஒக்கும் சடப் பார்வை கொண்டு அருவமதைத்தான் காண வலியன் கிடையானே என முடிக்க. சடப்பார்வை ஊனக்கண்ணால் பார்க்கும்

கடப்பார் மனது திரும்பினரேல்
காணுப் பொருளை யடைதலொக்கும்
சடப்பார் வைகொண் டருவமதைத்
தான்காண் வலியன் கிடையானே.

278 கிடையான் சொந்த நீதியுள்ளான்
கிளம்பு மலைசூ ழும்புவியில்
சடையான் தேவன் விசுவாசம்
சார்ந்தோன் நீதி கரிப்பதற்கே
துடையான் எவனு மகம்படிந்த
துகளைச் சொந்தக் கிரியைகளால்
இடையான் நம்பும் எவர்களையும்
எம்மான் சுத்தி கரிப்பதற்கே.

வேறு

279 கேடி கேடி மூன்றினுல்
கிட்டி ரண்டை ரண்டிலே
நாடி நாடி யொன்றினை
நல்ல வாறு கண்டறிந்
தோடி யோடி யொன்பதும்
உண்மை யாய்க்கொ டுப்பையேல்
கோடி கோடி யானந்தம்
கொள்வை மோட்ச வீட்டிலே.

பார்வை. அருவம்—உருவமற்ற கடவுள். வலியன்—ஆற்றலுடையவன்.

278 சொந்த நீதியுள்ளான் கிடையான், தேவன் விசுவாசம் சார்ந்தோன் (சொந்த) நீதி கரிப்பதற்கே சடையான், சொந்தச் கிரியைகளால் எவனும் துடையான், எம்மான் சுத்திகரிப்பதற்கே இடையான் என முடிக்க. கிடையான்—இல்லை. சடையான்—சோர்வடையான். அகம் படிந்த துகள்—மனமாசு. இடையான்—பின்வாங்கான்.

279. கேள்+தி—கேடி; கேட்பாயாக. மூன்று—சுத்த விசுவாசம், மெய்யாம் நம்பிக்கை பரிபூரண அன்பு (தனிப்பாடல் திரட்டு. திட்டூர் தேசிகர் 204). இரண்டு—இம்மை, மறுமை. இரண்டிலே—செபத்திலும் விசுவாசத்திலும். ஒன்று—ஒரே கடவுள். ஒன்பது—ஆவியின் கனிகள் ஒன்பது (கலாத்தியர் 5: 22, 23).

280 வீட்டி லேயி ருந்தவன்
வேட ரைமே லானமா
நாட்டி லேயி ருத்தவே
நாடி யன்பே ரூபமாய்க்
காட்டி லேயெ ழுந்ததும்
கடிய பாடு பட்டதும்
எட்டி லேய டங்கிடா
எண்ண ரும்மன் பாகுமே.

கலி விருத்தம்

281 அன்பே யோருட லாகியம் புவியினில்
துன்பே சிலுவையிற் சுமந்திளைத் தெமக்குயர்
இன்பே யருளிய எம்பெரு மானையா
பின்பே யடைவனென் றேயுரை பேதையே!

நேரிசை வெண்பா

282 பேதை மனந்திரும் பிப்பிழைத் தென்றுமிதி
சூதை யொழிக்கச் சுககாலம்—ஈதை
வெறியில் நெறிகேட்டில் வீம்பாஞ்சூ தாட்டில்
உறியின் முடிவிலென்ன வுண்டு?

283 உண்டு குடித்திங் குடுத்துறங்கி ஞற்கணக்கு
கொண்டு வரச்சொலிக் கூப்பிடும்நாள்—வண்டு
சருவா திருக்கச் சரிநிற்பா யோநீ
கருவாக் கினன்சமு கம்.

---

280 வீட்டிலே இருந்தவன்—திருச்சுதன்; வீடு—முத்தியுலகம். வேடர்—வேடரொத்தவரை. மேலான மாநாடு—பரலோகம்; முத்தியுலகம். நாடி—தேடி. ரூபம்—வடிவம். காட்டிலே—காடு போன்ற இவ்வுலகிலே. எழுந்தும்—எழுந்தருளியதும்; வந்ததும். கடிய—கொடிய. எண் + அரும்—எண்ணரும்; அளவிடற்கு அரிய.

281 எம்பெருமான்—எம் தலைவனை இயேசு.

282 பேதை மனந்திரும்பிச் சுககாலம் பிழைத்து, என்றும் சூதை ஒழிக்க மிதி சூதை; ஈதை (இவ் வாழ்வை) வெறியில், நெறிகேட்டில், வீம்பாம் சூதாட்டில் உறியின் (அடைவித்தால் கழித்தால்) முடிவில் என்ன உண்டு? என முடிக்க. உறியின்—கழியின்.

283 சருவுதல்—மருவுதல். வண்டு சருவாதிருக்க நீ கருவாக்கினன் சமுகம் சரிநிற்பாயோ? என முடிக்க.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

284 கம்மென வாசம் வீசிக்
கனநரர் திரும்பப் போதம்
கொம்மென விளங்க நிற்பாய்
குலகுரு வாவி தாவி
இம்மென இந்நற் செய்தி
எழில்பரத் தெட்டத் தூதர்
பொம்மென வெழுந்தி றைக்குப்
புதுத்துதி செலுத்து வாரே.

கட்டளைக் கலித்துறை

285 துதித்தலே யின்பமு மேற்றது மாகும் நந்தூயிறைக்கு
விதித்தலே தீபம் மறையே வெளிச்சம் விரும்பியகம்
பதித்தலே ஞானம் செயலே மகிழ்ச்சி பரமனன்பிற்
கதித்தலே மேன்மை விசுவாசம் மாசெயங் காட்டிடுமே.

286 விசுவாச நீதி பரலோக வாகனம் மேன்மையொளிர்
விசுவாச நீதிநம் பாவவி மோசனம் மிக்கநன்மெய்
விசுவாச நீதிமா நித்திய மீட்புயர் வெற்றிதரும்
விசுவாச நீதியே பேரின்ப வாழ்வுசேர் மேதினியே!

கடவுளோடு நீ சரி நிகராய் நிற்பாயோ? என்றவாறு. கடவுளர்மாலையில் வண்டுகள் மருவுதல் இல்லை என்பது இலக்கிய மரபு. கருவாக்கினன்—(நடுத்தீர்ப்பு நாளில்) கண்டிப்பு மொழி பகர்பவன்.

284 கம், கொம், இம், பொம் இவை இசைக் குறிப் பிடைச்சொற்கள். கனநரர் — மக்கட்கூட்டம். குலகுரு வாவி— திருச்சபை. கன நரர் திரும்பக் கம்மென வாசம் வீசிப் போதம் கொம்மென விளங்க நிற்பாய்; இம் மென இந் நற்செய்தி குருகுல வாவி தாவி எழில் பரத்து எட்ட, தூதர் மொம்மென எழுந்து இறைக் குப் புதுத்துதி செலுத்துவாரே என முடிக்க.

285 கதித்தல்—மேலோங்குதல். செயம்—வெற்றி.

286 விமோசனம்—கழுவாய்; நிவிர்த்தி. இதுவும் அடுத்த கவியும் விசுவாச மேம்பாடுரைக்கின்றன.

அறுசீர் விருத்தம்

287 விசுவாசம் உழவு நன்முயற்சி
விசுவாசம் வாணிப ஊக்கம்
விசுவாசம் கல்வியின் முயல்வு
விசுவாசங் குடுமபவா தரிப்பு
விசுவாசம் கைத்தொழி லியற்றல்
விசுவாசஞ் சேவகா விருத்தி
விசுவாசம் ஈடேறும் மார்க்கம்
விசுவாசஞ் சருவசா தனமே.

கட்டளைக் கலித்துறை

288 தனமே பெரிதெனப் பாவித்துச்
சாகுந் தருணமட்டும்
மனமே யதனில் மயங்கி
யுழல்தல் மதிக்குறைவாம்
கனமே யுனக்குப் பெருக
வுண்டாகுங் கதியிலெண்ணம்
தினமே பொருத்தி யொழுகுவை
தேவனுன் செல்விகையே.

நேரிசை வெண்பா

289 ஏவாள் குலக்கொழுந்தா யிங்குற்ற சற்குருவைப
பாவாள் மனந்திரும்பிப் பற்றுகையில்—தேவாள்
படிப்பார் திருப்புகழைப் பத்திவிந யத்தால்
நடிப்பார் அதிமகிழ்வி னுல்.

எழுசீர் விருத்தம்

290 நாலா திசையும் நிறைந்த பரனை
ஞான மின்றி யருவுருப்பார்
மாலா னிறைந்து தீட்டா முருவ
வணக்கத் தாலே தேடுபவர்

287 சாதனம்—கருவி.

288 மதி—புத்தி; அறிவு. கனம்—மேன்மை. கதி—மேற்கதி வாழ்வு.

289 பாவ + ஆள்—பாவாள்; தேவ + ஆள்—தேவாள்; வடமொழிப் புணர்ச்சிகள்.

290 மால்—மயக்க அறிவு; அறியாமை. தீட்டு—

கோலா கலமெல் லாம்பொய்; மனதைக்
குருடாய்ப் போட்டுத் திகைப்பர் பின்னுள்
ஆலா லம்மென் றந்த வணக்கம்
அகற்றி னேரே பதியடைவார்.

அறுசீர் விருத்தம்

291 வாதா டாதே மெய்ஞ்ஞானம்
வாரா ஏதனுற் சிரவணஞ்செய்
கோதாஞ் சுயநீ தியையெற்று
குலவுந் தேவ நீதிபற்று
ஆதா ரத்தை வாசிசதா
அமர்ந்து சிந்தி பிரார்த்தனைசெய்
தீதா மெதையுந் தினநன்மை
செய்து வெல்சேர் புகல்கிறித்தே.

கட்டளைக் கலித்துறை

292 கிறித்து சமயமே மானிட ருய்யக் கிடைத்தவழி
கிறித்து சமய மறைதரு தேவன் கிழமைபொது
கிறித்து சமயத் தவரே சிறந்த கதிவுடையோர்
கிறித்து சமயத்தில் சேருமி னுயுள் கெடாமுனமே.

இழிவால் ஒதுக்கப்படுவது. கோலாகலம்—கூக்குரல். ஆலாலம்—விடம்.

291 சிரவணஞ்செய்—கேள். கோது—குற்றம். எற்று—தள்ளு. ஆதாரம்—அடிப்படை நூல்; விவிலியம். பிரார்த்தனை—செபம். தீதாம் எதையுந் தினம் நன்மை செய்து வெல் என்றது. தீமையை நன்மையால் வெல் என்றவாறு. வள்ளுவர்

'இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்'

என்றார்; இவ்வாசிரியர் தினம் நன்மை செய்து வெல் என்கிறார்.

292 தேவன் கிழமை—கடவுள் உரிமை.

வஞ்சித்துறை

293 முனமே மொழிவிதம்
கனமே கனிந்தருள்
மனமே மல்குவான்
தினமே சிந்தியே.

நேரிசை வெண்பா

294 சிந்தி யருமைச் சிலுவை திருநிழலை
சந்தி பகலந்தி தன்னிலும்—முந்தி
பெரியான் நம்துமேற் பேரன்பு கொண்டான்
உரியான் முழுப்பரிவிற் கும்.

295 முழுமையும் மாதேவன் முன்வைகா ணிக்கை
கொழுமையும் நற்சுகமுங் கூடும்—செழுமையும்
சேரும வலியும் சிறந்தமா ராட்சியமும்
நேரும் இறைக்கே நிதம்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

296 நிதமும் துணிவாய்ப் போராடு
நிசல னியேசுன் தளகர்த்தன்
சதமும் சுகமும் அலவுலகம்
சாரேல் மாய்கை வெறுத்துலகில்
இதமும் கேடுஞ் சமமாக்கி
எங்கும் கூறு திருப்போதம்
பதமும் விழிப்பும் பிசகாமல்
பலத்துப் பொருந்து மறை நெறியே.

---

293 முனமே—முன்னமே; இடைக்குறை விகாரம். விதம்—முறைப்படி. கனம்—மிகுதி.

294 சந்தி பகல் அந்தி—முப்போது.

295 முழுமையும் மாதேவன்முன் இறைக்கே காணிக்கை வை என முடிக்க.

296 நிசலன்—நித்தியன். அல—அல்லாத. இதம்—நலம். திருப்போதம்—மெய்ஞ்ஞானம். பதமும் விழிப்பும்—காலும் கண்ணும்.

எழுசீர் ஆசிரிய விருத்தம்

297 பொருந்தி யேசுமெய்ப் பாகனு லருட்டளை
பூட்டி ஐமபுலப் பாய்மா
வருந்தி யோடிக்கே டடைந்திடா தமர்த்தினன்
வாழ்வான் உயர்கதி சேர்ந்து
திருந்தி யிங்ஙனம் அன்றிவே றிதங்களில்
சேரச் செருக்குட னிற்றல்
பருந்தி ரக்கையில் வானள வககினிப்
பறம்பு கடக்குத லாமே.

எண்சீர் ஆகிரிய விருத்தம்

298 கடவாத மனமருளி னுலே கூடும்
கருத்தொடுங்கிச் செபஞ்செய் தோனடை வானத்தை
மடவாத மொருபயனுங் கொடுக்கா தன்பால்
மனந் திரும்பிக் கனிகொடுத்தால் மகிமை யாகும்
நடவாத வழிகாட்டு வோரோ டென்ன
நட்பு? கிறித் தேசுகுரு நளினச் செங்கால்
கெடவாத மிடுகுதர்க்கர் துறந்து பற்று
கேடில்லை சாசுவதா னந்த மாமே.

299 மேலான மெய்ஞ்ஞான மாலை தன்னை
விருப்பமொடு வேதமொத்துத் தெளியக் கற்றோர்
மாலான தறவுந்தேய்ந் தமல மான
வழிசெலுவார் தூயாவி துணையைப் பெற்று

---

297 (மறைநெறி) பொருந்தி, ஐம்புலப் பாய்மா இயேசு மெய்ப் பாகனல் அருட்டளை பூட்டி, வருத்தி, ஓடி, கேடடைந்திடாது அமர்த்தினன், உயர்கதி சேர்ந்து திருந்தி வாழ்வான்; இங்ஙனமன்றி, வேறு இதங்களில் (உறுதிப் பொருள்களில்) செருக்குடன் சேர (பொருந்த) நிற்றல், பருந்து ரக்கையில் வான் அளவு அக்கினிப் பறம்பு கடக்குதலாம் என முடிக்க. முன்னிரு அடிகளில் **உருவகஅணியும்**, பின் இரு அடிகளில் **உவமைஅணியும்** பயின்றுள்ளமை காண்க. ஐம்புலன்—ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஒலி என்பன.

298 அத்தை—அதை. மடவாதம்—அறிவற்ற குதர்க்க வாதம். நளினம்—இன்மை; இங்கிதம். சாசுவதானந்தம்—நித்திய மகிழ்ச்சி.

299 மாலானது—அறியாமையானது. அறவும்—முழு

காலான தசையாதிப் பாவஞ் செய்யக்
கதித்தோடுங் காருணிய செயல்க ளாக்க
சேலான துயிரோடு நீரோட் டத்தில்
சென்றெதிரே செல்வதுபோற் பரஞ் சேர்வாரே.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

300 பரம பிதாச்சுதன் ஆவிநம்
பரிசுத் தம்முரை வேதம்வாழி
திரம தாய்ச்சபை சுத்தர்வாழி
செழிக்கும் மிசியன்சங் கங்கள்வாழி
உரம துடன்குரு மார்கள்வாழி
உற்ற இறைவருத் தியோகர்வாழி
சிரம மெடுபுல வோர்வாழி
தேசங் குடிகளெல் லாம்வாழியே.

வேறு

301 வாழி யேசுவடி ஐயா
வாழி யுலகப் பற்றற்றோர்
வாழி யறிவு புகட்டுபவர்
வாழி ஞானம் பகருபவர்
வாழி நன்மைக் கபிமானர்
வாழி வேத வியார்த்திகர்
வாழி திட்டு ரடிமைகவி
வாழி அல்லே லூயா! ஓம்.

302 ஓமி யேசு கிறித்துகுரு
உரைமெய்ஞ் ஞானம் மிகநிலைக்கும்
ஓமி யேசு கிறித்துகுரு
ஒழுகி விளக்கு வழிநடமின்

[ஓம்—ஆம்—ஆமென்—என்றும்; அப்படியாகக்கடவது]

தும். அமல—தூய. காலான—மூலகாரணமான. சேல்—மீன். இது இந்நூலுணர்ந்தார் பெறும் பலனுரைக்கின்றது.

300 வாழ்த்துரைக்கின்றது.

301 யேசுவடியான் ஐயர்—தேசிகரின் போதகப் பிதா. இதுவும் வாழ்த்துரைக்கின்றது.

302 இது கிறித்து துதி.

ஓமி யேசு கிறித்துகுரு
உலகாள நாள்சீக் கிரம்வருதும்
ஓமி யேசு கிறித்துகுரு
ஒண்டி னேரே வாழ்குவரே.

வஞ்சித்துறை

303 வாழி வாழி சத்தியம்
வாழி வாழி தாசர்கள்
வாழி வாழி சிற்சபை
வாழி வாழி முற்றுமே.

---

303 இது மெய் அடியார் சபை வாழ்த்தும் முடிப்பும்.

மெய்ஞ்ஞான மாலை முற்றிற்று.

O6:417
N68

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 110674
EGMORE

Copies can be had from:

1. **Diocesan Book Depot**
   Nagercoil-1.

2. **Diocesan Book Depot**
   Palayamkottai.

3. **Good Book Shop**
   Madurai-2.

4. **C.L.S. Book Depot**
   Park Town, Madras-3.